விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 20 ஞாயிற்றுக்கிழமை (06.09.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 261

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.


ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392

# த.தே.கூட்டமைப்பை தோற்கடிக்க வடக்கு முதலமைச்சர் செயற்பட்டார்

## வவுனியாவில் மாவை சேனாதி முழக்கம்

(வவுனியா)

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையை ஆதரிக்கிறேன் என்று கூறுவதற்கு பதிலாக தேர்தல் அறிக்கைக்கு மாறான கருத்தையே தெரிவித்திருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோற்கடிக்கப்பட வேண்டும் என்ற வகையில் அவரின் கருத்து அமைந்திருந்தது. ஆனால் இவற்றையெல்லாம் மீறி தமிழ் மக்கள் மிகப் பெருவாரியாக வெற்றியை தந்துள்ளார்கள் என தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார். (04ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச விசாரணையைக் கோரி தொடர் கையெழுத்து போராட்டம்

### பல இடங்களில் ஏற்பாடுகள் தீவிரம்


(யாழ்ப்பாணம்).

இலங்கையில் இடம்பெற்ற சர்வதேச மனிதாபிமான மற்றும் மனிதவுரிமை சட்ட மீறல்களை புரிந்தோருக்கு எதிராக சர்வதேச குற்றவியல் செயன்முறைப் பொறிமுறையொன்றினை ஏற்படுத்தக் கோரி இன்றைய தினமும் யாழ் மாவட்டத்தின் பல இடங்களில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் நேற்று மாலை நான்கு மணியளவில் மாபெரும் கையெழுத்து போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதனை சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டுக் குழு ஏற்பாடு செய்திருந்தது. இப் போராட்டம் 15 ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச விசாரணைக்கு இனியாவது முன்வாருங்கள்

### தமிழரின் எதிர்பார்ப்பு அதுவே – யாழ்.ஆயர்



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச விசாரணையை முன்னெடுக்க ஐக்கிய நாடுகள் சபை இனியாவது முன்வர வேண்டும், அத்துடன் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் இந்த விசாரணைக்கு இலங்கை அரசும் ஒத்துழைப்பு வழங்குவது மிகவும் 15 ஆம் பக்கம் பார்க்க....

## 1990-ல் கிழக்கு அகதி முகாமிலிருந்து காணாமல்போன 158 தமிழர்கள் !

### 25 ஆண்டுகள் கடந்தும் உறவுகள் பரிதவிப்பு

(கொழும்பு)


1990-ம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அமைந்திருந்த அகதிகள்முகாமில்தஞ்ச மடைந்திருந்த தமிழர்களில் 158 பேர் இராணுவ சுற்றிவளைப்பின் பின்னர் காணாமல் போன சம்பவத்தின் 25-ம் ஆண்டு நிறைவை அவர்களின் உறவினர்கள் நேற்று சனிக்கிழமை நினைவு கூர்ந்துள்ளனர்.




1990-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஐந்தாம் திகதி கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அகதிமுகாமில் சுமார் 45 ஆயிரம் தமிழர்கள் தஞ்சமடைந்திருந்ததாக முகாமை நிர்வகித்த பல்கலைக்கழக சமூகம் கூறுகின்றது.

அவ்வேளை இராணுவத்தினரால பஸ் வண்டிகளில் அழைத்துச் செல்லப்பட்டதாக 16 ஆம் பக்கம் பார்க்க....

## தென்னாபிரிக்க ஜனாதிபதியுடன் பிரதமர் ரணில் சந்திப்பு



(கொழும்பு)

தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமாவைச் சந்தித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடியுள்ளார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இந்த சந்திப்பு இடம்பெற்றதாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தனது ருவிட 15 ஆம் பக்கம் பார்க்க....

## அமைச்சர்களின் அதிகரிப்புக்கு பதவி ஆசையே காரணம் - மனோ

(கொழும்பு)

பதவி ஆசை கொண்டவர்களாலேயே அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய தேவை புதிய அரசாங்கத்துக்கு ஏற்பட்டதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற புதிய அமைச்சரவையின் 42 அமைச்சர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டனர்.

இந்நிலையில், இந்தப் பதவியேற்பு நிகழ்வு தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் குறிப்பிடுகையில், அமைச்சுப் பொறுப்புக்களை பகிர்ந்து கொள்வது தொடர்பில் இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தைகளே புதிய 15 ஆம் பக்கம் பார்க்க....

## மாடியிலிருந்து வீழ்ந்த குடும்பஸ்தர் மரணம்

(கொழும்பு)

40 அடி உயரமான தொடர் மாடியில் இருந்து தவறிவீழ்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ள சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை குருநகர் தொடர்மாடி வீட்டுத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில் 3 பிள்ளைகளின் தந்தையான மரியதாஸ் - பிரினசன் (வயது 33) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சம்பவத்தன்று மாலை 6.45 மணியளவில் மேற்படி குடியிருப்பில தனியாக 15 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிவாஜி அண்ணனுக்கு என் பாராட்டுக்கள்



**M.K சிவாஜிலிங்கம்**

01-09-2015 அன்று மாகாண சபையில் தனித்து நின்று எமக்காக போராட்டம் நடத்திய M.K சிவாஜிலிங்கம் அவர்களின் சேவை எம் தமிழ் மக்களுக்கு தேவை என்பதோடு கடந்த மாகாண சபைத் தேர்தலில் அவருக்கு வாக்கு அளித்ததையிட்டு இன்று மகிழ்ச்சியடைகின்றேன். (1685)

**S.அருள்ராஜ்**



## GNANI MUSICALS

பியானோ, வீணை உட்பட அனைத்து இசைகருவிகள் திருத்துதல், விற்பனை
071 777 5757
077 923 8376
403, மணிக்கூட்டு கோபுர வீதி யாழ்ப்பாணம். (C-2051)



## விற்பனைக்கு

தொட்டிலடிச் சந்திக்கு அருகாமையில் கீரிமலை வீதியில் 18 பரப்பு காணி வீடு கட்டவும், தோட்டம் செய்யவும் உகந்தது. பகுதியாகவும் விற்பனைக்குண்டு. (1657)

தொடர்பு : 0779788635


## விபத்துக்குள்ளான நபர் சிகிச்சை பலனின்றி மரணம்


File

(யாழ்ப்பாணம்)

சைக்கிள் - தனியார் பஸ் விபத்துக்குள்ளானதில் படுகாயமுற்ற நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மதியம் சேர்க்கப்பட்டவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்றுச் சனிக்கிழமை மரணமானார்.

நேற்று முன்தினம் மதியம் பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு சந்திக்கு அண்மையாக இடம்பெற்ற விபத்தில் சைக்கிளில் சென்ற உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த மாசிலாமணி டேவிட் ராஜா (வயது 62) என்பவர் படுகாயமுற்ற நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தார்.

சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று மரணம் அடைந்தார். இவருடைய மரண விசாரணையை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டதைத் தொடர்ந்து சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸார் சாரதியைக் கைது செய்துள்ளதுடன் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (செ-5)


## டயானா பிளாஸ்ரிக் மீள் சுழற்சி

சகல விதமான உடைந்த பிளாஸ்ரிக் போன்றவை உத்தரவாதத்துடன் ஒட்டிக் கொடுக்கப்படும்.
* பழைய பிளாஸ்ரிக் விலைக்கு வாங்கப்படும். (1572)

108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
T.P 077 5925088, 021 222 8680



## தேவை

மிக மிக அனுபவமுடைய மேசன், சட்டறிங் கூலி வேலை ஆட்கள் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். (1671)

தொடர்புகளுக்கு : 0777302343


## மரண அறிவித்தல்

### திருமதி சுதந்திரன் செல்வமாணிக்கம்



துன்னாலை மேற்கு கரவெட்டியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுதந்திரன் செல்வமாணிக்கம் நேற்று (05.09. 2015) சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் அருணாசலம் சுதந்திரனின் அன்பு மனைவியும் காண்டீபன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), பிரதீபன் (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா), கவிதா (அவுஸ்திரேலியா), சுதாகரன் (ஆசிரியர் - யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், துளஷிதாசன் (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா), கவிதா (சிங்கப்பூர்), தபோநிதி (அவுஸ்திரேலியா), ரேவிகா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - பளை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கோபிராம், வாகீஸ், பாசபன், கீர்த்திகன், ஹர்ஷிகா, பவித்திரன், பவிஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரோண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.
(சி-2052)
தொ.பே : 0777250872

## இனவாதத்தை பரப்ப முயற்சி - அர்ஜுன

(கொழும்பு)

நாட்டின் பிரதான கட்சிகள் இரண்டு ஒன்றாக இணைந்து நாட்டில் நல்லாட்சியை பாதுகாப்பதற்கு மேற கொண்டிருக்கும் முயற்சி மிகவும் பெறுமதியானதென துறைமுகங்கள் மற்றும் கப்பல போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எனினும் இன்னமும் சில தரப்புகள் இனவாதத்தை பரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவதானமாக செயற்பட வேண்டும் எனவும், குறித்த சிலர் மீண்டும் அதிகாரத்துக்கு வருதற்காக பெரிய அளவிலான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். (செ-12)


## Walk an Interview

**Female Receptionist**

Need female staff for front office.

**Qualifications**

* G.C.E A/L Pass
* Excellent interpersonal skills
* Good command in both English and Singala languages.
* working Knowledge in computer.

Salary : Negotiable
Venue : Pillaiyar Inn, 31, Manipay Road, Jaffna.
Date : September 10th & 11th
Time : 10.00 am - 4.00 pm
Contact : 021 222 2829 (1695)



## மனோதத்துவ வைத்தியம்

மனோதத்துவ நிபுணர் (General Psyohotheraphy)

**Dr.P.ஆறுமுகம்**



T.P :- 0777 569 205

06.09.2015 முதல் 13.09.2015 வரை
8 நாட்கள் மட்டுமே இருப்பார்
பதிவுக் கட்டணம் ரூபா 300/=

மீண்டும் யாழில்

ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் பலருக்கு குழந்தைகிடைத்தமைக்கு எம்மிடம் ஆதாரங்கள் உண்டு.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறப்பில் ஆண்மைக்குறைவை தவிர) எந்தமோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் மிகத்திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம்.

ஆரம்ப மனநோய், நீரிழிவு நோய், ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், தலையிடி, முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு இயற்கை மூலிகை மருந்துகன் மூலம் சிகிச்சை.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளை திருத்தி வாழ்வில் வெற்றிபெற (C-2035)

இவை அனைத்துக்கும் மனோ தத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

**நாதன் இன்**

(பழைய கமல் டொச்) 392 / A மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(சிவதர்சன் எலற்றிக்கல் கடைக்கு அருகில்) பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்.





## உணவுத் தேவையை பூர்த்தி செய்வதற்கு ஆச்சி ஹொட் பூட் நிறுவனத்தை தெரிவு செய்வதற்கான காரணங்கள்

அண்மையில் கைதடியில் இயங்கி வரும் ஆச்சி ஹொட் பூட் நிறுவனத்திற்கு செல்வதற்கு எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. ஒரு வருட காலத்துக்கு மேலாக நான் இந் நிறுவனத்தின் வாடிக்கையாளராக இருந்து வருகின்றேன். நான் மதிய உணவை ஆச்சி ஹொட் நிறுவனத்திடமிருந்தே அதிகமான நாட்களுக்கு பெற்று வருகிறேன். இங்கு சமையலறையானது மிகவும் சுத்தமாகவும், சுகாதார அனுமதியுடனும் அமைக்கப்பட்டு உணவானது சுவையாகவும், யாழ்ப்பாணத்து பாரம்பரிய சமையல் சுவைகளை கொண்டும் தயாரிக்கப்படுகிறது. மிகவும் குறைந்த விலையில் உணவு, விற்பனை செய்யப்படுகிறது. சைவ, அசைவ வேறுபாடுகளுக்கேற்ப உணவானது தனித்தனி பகுதிகளில் தயார் செய்யப்படுவது ஆச்சரியமே! இதைவிட உணவானது மரக்கறி, மீன், இறைச்சி என பல விதங்களாக உடனுக்குடன் பெறப்பட்ட உள்ளீட்டு பொருட்களை கொண்டு சமைக்கப்படுகிறது.

இவற்றையெல்லாம் நான் நேரில் அவதானித்து வியந்தேன். நான் வாடிக்கையாளர் என்ற ரீதியில் ஆச்சி ஹொட் பூட் நிறுவனத்தின் சிறப்பை எடுத்து சொல்வதில் மகிழ்வடைகிறேன்.

Mr. பரமானந்தன்
மானிப்பாய். (C-2043)



## WORLD WIDE EXPRESS & TRAVELS

அனுப்பும் பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு

* வெளிநாட்டு/ உள்நாட்டு துரித தபால் பொதிகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சேவை.
* அனுப்பும் பொதிகளுக்கான பாதுகாப்பு மற்றும் காப்புறுதி உத்தரவாதம் (உங்கள் வீட்டில் இருந்தவாறு அனுப்பும் வசதி)
* சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள் ( AirTicket) மீள் உறுதிப்படுத்தல், திகதி மாற்றம் (Date Change) செய்து கொள்ளலாம்.
* கடல் /ஆகாய மார்க்க பெரிய பொதிகள் மற்றும் கார்கோ சேவை (Bulk Cargo)



சி.என்.ஆர். எக்ஸ்பிரஸ் பொதிகள் சேவை
401, Clock Tower Road, Jaffna. (பெருமாள் கோவில் அருகில்) அழையுங்கள்: 077 293 1062 (C-2050)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டு விசாரணைக்கு எதிராக தமிழக சட்ட சபையில் தீர்மானம்!

## வைகோ வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில்

**ழக சட்டசபையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும் என மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளர் வை.கோபாலசுவாமி கோரிக்கை விடுத்துள்ளார்**

இந்த யோசனை நிறைவேற்றப்படுமானால் அதற்கு ஆதரவு அளிக்கும் முதல் ஆளாக இருப்பேன் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையே அவசியம் என்றும் அவர் பள்ளடம் என்ற இடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போது குறிப்பிட்டுள்ளதாக த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

## ஏனைய அமைச்சர்களுக்கான நியமனம் செவ்வாய்க்கிழமை


(கொழும்பு)

ஏனைய அமைச்சர்களுக்கான நியமன நிகழ்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

அமைச்சர்கள் பிரதி அமைச்சர்கள் மற்றும் ராஜாங்க அமைச்சர்களுக்கான நியமனங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற பதவிப் பிரமாண நிகழ்வில் 42 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர்.

ஏனைய அமைச்சர்கள் மற்றும் பிரதி ராஜாங்க அமைச்சர்களுக்கான பதவிப் பிரமாண நிகழவு எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)



ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெளிவிவகார அமைச்சர் ஷேக் அப்துல்லா பின் ஷெயிட் அல் அன்ஹியன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தார்.

## அமைச்சர் பதவி கிடைக்குமென நான் அறிந்திருக்கவேயில்லை

### தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவி ஒன்று தனக்கு கிடைக்கும் என தான் முதலில் அறிந்திருக்கவில்லை என விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

முற்பகல் 11.30 அளவில் தொலைபேசியில் அழைத்து கூறும் போதே எனக்கு அமைச்சர் பதவி வழங்கப்படுவதை அறிந்து கொண்டேன். எனினும் எந்த அமைச்சர் பதவி என்பது எனக்கு தெரியாது என மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்த தயாசிறி ஜயசேகர, ஒரு காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை கடுமையாக விமர்சித்தார்.

பின்னர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து வடமேல் மாகாண முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டார்.

இந்த நிலையில், புதிய அரசாங்கத்தில் பெரும்பான்மை பலத்தை கொண்டிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து எப்படி பணியாற்ற போகிறீர்கள் என எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த தயாசிறி ஜயசேகர,

தனக்கு எவருடனும் தனிப்பட்ட பிரச்சினைகள் இல்லை என்பதால், பேதங்கள் இன்றி செயற்பட எதிர்பார்த்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ளதாக சிறிது காலம் துறைபற்றி ஆராய்ந்து, விளையாடுபவர்களிடம் விளையாட்டுத்துறை பணிகளை ஒப்படைத்து விட்டு, அமைச்சராக பணியாற்ற போவதாகவும் தயாசிறி ஜயசேகர மேலும் தெரிவித்தார். (இ-7)

## மகிழ்ச்சியளிக்கிறது; சோமவன்ச பாராட்டு

எதிர்க்கட்சி தலைவர் பதவியை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தனுக்கு வழங்கியமை மகிழ்ச்சி அளிக்கின்றது என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஒன்றாக இணைந்து எடுத்த இந்த தீர்மானம் நாட்டின் ஜனநாயகத்தின் எதிர்கால பயணத்துக்கு சிறந்ததொரு ஆரம்பமாகும். சபாநாயகர் உறுதியாக இருந்து இந்த தீர்மானத்தை எடுத்ததையிட்டு அவருக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தங்களுக்கு கிடைத்துள்ள இந்த எதிர்க்கட்சி தலைவர் பதவியை நாட்டின் நன்மைக்கான தீர்மானங்களை எடுப்பதற்கு உபயோகிக்க வேண்டும். மாறாக நாட்டை பிரிப்பதற்கு மற்றும் இலங்கை தொடர்பில் பிழையான எண்ணத்தை சர்வதேசத்துக்கு கொண்டு செல்வதற்கு பிரயோகிக்கக் கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## தாயும் குழந்தையும் வாகன விபத்தில் பலி

ஹிக்கடுவ, தொடன்துவ பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் தாய் மற்றும் குழந்தை உயிரிழந்துள்ளனர். குறித்த விபத்து நேற்று முன்தினம் இரவு நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் இருந்து காலி நோக்கி பயணித்த வான் ஒன்று எதிர்ப்பக்கத்தில் வந்த ஆட்டோவுடன் நேருக்கு நேர் மோதியதினாலே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்தில் ஆட்டோ சாரதி, மூன்று பெண்கள் மற்றும் சிறு குழந்தை ஒன்று காயமடைந்து கராப்பிட்டிய மற்றும் பலபிட்டிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். எனினும் சிகிச்சை பலனின்றி பெண் மற்றும் குழந்தை உயிரிழந்துள்ளனர். (இ-7)

## போதைப்பொருள் கடத்தல் வழக்கு

## மலேசியத் தமிழருக்கு மரணதண்டனை தீர்ப்பு

இலங்கைக்குள் போதைப்பொருள் கடத்தி வந்த வழக்கில் மலேசியத் தமிழர் ஒருவருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

மலேசியாவைச் சேர்ந்த தமிழரான ராஜு கருப்பன் என்பவர் கடந்த 1999ம் ஆண்டு இலங்கை வந்திருந்தபோது ஐந்தரைக் கிலோ போதைப் பொருளுடன் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டிருந்தார்.

அதன் பின்னர் பிணையில் வெளிவந்த அவர், நீர்கொழும்பு தனியார்வைத்தியசாலையொன்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட போலி மரண சான்றிதழ் ஒன்றை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து விட்டு சந்தேக நபர் இலங்கையை விட்டு தப்பிச் சென்றிருந்தார்.

எனினும் மரண சான்றிதழ் போலியானது என்று கண்டறியப்பட்டதன் பின்னர் சந்தேக நபர் இல்லாமலேயே குறித்த வழக்கு தொடர்ந்தும் விசாரிக்கப்பட்டது. விசாரணை முடிவில் சந்தேக நபருக்கு மரண தண்டனை விதித்து நீதிபதி நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளார்.

மேலும் தற்போது தலைமறைவாகவுள்ள ராஜு கருப்பனை கண்டுபிடித்து கைது செய்ய சர்வதேச பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## நாடாளுமன்ற அமர்வில் பிரசன்னமாகாத உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை

### பிரதமர் ரணில் அறிவிப்பு

நாடாளுமன்ற அமர்வுகளில் பிரசன்னமாகாத உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். நாடாளுமன்ற அமர்வுகள் நடைபெறும் தினங்களில் சபையில் பிரசன்னமாகாத உறுப்பினர்கள் தொடர்பில் கண்காணிக்கப்படும்.

அவ்வாறு பிரசன்னமாகாத உறுப்பினர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு, சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் பிரதமர் கோரியுள்ளார்.

நாடாளுமன்ற அமர்வுகளில் அமைச்சர்கள் பிரசன்னமாகத் தவறினால் அது குறித்து சபாநாயகருக்கும், ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளரிடமும் எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.

எதிர்க்கட்சியின் உறுப்பினர்களும் பிரசன்னமாகத் தவறினால் அது குறித்து சபாநாயகருக்கு அறிவித்தல் மிகவும் பொருத்தமானது.

நாட்டை முன்னோக்கி நகர்த்த, நாடாளுமன்றை வலுவானதாக மாற்ற வேண்டும். அதற்கு உறுப்பினர்கள் அமர்வுகளில் பிரசன்னமாவது மிகவும் அவசியமானது என பிரதமர், சபாநாயகரிடம் தெரிவித்துள்ளதாக கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# த.தே.கூட்டமைப்பை...

வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரை வரவேற்கும் நிகழ்வு வவுனியா தமிழரசுக் கட்சியின் தாயகம் அலுவலகத்தில் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்.

சென்ற ஆண்டு மனித உரிமை பேரவை கூட்டம் ஒன்றில் பெண்களை பற்றி அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள். போர் நடந்த காலத்திலும் போருக்கு பின்னரான காலத்திலும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளமையால் எமது பெண்களுக்கு நடத்தப்பட்ட கொடுமைகள் பாதுகாப்பு விடயங்கள் பற்றி சாட்சியங்களுடன் ஐ.நாவில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பது போல் பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் தொடர்பாகவும் விசாரணை நடத்தப்படவேண்டும் என்ற பிரேரணையை ஒரு வல்லாண்மைமிக்க நாட்டின் உதவியோடு அந்த சபையில் கொண்டு வர முடியும்.

நவநீதம்பிள்ளை இந்த பிரேரணையை நிறைவேற்றும் பொருட்டு இலங்கைக்கு வந்ததை நீங்கள் அறிவீர்கள். மகிந்த அவரை காலடி எடுத்து வைக்க விடமாட்டேன் என்றார். ஆனால் அவர் வந்தார். அரை மணி நேரமே தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் சந்திப் பதற்கு நேரம் ஒதுக்கப்பட்டது. ஆனால் ஒன்றரை மணி நேரம் பூட்டிய அறையில் பல விடயங்களை நாம் பேசியிருந்தோம்.

அவருடைய ஆவல் பெண்கள் எவ்வளவு தூரம் அவலப்பட்டுள்ளார்கள் என்ற விடயத்தை பதிவு செய்ய விரும்பவதாகவும் அப்படிப்பட்ட பெண்களை அழைத்து வருமாறும் கோரியிருந்தார். ஆனால் எமது பெண்கள் பயப்பட்டார்கள்.

இதேவேளை இன்று அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற தமிழர்களினுடைய நிலங்கள் தொடர்பாகவும் பிரேரணையை நாம் சமர்ப்பிக்கலாம். இதேவேளை அழிக்கப்படுகின்ற இனம் என்ற ரீதியிலும் நாம் ஒரு பிரேரணையை ஐ.நாவில் கொண்டுவரலாம். இதற்கான வேலைகள் மிக அதிகமாகும். ஆளுமையும் ஆற்றலும் கொண்டவர்கள் இதில் பணியாற்ற வேண்டியுள்ளது.

இதனை விடுத்து வெறுமனே பத்திரிகை அறிக்கை விட்டுக்கொண்டு இருப்பவர்களை நாம் பார்த்திருக்கின்றோம். இன்று போர்க்குற்ற விசாரணை தொடர்பான ஆரம்பத்தை தெரிந்துகொள்ளாத பலர் அறிக்கை விட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த போர்க்குற்ற விசாரணை சர்வதேச விசாரணையாக இருக்க வேண்டும் என்று 2011 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரைக்கும் அமெரிக்க இராஜாங்க அமைச்சால் அழைத்ததன் அடிப்படையில் அங்குள்ள 24 அங்கங்களுடன் பேசி இறுதியாக 27ஆம் திகதி நண்பகலுக்கு பிறகு உதவி இராஜாங்க செயலாளரின் தலைமையில் கூடிய கூட்டத்தில் சம்பந்தர் உரையாற்றியிருந்தார். அதன் பின்னர் இப்படிப்பட்ட தலைவரை நீங்கள் பெற்றது பாக்கியம் என்று கூறினார் உதவி இராஜாங்க அமைச்சர்.

நாங்கள் சர்வதேச விசாரணையே தேவை என்று தீர்மானத்துக்கு வந்து விட்டோம் எனவும் தெரிவித்திருந்தார். அதன் பின்னர் 2012, 2013, 2014ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டு இன்று தீர்க்கமான கட்டத்தை அடைந்துள்ளது.

சர்வதேச விசாரணைதான் அங்கு நடைபெற்றுள்ளது. அந்த தீர்மானத்தில் உண்மைகள் வெளிக்கொண்டு வரப்படுகின்றது. ஏன் இந்த போர் ஏற்பட்டது. அந்த போரில் ஏன் குற்றங்கள் இழைக்கப்பட்டன. மனித உரிமை மீறல்கள் எவ்வளவு தூரம் மீறப்பட்டுள்ளன. போர் விதிமுறைகளை ராஜபக்ஷ அரசாங்கம் எவ்வளவு தூரம் மீறியுள்ளது என்று சாட்சியங்களில் அடிப்படையில் ஆராயப்பட்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆனால் தற்போது சிலர் தெரிந்தும் தெரியாமலும், தெரிந்தும் படிக்காமலும் இனித்தான் விசாரணை ஆரம்பிக்கப்படவேண்டும் என கூறுகின்றார்கள். ஆனால் அது உண்மை அல்ல. அந்த பிரேரணை நிறைவேற்றப்பட்டு விட்டது. இனி அந்த பிரேரணை செப்ரெம்பர் மாதம் அதற்கான நடவடிக்கைகள் என்னவாக இருக்க வேண்டும். என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்ற பதில்தான் நிறுவப்பட வேண்டியதாகவுள்ளது.

மற்றும் உள்ளக விசாரணையைப் பற்றி பேசுகின்றார்கள். அது நாம் விரும்பி கேட்ட ஒன்று அல்ல. தற்போது அமைச்சராக இருக்கின்ற மகிந்த சமரசிங்க, நவநீதம்பிள்ளை பிரேரணை சமர்ப்பித்தபோது அந்த சபையில் 40 நிமிடங்களுக்கு மேல் பேசினார். முழுவதும் உண்மைக்கு மாறான விடயங்களை பேசினார்.

உடனடியாக அங்கிருந்த இராஜதந்திரிகள் ஊடாகவும் அங்கிருந்த எமது வழக்கறிஞர்கள் ஊடாகவும் எங்களுக்கு ஒரு செய்தி தரப்பட்டது. அதாவது இவ்வாறு மகிந்த சமரசிங்க பேசியுள்ளார். நீங்கள் 24 மணி நேரத்தில் பதில் தரவேண்டும் என.

நாங்கள் 19ஆவது மணி நேரத்தில் 14 பக்கத்தில் தெளிவான அறிக்கையை அனுப்பியிருந்தோம். அதற்கு பாராட்டு தெரிவித்திருந்தார்கள். பகிரங்கமாக சொன்னார்கள்.

அதன் பின்னர் அவ் அறிக்கை மீது விவாதங்கள் ஏற்படுத்திய போது இந்தியா போன்ற நாடுகள் தங்கள் தங்கள் நாட்டுக்கெதிராகவும் இவ்வாறான தீர்மானங்கள் கொண்டு வரமுடியும் அதனூடாக சர்வதேச விசாரணை வந்துவிடும் என அவர்கள் மிக கவனமாக இருக்கின்றார்கள். இவ்வாறான தீர்மானத்துக்கு ஆதரவு தருவதற்கு அவர்கள் மறுத்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் அமெரிக்கா போன்ற நாடுகள் மிகப்பெரிய பொருளாதாரத்தை செலவழித்திருந்தார்கள். தமது முழு சக்தியையும் இவ்வாறான தீர்மானம் நிறைவேற்ற பயன்படுத்தினார்கள். அதனூடாக வென்றெடுத்தே இந்த பிரேரணையை தற்போது நிறைவேற்றியிருக்கின்றார்கள்.

சிலர் ஜெனிவாவில் அமெரிக்காவுக்கு எதிராக குரல் எழுப்பினார்கள். இந்த பிரேரணை சர்வதேச விசாரணை இல்லை என்று கூறினார்கள். அவர்களே தற்போது இங்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்று கனவில் இருந்து மீண்டவர்கள் போல் அதனுடைய பின்னணி அதனுடைய வரலாறு, என்ன நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்பதை நன்றாக தெரியாமல் இன்று தமிழரசுக்கட்சி மீது குற்றம் சுமத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

இன்று போராளிகள் கட்சி என்று ஒன்றை தொடக்கினார்கள். இன்று அவ்வளவு தூரம் அவமானமாக்கியிருக்கின்றார்கள். நாம் மதிப்பு வைத்துள்ள அந்த போராளிகள் அவர்களை தேர்தலில் ஈடுபடுத்தி இன்று 1979 வாக்குகள் மட்டில் பெற்றிருக்கின்றார்கள். அது எவ்வளவு அவமானமாகும். வெறும் அற்ப ஆசைகளுக்காக 3 ஆசனத்தை பெறுவோம் என்று கூறினார்கள்.

தமிழரசுக்கட்சி ஏதோ சர்வதேச விசாரணையை கோரவில்லை உள்ளக விசாரணையை கோருவது போலவும் அத்தனை உண்மைகளையும் மூடி மறைத்து தற்போது புதிய இயக்கம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. அதில் எங்களுடைய வடக்கு முதலமைச்சரும் சம்பந்தப்பட்டிருக்கின்றார்.

ஒரு நீதியரசருக்கு அது புரியாமல் இருக்க முடியாது. அப்படி புரியாமல் இருந்தால் அது ஆச்சரியமான விடயம். அதனை நாம் எப்படி அணுகப்போகின்றோம் என்று நாம் சில நியாயங்கள் வைத்துள்ளோம்.

இன்று சர்வதேச விசாரணை தேவை என மனித உரிமை பேரவைக்கு அனுப்ப கையெழுத்து வாங்குகின்றார்கள். சரி வாங்கட்டும் விழிப்புணர்ச்சி தேவையானது. நாங்கள் அதற்கு தடையாக இருக்க மாட்டோம். ஆனால் உண்மையை பேசுகின்ற அந்த தத்துவம் துடிப்பு எங்களுக்கு தெரிய வேண்டும்.

எங்களுடன் கூட இருக்கின்ற 3 கட்சிகளில் சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் அமெரிக்காவில் பேசுகின்றபோது எங்களுடன் வந்திருந்தார்கள். பிரேரணை நிறைவேற்றும் போது எங்களுடன் இருந்தார்கள். தற்போது அவர்கள் மூன்று பேரும் ஒரு இடத்தில் கூடி போர்க்குற்ற விசாரணையே தேவை என கூறுகின்றார்கள். அது எப்போதோ நிறைவேற்றப்பட்டாகி விட்டது.

ஒரு நாட்டைப்பற்றி ஒரு விசாரணை கொண்டு வரப்படுகின்ற போது உள்ளக விசாரணை இடம்பெறவேண்டும். அந்த நாட்டின் இணக்கத்துடன் கொண்டு வரப்பட வேண்டும். அதுவே அதனுடைய சாராம்சம்.

எங்களுடைய தேர்தல் அறிக்கையில் சர்வதேச விசாரணை பற்றி தெரிவிக்கப்பட்டு நாங்கள் அதனை வலுவூட்டி சிறந்த போர்க் குற்ற விசாரணை இடம்பெறவேண்டும் என வலியுறுத்தியுள்ளோம். அதற்கு மக்கள் அங்கீகாரத்தை பெருவாரியாக வழங்கியுள்ளார்கள். அதை விட கையெழுத்து எவ்வளவு பெறுமதியாக இருக்கபோகின்றது என தெரிவித்தார். (செ-250)

## உலகை உலுக்கிய சிறுவனின் மரணம்

# உதவிக்கரம் நீட்டிய ஜேர்மன் கால்பந்து அணி

சிரியாவின் உள்நாட்டுப்போர் காரணமாக அகதிகளாக வெளியேறும் மக்களுக்கு ஜேர்மனியின் கால்பந்து அணி மற்றும் ரசிகர்கள் உதவிக்கரம் நீட்ட முன்வந்துள்ளனர்.

சிரியாவில் உள்நாட்டுப்போர் நடந்து வரும் நிலையில், அங்கு வசிப்பவர்கள் அண்டை நாடான துருக்கி வழியாக ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக சென்று கொண்டிருக்கிறார்கள்.


இந்நிலையில், துருக்கி நாட்டின் கடற்கரையில் அகதிகள் வந்த படகு கவிழ்ந்ததில் 12 பேர் உயிரிழந்தனர்.

இதில் கடற்கரையில் இறந்து கிடந்த 3 வயது சிறுவன் அய்லானின் உடலை கடல் அலைகள் தொட்டு செல்லும் புகைப்படம் உலகையே சோகத்தில் ஆழ்த்தியது.

இந்தப் புகைப்படம் வெளியானதுமே, ஜேர்மனியின் புகழ்பெற்ற கால்பந்து அணியான பேயர்ன்மியூனிச், அங்கு வரும் அகதிகளுக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் அளவுக்கு உதவி செய்யும் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

மேலும், ஜேர்மனியில் ஏற்கெனவே உள்ள அகதிகள் நல்வாழ்வுக்காகவும், அவர்களது குழந்தைகளின் படிப்புக்காக உதவவும் பேயர்ன் மியூனிச் அணி முன்வந்துள்ளது.

இதற்காக நட்புமுறையிலான போட்டிகளில் பங்கேற்று, அதில் வரும் நிதியையும் அகதிகள் நல்வாழ்வுக்காக வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (க)





# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 19 - 06 - 1944

மறைவு 04 - 09 - 2015

## அமரர் ஐயாக்குட்டி பாலசிங்கம்

(அண்ணமகேஸ்வரர் ஆலய நிர்வாக சபைத் தலைவர்; ஓய்வுபெற்ற உப அதிபர்-யா/ஏழாலை மகா வித்தியாலயம்; சாமசிறி, தேசமானிய, அகில இலங்கை சமாதான நீதவான்; சிவில் பாதுகாப்பு குழு உறுப்பினர்-சுன்னாகம் பொலிஸ் பிரிவு; மத்திய சபை உறுப்பினர் உடுவில்.)

ஊர் போற்றும் உத்தமராய் உலகினில் தான் மிளிர்ந்தாய்
யாவர்க்கும் நல்லுதவி நாளுமே நல்கிடுவாய்
சமூகத்தின் நலனிற்காய் சாலவும் பணி புரிவாய்
எல்லோரது கருமங்களிலும் முன்னின்று உழைக்கும் நீ
இல்லையே என்று இதயங்கள் வாடுதையா...
உம்மைப்போல் உத்தமரை உலகினில் இனிக் காண்போமா?

*அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(1694)

பிரிவால் துயருறும்:
அண்ணமகேஸ்வரர் ஆலய நிர்வாக சபையும்,
திருப்பணி சபையும்
மயிலணி வடக்கு, சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.விருது பெற்ற தேவராஜாவிற்கு இன்று பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் பழைய மாணவனும் முன்னாள் யாழ். முகாமைத்துவ வணிக பீடாதிபதியும் வணிகத்துறை தலைவரும் பேராசிரியருமான கந்தையா-தேவராஜாவிற்கு யாழ்.விருது கிடைத்தமைக்கான பாராட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் காலை 8.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலையின் முன்னாள் அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக விழாநாயகன் பேராசிரியர் க.தேவராஜா,பாரியார் திருமதி. இ.தேவராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இதன்போது ஆசியுரைகளை தாவடி அம்பலவாண வேதவிநாயகர் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ ப.சிவ.சங்கரக்குருக்கள், தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவர் ஆறு.திருமுருகன் ஆகியோர் வழங்குவதுடன் வாழ்த்துரைகளை வடபிராந்திய சத்தியசேவா நிறுவனத்தின் தலைவர் இ.சரவணபவன், யாழ். தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் பழைய மாணவர் கலாபூஷணம் மு.மாசிலா மணி ஆகியோரும் வரவேற்புரையினை பழைய மாணவர் சங்கத் தலைவரும் யாழ். உரும்பிராய் இந்துக் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபருமான மா.சண்முகரட்ணமும் பாராட்டுரையினை பழைய மாணவர் சங்க உப தலைவரும் யாழ்.இந்துக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபருமான பொ.கமல நாதன், யாழ். பல்க லைக்கழக முன்னாள் விரிவுரையாளர் திருமதி கலைவாணி இராம நாதன்,வலி. தெற்கு பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் இ.பரமேஸ்வரலிங்கம்,உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுல குமாரன், யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறை பேராசிரியர் சத்தியசீலன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.(இ-5)

## கொழும்பில் சீனர்களை இலக்கு வைத்து 135 கோடி ரூபா செலவில் விகாரையாம்

(கொழும்பு)

இலங்கை வரும் சீனர்களுக்காக கொழும்பில் 135 கோடி ரூபா செலவில் விகாரை ஒன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சீனாவின் தொண்டு நிறுவனம் ஒன்று இந்த விகாரையை நிர்மாணிக்க உள்ளது. இலங்கைக்கு வருகை தரும் சீன சுற்றுலாப் பயணிகளில் உள்ள பௌத்த மக்களை கவர்வதே இதன் நோக்கம் என இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

2012 ஆம் ஆண்டு சீனாவில் நடத்தப்பட்ட சனத்தொகை கணக்கெடுப்பில் அங்கு வாழும் மக்களில் 200 மில்லியன் மக்கள் பௌத்தர்கள் என தெரியவந்துள்ளது.

அதேவேளை இந்த ஆண்டு ஜூலை மாதம் வரை ஒரு லட்சத்து 19 ஆயிரத்து 705 சீன சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர். கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 77.6 வீத அதிகரிப்பு என கூறப்படுகிறது.

இந்த ஆண்டில் மொத்தமாக 2 இலட்சத்து 25 ஆயிரம் சீன சுற்றுலாப் பயணிகளை வரவழைக்க இலங்கை எதிர்பார்த்துள்ளது. (இ-7)

# மரண அறிவித்தல்

## அமரர் மாசிலாமணி டேவிற்ராஜா

**(முன்னைநாள் மின்சாரசபை ஊழியர் CRO சுன்னாகம்)**



உரும்பிராய் கிழக்கு உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாசிலாமணி டேவிற்ராஜா அவர்கள் 05.09.2015 சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் அன்னேஸ்வரியின் பாசமிகு கணவரும் டென்சி, டக்ளஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும்(காலஞ்சென்ற மாசிலாமணி மேரியம்மாவின் அன்பு மகனும் புவனேஸ்வரன், சந்திரலீலா, வதனா,கமலா,ஜெலாம் (மின்சார சபை ஊழியர்) ஆகியோரின் சகோதரனும் ராஜேஸ்வரன் (யாழ். போதனா வைத்தியசாலை), மகிபாலாமேரி, பரஞ்சோதி (தெல்லிப்பழை வைத்தியசாலை), மேரி திரேசா,ஞானேஸ்வரன் (யாழ். கொழும்புத்துறை சென் ஜோசவ் வித்தியாலயம்),பாலச்சந்திரன் (தீவக கல்வி வலயம்), பிறிசில்லா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும்(07.09.2015) நாளை திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் புனித மிக்கேல் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி நிறைவேற்றப்பட்டு நல்லடக்கத்திற்காக உரும்பிராய் புனித மிக்கேல் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உரும்பிராய் கிழக்கு**
**உரும்பிராய்.** (1687) **தகவல் குடும்பத்தினர்.**

## ராசி பலன்

06.09.2015
(ஆவணி 20, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
அட்டமி முற்பகல் 8.37 மணிவரை
ரோகினி காலை 6.09 மணிவரை
இராகுகாலம் 4.34-6.04 மணிவரை
சுபநேரம் 9.04-10.34 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | சந் | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>விசாகம்<br>மாலை 5.59 இற்கு<br>மிது-சந்<br>சமநோக்குநாள் | | சுக்<br>செவ் |
| | | | குரு<br>சூரி |
| | | சனி | புதன்<br>ராகு |

**மேடம்:** சவால்களை சமாளிக்கும் நாள், சகோதரர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**இடபம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், பெரியோர் சந்திப்புண்டு.

**மிதுனம்:** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் அதிகரிக்கலாம், வியாபார நலன் கருதி புதிய திட்டங்கள் திட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள்.

**கடகம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம், கற்பனை மிகுதியான நாள்.

**சிம்மம்:** நல்ல காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடும் நாள், இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடை பெறுவதற்கான வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்.

**கன்னி:** காலையிலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், புதிய திட்டங்கள் தீட்டி வருமானத்தை அதிகரிக்க முற்படுவீர்கள், குடும்பத்தினருடன் விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**துலாம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், பயணங்கால் ஆதாயமுண்டு, தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், ஆன்றோர் சந்திப்புண்டு.

**விருச்சிகம்:** குடும்பத்தில் இடையிடையே தேவையற்ற கருத்து முரண்பாடுகள் ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், எடுத்த காரியங்களை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம்.

**தனுசு:** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் இடம்பெறலாம், வருமானம் திருப்திதரும்.

**மகரம்:** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்:** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, நட்பு வட்டம் விரிவடையும், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள் பயணங்களால் பலனுண்டு.

**மீனம்:** புதிய நபர்களின் சந்திப்பால் பொருளாதார நிலை உயரலாம், தொலைபேசி வழியில் பொன்னான தகவலொன்று வந்து சேரலாம், உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச குற்றவியல் விசாரணையைக்கோரி யாழில் நேற்றும் கையெழுத்துப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**இலங்கைக்கு எதிராக சர்வதேச குற்றவியல் பொறிமுறையை ஏற்படுத்தக்கோரி நேற்றைய தினமும் யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் கையெழுத்துப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.**

யாழ்.மத்திய பேருந்து நிலையம், திருநெல்வேலி பொதுச்சந்தை, நல்லூர் கந்தசுவாமி ஆலய வெளிச்சூழல், பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தை அண்டிய சூழல்கள் போன்றவற்றில் நேற்றைய தினம் கையெழுத்து போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இவ் அனைத்து இடங்களிலும் நடைபெற்ற கையெழுத்துப் போராட்டங்களில் மக்கள் தாமாகவே முன்வந்து தமது கையொப்பங்களினை இட்டிருந்ததனை அவதானிக்க முடிந்தது.

குறித்த கையெழுத்துப் போராட்டங்களில் மக்களின் ஆர்வம் செலுத்தல் அதிகரித்ததனையடுத்து புலனாய்வுப் பிரிவினரது கண்காணிப்புக்கள் நேற்றைய போராட்டங்களில் தீவிரப்படுத்தப்பட்டிருந்ததனையும் அவதானிக்க முடிந்தது. இலங்கைத் தீவில் இடம்பெற்ற சர்வதேச மனிதாபிமான மற்றும் மனிதவுரிமை சட்டமீறல்களை புரிந்தோர்க்கெதிராக சர்வதேச குற்றவியல் செயன்முறை பொறிமுறையொன்றினை ஏற்படுத்தும் படி ஐக்கிய நாடுகள் சபையின் ஆணையாளரினை வலியுறுத்தும் இக் கையெழுத்து வேட்டை இலங்கை அரசாங்கத்தினால் உருவாக்கப்படும் எந்தவொரு உள்ளகப் பொறிமுறையினையும் விசாரணைகளினையும் இப்போராட்டம் முழுமையாக நிராகரிக்கின்றது.

திருநெல்வேலியில் நேற்றைய தினம் நடைபெற்ற கையெழுத்துப் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் போராட்டத்தின்தலைமை ஒருங்கிணைப்பாளருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் போராட்டம் குறித்து கேட்ட போது, இலங்கையில் நடைபெற்ற மனித குலத்திற்கு எதிரான படுகொலைகள், சர்வதேச மனிதவுரிமை சட்டமீறல்கள் தொடர்பில் விசாரணைகளினை மேற்கொள்வதற்கு உள்ளக விசாரணையில் நம்பிக்கை இல்லை எனவும் சர்வதேச விசாரணைப் பொறிமுறையே வேண்டுமெனவும் வலியுறுத்தி வருகின்றோம்.

குற்றம் செய்தவர்களே தமது குற்றத்தினை விசாரிப்பது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இது நீதிக்கு புறம்பான செயலாகும்.

எமது குழுவின் இப் போராட்டங்கள் நாளைய தினம் (இன்று) திருகோணமலை மாவட்டங்களிற்கும் கொண்டு செல்லப்படவுள்ளது. இதேபோல் ஏனைய மாவட்டங்களிற்கும் எதிர்வரும் நாட்களில் விரிவுபடுத்தப்படும்.

இறுதியாக எங்கள் மக்களிடம் கோருவது, ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் விருப்பங்களின் பிரகாரம் தான் நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தவகையில் இப் போராட்டங்களில் அனைத்து மக்களும் ஒன்றுகூடி கையொப்பங்களினை இடுமாறு கேட்டுக் கொண்டுள்ளார் கஜேந்திரகுமார்.

சர்வதேச பொறுப்புக் கூறல் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டு குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-4)





## கழிவுப்பொருட்களை வீதியிலிருந்து அகற்றுமாறு பயணிகள் கோரிக்கை

(கரணவாய்)

வலி.கிழக்கு புத்தூர் பிரதேசசபைக்குட்பட்ட புத்தூரிலிருந்து சுன்னாகம் செல்லும் வீதியில் பொதுமக்களால் கொட்டப்பட்டு வருகின்ற கழிவுப்பொருட்கள் நிரம்பிக் காணப்படுகிறது.

இதில் குறிப்பாக புத்தூரிலிருந்து சுன்னாகம் செல்லும் வீதியில் உள்ள பேருந்து நிலையத்தில் அதிகளவு போத்தல்கள், பீங்கான்கள் என்பன நிரம்பிக் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்களால் வீசப்பட்டு வருகின்ற இக்கழிவுப் பொருட்கள் நீண்டகாலமாக உரிய முறையில் அகற்றப்படாத நிலையில் காணப்படுகிறது. வீதிக்கு அருகில் உள்ள பொதுமக்களாலும் இக்கழிவுப் பொருட்கள் உரிய முறையில் அகற்றப்படுவதில்லை.

குறித்த வீதிக்கு அண்மையாக புத்தூர் பிரதேச ச்சபை, எதிர்பக்கமாக தேவாலயம் என்பன காணப்படுகின்றன.

ஆனால் இக்கழிவு பொருட்கள் நீண்டகாலமாக அப்பகுதியில் தொடர்ச்சியாக கொட்டப்பட்டே வருகிறது.


எனவே வீதியில் உள்ள கழிவுப் பொருட்கள் உரிய முறையில் அகற்றப்பட வேணடும் என வீதிப்பயனாளிகள் சம்மந்தப்பட்ட தரப்பினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5-60)

## ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவில் மஹோற்சவப் பெருந்திருவிழா

(தும்பளை)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் மஹோற்சவ பெருந்திருவிழா எதிர்வரும் 12 ஆம் திகதி முற்பகல் 10.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாம்புத் திருவிழாவும் 23 ஆம் திகதி புதன்கிழமை கம்சன் போர்த்திருவிழாவும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை வேட்டைத்திருவிழாவும் 25 ஆம் திகதி இரவு 7 மணிக்கு வெள்ளிக்கிழமை சப்பறத் திருவிழாவும் 26 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்



திருவிழாவும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சமுத்திரத்தீர்த்தத் திருவிழாவும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை கேணித் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

உற்சவகாலங்களில் காலை வேளை உற்சவம் காலை 8 மணிக்கும் இரவு வேளை உற்சவம் பிற்பகல் 4.30மணிக்கும் இடம்பெறவுள்ளன. (இ-5-19)

## நயினாதீவு - நல்லூர் 51 ஆவது திருத்தலப்பஜனை பாதயாத்திரை

நயினாதீவு-நல்லூர் திருத்தலப் பஜனை பாதயாத்திரை நாளை மறுதினம் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழா அன்று நிறைவடையவுள்ளது. நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில் இடம்பெறவுள்ள விசேட பூஜைகளைத் தொடர்ந்து இப்பஜனைப் பாதயாத்திரை காலை 8மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து குறிகட்டுவான், புங்குடுதீவு, வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஊடாக பண்ணை ஊடாக யாழ்ப்பாணத்தை வந்தடையும்.

பின்னர் வில்லூன்றி, கந்தர்மடம் வழியாகச் சென்று நல்லூர்த் தேர்த்திருவிழாவான எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நல்லூர் ஆலயத்தைச் சென்றடையவுள்ளது.

இப்பஜனைப் பாதயாத்திரையின் போது இரவு தங்கிச் செல்லும் ஆலயங்களாக நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் 7 ஆம் திகதி திங்கட்கிழமையும் புங்குடுதீவு மடத்து வெளிமுருகன் ஆலயத்தில் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் மண்கும்பான் விநாயகர் ஆலயத்தில் 9 ஆம் திகதி புதன்கிழமையும் வில்லூன்றிவீரகத்திவிநாயகர் ஆலயத்தில் 10 ஆம் திகதி வியாழக்கிழமை என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)



**மீளக்குடியேறிய மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தினால் யு.என்.சி.ஆர் இன் நிதியுதவியுடன் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பளை வீமன்காமம் வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் கட்டப்பட்டு வரும் 27 அரை நிரந்தர வீட்டுத்திட்டத்தின் ஒருபகுதி தெல்லிப்பழை பிரதேச செயலாளரிடம் கையளிக்கும் நிகழ்வு கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்றது.**

**இதன்போது யு.என்.சி.ஆர் இன் இலங்கை நாட்டிற்கான பிரதிநிதி மற்றும் கிளிநொச்சி மாவட்ட பிரதிநிதி உட்பட பல பிரதிநிதிகளும் யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் இணைப்பாளர் ந.சுகிர்தராஜ் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் கே.சிறீமோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாறறுப பரசித்த பெறற பொனனாலை வரதராஜ பெருமாள ஆலயததின வருடாநத தோததிருவிழா நேறறைய தினம நடைபெறறது. இதில பெருமளவிலான பகதாகள கலநது கொண்டிருந்தார்கள்.

# இளையோர் மத்தியில் வெளிநாட்டு மோகம் அதிகரிப்பதை மாற்றியமைக்க வேண்டும்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

**யாழ். மாவட்டத்தில் உள்ள இளைஞர்கள் மத்தியில் வெளிநாட்டு மோகம் அதிகரித்து காணப்படுகின்றது. அதனை நாம் மாற்றியமைத்து அவர்களுக்குரிய நல்ல களத்தை இங்கு உருவாக்கி கொடுக்க வேண்டுமென யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்**

வடமாகாண கைத்தொழிற்றுறைத் திணைக்களத்தின் கைத்தொழில் கண்காட்சி நேற்று முன்தினம் யாழ். கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

யாழ். மாவட்டத்தில் யுத்தத்திற்கு முன்னரான காலப்பகுதியில் பல கைத்தொழில் நிறுவனங்கள் காணப்பட்டன. குறிப்பாக சிறிய நடுத்தர மற்றும் குடிசைக் கைத்தொழில்கள் பல இயங்கி வந்தன. அவை அனைத்துமே யுத்தத்தின் காரணமாக அழிக்கப்பட்ட நிலையில் அங்கு பணிபுரிந்த அனைவரும் வேலை இழந்த நிலையில் இருந்தனர். அதன் தொடர்ச்சியே தற்போது வேலை இல்லா பிரச்சினை உருவாகி பாரிய சவாலாக எம் மத்தியில் உருவெடுத்துள்ளது.

யுத்தத்தால் அழிந்து போன கைத்தொழில்களை மீளவும் ஆரம்பிக்க பலர் நாட்டம் இல்லாமல் இருக்கின்றார்கள். புதிய கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க பின்னிக்கின்றார்கள். அத்துடன் எமது இளைஞர் யுவதிகள் வெளிமாவட்டங்களுக்கு சென்று பயிற்சிகளை மேற்கொள்வதற்கு பின் நிற்கின்றார்கள். இந்த நிலை மாற வேண்டும்.

எமது மாவட்ட கைத்தொழில் முயற்சிகள் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யும் பொருட்களை விட தரத்தில் உயர்ந்ததாக உள்ளன. தற்போது புதிய பொருட்கள் கொள்வனவு செய்வதை விட பழைய பொருட்கள் கொள்வனவு செய்வதில் மக்களிடத்தில் நாட்டம் அதிகமாக உள்ளது. எனவே உற்பத்தி செய்யும் பொருட்களை இன்றைய போட்டித்தன்மைக்கு ஏற்ப தரமானதாக மாற்றியமைத்து கொள்வதன் மூலம் கூடிய சந்தை வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

முயற்சியாளர்களிடையே ஊக்கத்தினையும் போட்டித்தன்மையினையும் உருவாக்குவதற்கு கண்காட்சிகள் ஒரு நல்ல களமாக அமைகின்றன. வருமானத்தை அதிகரிக்கும் தொழில் முயற்சிகளை ஊக்கத்துடன் செய்வதற்கு வழிவகுக்கின்றன. தொழில் முயற்சியாளர்கள் மற்றவர்களுடைய உற்பத்திகளை பார்வையிடுவதன் மூலம் அவர்களையும் புதிய தொழில் முயற்சிகளை செய்வதற்கு இவ்வாறாக கண்காட்சிகள் ஊக்கப்படுத்துகின்றன.

எனவே கைத்தொழில் துறையில் தொடர்ச்சியான பயிற்சியையும் மாற்றங்களை கொண்டுவரக்கூடிய முறைமைகளை பின்பற்றுவதன் மூலம் நாம் பொருளாதாரத்தில் வெற்றிகொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## வலி.கிழக்கில் நடமாடும் சேவை

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு வலி கிழக்கு பிரதேச சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் சேவை பிரதேச சபையின் உப அலுவலக பிரிவுகளில் இன்று ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை தினமும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3மணிவரை நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் ஆயுள்வேத சேவை, நூலக சேவை, ஆதனவரி, பெயர் மாற்றம் , கட்டட விண்ணப்பம், வியாபார உரிமங்கள், பொது மக்களின் முறைப்பாடுகள் போன்றன எடுத்து கொள்ளப்படவுள்ளன.

இதற்கமைய 7 ஆம் திகதி திங்கட்கிழமை கோப்பாய் உப அலுவலகப் பிரிவின் இருபாலை கிழக்கு , ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்திலும், உரும்பிராய் உப அலுவலகப் பிரிவின் ஞான வைரவர் சனசமூக நிலையத்திலும், 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீர்வேலி சிவசக்தி சனசமூக நிலையத்திலும் , அச்சுவேலி மாணிக்க இடைககாடர் சனசமூக நிலையத்திலும், 9 ஆம் திகதி புதன் கிழமை புத்தூர் நிலாவரையில் சிரமதான நிகழ்வும், உரும்பிராய் உப அலுவலக பிரிவின் நூலகத்தில் புத்தகக் கண்காட்சியும், 10 ஆம் திகதி வியாழக்கிழமை அச்சுவேலி உப அலுவலகத்தில் புத்தகக் கண்காட்சியும் அன்றைய தினம் முன்பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி, ஆக்கம், சித்திரம் போன்ற நிகழ்வுகளும நடைபெறவுள்ளதாக வலி. கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் நா.குமணன் அறிவித்துள்ளார். (இ-5)

# நெற்களஞ்சியமாக்கப்பட்ட மத்தள விமான நிலையம்

## நாமல் கண்டனம்

நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு எதிர்கால சந்ததியினருக்காகவும் நாட்டின் அபிவிருத்திக்காகவும் நிர்மாணிக்கப்பட்ட மத்தள விமான நிலையத்தை ராஜபக்சர்களை பழிவாங்கும் நோக்கில் தவறாக பயன்படுத்தப்படுகின்றமைக்கு கடுமையான கண்டனம் வெளியிடுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த அரசாங்கத்தினால் இலங்கையினுள் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்களில் வெற்றியடைந்த ஒன்றான மத்தள சர்வதேச விமான நிலையத்தை தற்போதைய அரசாங்கம் நெல் களஞ்சிய சாலையாக பயன்படுத்துவதனை நான் அறிந்து கொண்டேன்.

இவ் விமான நிலையத்திற்கு நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு எதிர்கால சந்ததியினருக்காகவும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காகவும் நிர்மாணிக்கப்பட்ட விமான நிலையமாகும்.

இந் நாட்டில் அதிவேக பாதைகள் நிர்மாணிப்பது போன்று விமான நிலையமொன்று நிர்மாணிப்பதும் அம்பாந்தோட்டை புதிய துறைமுகம் அமைப்பதும் இந் நாட்டு அரசாங்கங்களுக்கு 1960ஆம் ஆண்டில் இருந்து காணப்பட்ட ஒரு கனவாகும்.

இது போன்று பெரிய அளவிலான திட்டங்களின் முழுமையான நன்மைகளை பெற்றுகொள்ள பல வருடங்கள் கழிந்து விட்டன.

மஹாவலி திட்டமும் அமைத்தவுடனே நன்மை கிடைத்து விடாது. துறைமுகங்கள், விமான நிலையங்கள் நிர்மாணிப்பதற்கு பல வருடங்கள் தேவைப்படுகின்றது.

உலகின் மிக பெரிய விமானத்தை மத்தள விமான நிலையத்தின் ஊடாகவே தரையிறக்க முடியும் என்பதனால் இந் நாட்டிற்கு மேல் பறக்கும் விமானங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டிருந்ததோடு அதன் மூலம் நாட்டிற்கு கிடைக்கும் வருமானங்கள் அதிகரிக்கப்பட்டிருந்தன.

இந்த தேசிய சொத்துக்களை பயன்படுத்தி எங்கள் நாட்டின் 5 மாகாணங்களை அடிப்படையாக கொண்டு புதிய பொருளாதார வலயத்தினை உருவாக்குவது எங்கள் அனைவரினதும் தேசிய நோக்கமாகும்.

இதனால் கடந்த அரசாங்கத்தை அவமதிப்பதனை நோக்கமாக கொண்டு செயற்படுத்தும் இந்த முறையற்ற நடவடிக்கை உடனடியாக நிறுத்துமாறு நான் ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 24 உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L தனியார் தொழில்<br>தொ.இ: B/4919 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 33 சூரி.செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் பட்டதாரி/ கணக்காளர்<br>தொ.இ: G/4942 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 9 சூரி.செவ் 9 இல்<br>தகைமை/தொழில்: CIMA/ கணக்காளர், லண்டன்<br>தொ.இ: B/4920 | பிறப்பு 1990 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 65 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSC<br>தொ.இ: G/4943 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 8 உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: வைத்தியர்<br>தொ.இ: B/4922 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 4 1/2 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் முக்கியம்<br>தொ.இ: G/4944 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 31 செவ்.12 இல்<br>உயரம்: 168 cm<br>தகைமை/தொழில்: Diploma/ ஆசிரியர்<br>தொ.இ: B/4923 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 44 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பல் வைத்தியர், அவுஸ்திரேலியா<br>தொ.இ. G/ 4945 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சம்பந்தனை கைவிடமாட்டோம்

## ஜே.வி.பி கூறுகிறது

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், மக்கள் விடுதலை முன்னணியும் ஒன்றிணைந்து நாட்டில் எதிர்க்கட்சிக்கான பணியை சரியாக செய்யும். எதிர்க்கட்சியாக செயற்படும் போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சம்பந்தனை கைவிடமாட்டோம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் எதிர்க்கட்சி பிரதம கொறடாவுமான அநுரகுமார திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.**

அவசியமான எல்லா சந்தர்ப்பங்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுவோம் எனவும் அவர் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியினர் நேற்று முன்தினம் கட்சித் தலைமையகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

எதிர்க்கட்சி தலைவர் பதவி தமிழ்த தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு வழங்கப்பட்டது இன்று ஒருசிலருக்கு மிகவும் வேதனை தரக்கூடிய சம்பவமாக மாறியுள்ளது. பாராளுமன்றத்தில் ஒருசிலர் மிகவும் அதிர்ச்சியடையும் வகையில் நேற்று முன் தினம் செயற்பட்டனர்.

ஆனால் எம்மைப் பொறுத்த வரையில் சம்பந்தனுக்கு எதிர்க்கட்சி பதவியை வுழங்கியமையை மிகவும் நல்லதொரு விடயமாகவே கருதுகின்றோம். அதேபோல் அவசியமான நேரத்தில் மிகவும் முக்கியமான பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டுள்ளதை நாம் நாட்டின் நல்லாட்சியின் ஒரு அம்சமாக கருதுகின்றோம். அதையும் தாண்டி நாட்டில் மிகப்பெரிய சிக்கலில் இருந்து நாம் தபபியுள்ளோம் என்பதும் உண்மையான விடயமே.

அதாவது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளை பொறுத்தவரையில் ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஆகிய ஆறு கட்சிகளே உள்ளன. இந்த கட்சிகளில் இப்போது ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் ஒன்றிணைந்து கூட்டு அரசாங்கத்தை அமைத்துள்ளன. ஆகவே இந்த கட்சிகள் மூன்றும் ஆளும் கட்சியாகவே கருதப்பட வேண்டும்.

அவ்வாறு இருக்கையில் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி யார் என்று பார்க்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே எதிர்க்கட்சி பதவிக்கு ஏற்ற தகுதிகளை பெற்றுள்ளது. ஆசன எண்ணிகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 16 ஆசனங்களையும், மக்கள் விடுதலை முன்னணி 6 ஆசனங்களையும், ஈழமக்கள் ஜனநாயக கட்சி 1 ஆசனத்தையும் பெற்றுள்ளது. அந்த வகையில் எதிர்க்கட்சி பதவி கூட்டமைப்புக்கு வழங்கப்பட்டமை நியாயமானதே.

மறுபுறம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஒருசிலர் தாம் எதிர்க்கட்சிக்கான வாய்ப்பை எதிர்பார்த்திருப்பதாகவும் ஆனால் ஏமாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

எனினும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எதிர்க்கட்சி பதவியை எதிர்பார்க்கவில்லை எனத் தெரிவித்து அக்கட்சியின் பொதுச் செயலாளர் மூலம் சபாநாயகருக்கு கடிதம் சமர்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே அந்த வகையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தான் எதிர்க்கட்சி பொறுப்பு வழங்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



# கருணா கூறுவது பொய்; ராணுவ அதிகாரிகள் மறுப்பு!

விடுதலைப் புலிகளுடனான இறுதி யுத்தம் தொடர்பாக கருணா அம்மான் தெரிவிக்கும் தகவல்கள் அனைத்தும் பொய்யானவை என்று இராணுவ உயரதிகாரிகள் பலரும் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற இறுதி யுத்தம் தொடர்பாக பல திடுக்கிடும் தகவல்களை கருணா அம்மான் அண்மையில் தமிழகத் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருந்தார்.

அதில் குறிப்பிடப்பட்ட விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மரணம் தொடர்பான கருணாவின் கூற்றை முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத்பொன் சேகா உடனடியாக மறுத்திருந்தார்.

குறித்த நேர்காணலில் இந்தியப் படையினரின் ஒரு பிரிவு வவுனியாவில் நிலைகொண்டிருந்ததாகவும், ரேடார் நடவடிக்கைகள் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை அவர்களே மேற்கொண்டதாகவும் கருணா அம்மான் தொடர்ந்தும் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாகவும் தற்போது இராணுவ அதிகாரிகள் கடுமையான மறுப்பை வெளியிட்டுள்ளனர்.

இறுதி யுத்தம் தொடர்பாக கருணா வெளியிடும் தகவல்கள் அனைத்தும் பொய் எனவும், இந்தியப் படையினர் ஒருபோதும் வவுனியாவில் நிலைகொண்டிருக்கவில்லை என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக திவயின பத்திரிகை இராணுவத்தினரை மேற்கோள் காட்டி விரிவான செய்தியொன்றை வெளியிட்டுள்ளது. (இ-7)




- 1522 - பேர்டினண்ட் மகலனின் விக்டோரியா கப்பல் உயிர் தப்பிய 18 பேருடன் ஸ்பெயினை வந்தடைந்து, முதன் முதலில் உலகைச் சுற்றி வந்த கப்பல் என்ற பெயரைப் பெற்றது.
- 1620 - வட அமெரிக்காவில் குடியேறுவதற்காக இங்கிலாந்தின் பிளைமவுத் துறையிலிருந்து யாத்திரிகர்கள் புறப்பட்டனர்.
- 1776 - கரிபியன் தீவான குவாதலூப்பேயை சூறாவளி தாக்கியதில் 6000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கப் படைகள் கென்டக்கியின் படூக்கா நகரைக் கைப்பற்றினர்.
- 1863 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புப் படைகள் தென் கரோலினாவின் மொரிஸ் தீவில் இருந்து விலகினர்.
- 1873 - இலங்கையில் புதிதாக வடமத்திய மாகாணம் அமைக்கப்பட்டு, மொத்தம் இலங்கையின் மாகாணங்கள் ஏழாக அதிகரிக்கப்பட்டது. ஜே. இ. டிக்சன் அதன் முதலாவது அரச அதிபர் ஆனார்.
- 1885 - கிழக்கு ருமேலியா பல்கேரியாவுடன் இணைந்தது.
- 1901 - அமெரிக்க ஜனாதிபதி வில்லியம் மக்கின்லி நியூயோர்க்கில் சுடப்பட்டுப் படுகாயமடைந்தார்.
- 1930 - ஆர்ஜெண்டீனாவின் அதிபர் ஹிப்போலிட்டோ இரிகோயென் இராணுவப் புரட்சியை அடுத்து பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- 1936 - கடைசி தாஸ்மானியப் புலி தாஸ்மானியா, ஹோபார்ட்டில் இறந்தது.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: தென்னாபிரிக்கா ஜேர்மனியுடன் போரை அறிவித்தது.
- 1946 - இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சி டி. எஸ். சேனநாயக்காவினால் ஆரம்பிக்கப்பட்டது.
- 1951 - தினமலர் நாளிதழ் ஆரம்பிக்கப்பட்டது.
- 1966 - தென்னாபிரிக்க பிரதமர் ஹெண்ட்ரிக் வேர்வேர்ட் நாடாளுமன்ற அமர்வின் போது குத்திக் கொலை செய்யப்பட்டார்.
- 1990 - யாழ்ப்பாணக் கோட்டை மீதான புலிகளின் முற்றுகையின் போது இலங்கையின் குண்டு வீச்சு விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.
- 1991 - ரஷ்யாவின் லெனின்கிராட் நகரம் மீண்டும் சென் பீட்டர்ஸ்பேர்க் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- 1997 - வேல்ஸ் இளவரசி டயானாவின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. 2.5 பில்லியன் மக்கள் தொலைக்காட்சி மூலம் இந்நிகழ்வைப் பார்த்தனர்.
- 2006 - ஐரோப்பியத் தமிழ் வானொலி, மக்கள் தொலைக்காட்சி ஆகியன ஆரம்பிக்கப்பட்டன.

**பிறப்புக்கள்**

- 1968 - சாயிட் அன்வர், பாகிஸ்தானின் துடுப்பாளர்

**இறப்புகள்**

- 1998 - அகிரா குரோசாவா, ஜப்பானியத் திரைப்படத் தயாரிப்பாளர் (பி. 1910)
- 2007 - லூசியானோ பவரொட்டி, இத்தாலியப் பாடகர் (1935)

# ஒன்றிணைந்து செயற்படுவதற்கு அனைவரும் முன்வர வேண்டும்

## நிதி அமைச்சர் அழைப்பு

பொதுமக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் அமைச்சர்களும், அதிகாரிகளும் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டுமென்று நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேசிய அரசாங்கத்தின் நிதியமைச்சராக பதவிப்பிரமாணம் செய்து கொண்ட ரவி கருணாநாயக்க நேற்று முன்தினம் நிதியமைச்சில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அமைச்சர் ரவி கருணாநாயக்க,

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் காலியான கஜானாவையே எங்களிடம் ஒப்படைத்துச் சென்றது. அதனை நிரப்பும் பொறுப்பு எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அரசியல் ரீதியான வாதப் பிரதிவாதங்களை ஒதுக்கி வைத்துவ்ட்டு, நாட்டு மக்களின் நலனுக்காக செயற்பட வேண்டிய தருணம் இது.

பொதுமக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் அவர்களுக்கு பொருளாதார பலாபலன்களை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

ஊழல்களை ஒழித்து, அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் மாத்திரமே எமது இலக்குகளை அடைந்து, தூய்மையான அரசாங்கம் ஒன்றை உருவாக்க முடியும்.

அதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டுமென் றும் அமைச்சர் ரவி கருணாநாய க்க மேலும் அழைப்பு விடுத்துள்ளார். (இ-7)

# வாக்குரிமையை இழந்தவர்கள் அறிவிக்க முடியும்- ஆணையாளர்

கடந்த ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களின் போது வாக்குரிமையை இழந்த வர்கள் அது குறித்து தேர்தல் திணைக்களத்திற்கு அறிவிக்க முடியும் என தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

வாக்காளர் இடாப்பில் பெயர் இல்லாத வர்கள் தங்களது குடும்ப உறுப்பினர்களது முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கங்களை அறிவிக்க முடியும்.

இந்த தகவல்களை ராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல்கள் திணைக்களத்தின் மேலதிக தேர்தல் ஆணையாளருக்கு ஒரு பிரதியையும் மாவட்ட தேர்தல் காரியாலயத்திற்கு ஒரு பிரதியையும எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.

எதிர்வரும் 25ம் திகதிக்கு முன்னதாக இந்த விபரங்களை அனுப்பி வைத்து மீளவும் வாக்களிப்பதற்கான உரிமையை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தற்காலிக அடிப்படையில் வெளிநாடு சென்று மீள நாடு திரும்ப உத்தேசிக்கும் இலங்கையர்கள் வெளிநாட்டு முகவரி மற்றும் கடவுச்சீட்டு இலக்கத்தை குறிப்பிட்டு வாக்குரிமையை பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாஜுடீன் கொலை குறித்து ஷிராந்தியிடம் விசாரணை?

(கொழும்பு)

**பிரபல ரகர் வீரர் வசீம் தாஜுடீன் கொலை செய்யயப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷவிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது.**

இது தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

எதிர்வரும் வாரத்தினுள் ஷிராந்தி ராஜபக்ஷவை நான்காம் மாடிக்கு அழைத்து விசாரணை நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், குறித்த கொலைக்கு பயன்படுத்தப்பட்ட டிபென்டர் வாகனம் ஷிராந்தி ராஜபக்ஷவினால் பயன்படுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த டிபென்டர் வாகனம் இவ்வாறான பல கொலைகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்கள தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



ஷிராந்தி ராஜபக்ஷவின் பயன்பாட்டிற்காக செஞ்சிலுவைச் சங்கத்தினால் குறித்த வாகனம் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் இதற்கு முன்னர் ரஞ்சன் ராமநாயக்கவினால் தகவல் வெளியிடப்பட்ட போதிலும் மகிந்த தரப்பினரால் அவை நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## விருப்பு வாக்கு பிரச்சினை மகிந்த தரப்பில் மோதல்

கடந்த பொதுத் தேர்தலின்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் மகிந்த தரப்பை பிரதிநிதித்துவப்படுத்திய சுதந்திர கட்சி உறுப்பினர்களுக்கு விருப்பு வாக்கு முடிவுகளில் குறைவு காணப்படுவதனால் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ள மற்றும் தெரிவாகாத உறுப்பினர்களுக்கு இடையில் மோதல் நிலை ஒன்று உருவாகியுள்ளது.

கொழும்பு மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 7 ஆசனங்களை பெற்றுக்கொண்டுள்ள நிலையில் குறித்த 7 பேரும் மகிந்த ராஜபக்ஷ தரப்பை பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள்.

அத் தரப்பினை பிரதிநிதித்துவப்படுத்தி கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்த ஜகத் குமார, பொதுத் தேர்தலின் விருப்பு வாக்குகளை மீள எண்ண வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளரிடம் கோரிக்கை ஒன்றினை முன்வைக்கவுள்ளதாக தெரிவித்தார்.

விருப்பு வாக்குகளுக்கமைய ஜகத் குமாரவுக்கு 9 ஆம் இடம் கிடைத்துள்ள நிலையில் முதலில் வெளியிட்ட விருப்பு வாக்கு எண்ணிக்கை மற்றும் உத்தியோகபூர்வ முடிவுகளுக்கான பட்டியலுக்கும் இடையில் வித்தியாசம் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த 17 ஆம் திகதி தேர்தல் முடிவுகள் எங்களுக்கு 19 ஆம் திகதி அதிகாலை 2 மணிக்கே வழங்கினார்கள். அந்த சந்தர்ப்பத்தில் நான் 29 ஆயிரத்து 702 விருப்பு வாக்குகளை பெற்றிருந்தேன்.

எனினும் கடந்த 31 ஆம் திகதி இரண்டு வாரங்களுக்கு பின் வெளியாகிய முடிவுகளுக்கமைய நான் 30 ஆயிரத்து 402 விருப்பு வாக்குகளை பெற்றிருந்தேன் என தெரிந்துகொண்டேன். 700 விருப்புகள் அதிகமாக பெற்றிருந்தேன்.

எனவே அதன் காரணமாக தெளிவாகியுள்ளது. நாங்கள் சந்தேகித்ததனை போன்று விருப்பு வாக்குகளை எண்ணும் போது ஏதோ ஒரு சில தவறுகள் இடம் பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நிதி அமைச்சர் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்

(கொழும்பு)

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

ஜனாதிபதி முன்னிலையில் நாட்டின் நிதி அமைச்சராக நேற்று முன்தினம் பகல் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட ரவி கருணாநாயக்க கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் நிதி அமைச்சில் அவர் கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

நிதி அமைச்சின் செயலாளர் ஆர்.எச். எஸ். சமரதுங்க உள்ளிட்ட சிலர் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

100 நாட்கள் அரசாங்கத்திலும் ரவி கருணாநாயக்கவே நிதி அமைச்சராக கடமையாற்றியிருந்தார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ரவி கருணாநாயக்க கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வாரம் ஒரு தகவல்

### விஷப் பரீட்சை

"சேர்....உங்களுக்கு என்ன ஆச்சு?"

"என்ன சொல்றீங்க?"

"கல்யாண மண்டபத்துக்கு வந்தீங்க.... சரி; முதல் பந்தியில் உட்கார்ந்து சாப்பீட்டீங்க... சரி; சாப்பிட்டு வெற்றிலை பாக்கு போட்டீங்க... சரி; திடீரென்று பைத்தியம் பிடித்தது மாதிரி சொல்லாமல் கொள்ளாமல் இப்படி ஓடி வாறீங்களே என்ன விடயம்?"

"ஹி அதுவா? எனக்குத் தேனீயைக் கண்டால் பயம்! கொட்டினால் வலி தாங்க முடியாது. அங்கே பந்தல் முகப்பில் நின்று கொண்டிருந்தபோது ஒரு தேனீ வந்து என் முகத்துக்கு நேராகப் பறந்ததைப் பார்த்துவிட்டேன். அதுதான் பறந்து வந்துவிட்டேன்."

தேனீ கொட்டினால் வாதநோய்க்கு நல்லது சேர்"

"அப்படித்தான் சொல்வது வழக்கம். அது உண்மையா?"

"லண்டன் விஞ்ஞானிகள் தேனீ விஷத்திலிருந்து Peptide 401 என்ற மருந்தைத் தயாரித்திருக்கிறார்களே"

"அப்பாடியா?"

"ஆமாம். மூட்டுவலிக்கு கார்டிசோன் மாதிரி சில மருந்துகளைக் கொடுப்பது வழக்கம். அதை யெல்லாம் விட இது நூறு மடங்கு சக்தி வாய்ந்ததாக இருக்கிறதாம்."

"நீங்கள் சொல்வதெல்லாம் சரி. அதற்காக தேனீயைக் கூப்பிட்டு கொட்டு என்று சொல்லும் அளவுக்கு நமக்குத் துணிச்சல் கிடையாது சேர்"

"இருந்தாலும் நீங்கள் இப்படிப் பயப்படக்கூடாது சேர். அங்கே கல்யாண வீட்டில் என்னமோ ஏதோ என்று எல்லோரும் பயந்து விட்டார்கள். என்ன வேகமாக ஓடி வந்துவிட்டீர்கள்.

"சரி... நான் தான் அப்பாடி ஓடி வந்தேன். நீங்கள் ஏன் பின்னால் இப்பாடி ஓடிவரவேண்டும்?"

நீங்கள் போட்டிருக்கும் செருப்பு என்னுடையது. அதற்காகத்தான் நான் ஓடிவந்தேன்."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## கோத்தா மீது அன்பு அதிகம்

**அதனால் அவரை காப்பாற்ற முனைந்தேன் என்கிறார்**

கோத்தபாய ராஜபக்ஷ மீது தாம் அளவு கடந்த அன்பு வைத்திருப்பதாகவும் அதனால் அவரைக் காப்பாற்ற எண்ணியதாக முன்னாள் பாதுகாப்பு நிறைவேற்று அதிகாரி காமினி ஜயசுந்தர வாக்குமூலம் அளித்துள்ளார் என கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி ஆணைக்குழு குறுக்கு விசாரணை மேற்கொண்டபோது தாம் தவறான தகவல்களை அளித்ததாக ஒப்புக்கொண்ட அவர், கோத்தபாய ராஜபக்ஷ மீது தாம் வைத்திருக்கும் அன்பு மற்றும் அளவு கடந்த மரியாதை நிமித்தமாக அவரை பாதுகாக்க எண்ணியதாக தெரிவித்தார்.

இதனிடையே ஐவர் விசாரணைக் குழுவில் ஆஜராகுமாறு கோத்தபாய மற்றும் முன்னாள் அரசாங்க அதிகாரிகள் எட்டு பேருக்கு மனு அனுப்பியுள்ளனர்.

கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக பல குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன, குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலின் போது 550 ரக்ன லங்கா பாதுகாப்பு அதிகாரிகளை தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுத்தியது, இராணுவ ஆயுதங்களை அவன்ட் கார்ட் பாதுகாப்புப் படையினருக்கு இலவசமாக வழங்கியது மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினரை ரக்ன லங்கா பாதுகாப்பு சேவைக்காக பயன்படுத்தியது உள்ளிட்டவை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஊழல் மற்றும் முறைகேடுகள் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணையின் போது தவறான தகவல்களை அளித்த காமினி ஜயசுந்தர மீது ஏன் வழக்கு தொடுக்கக்கூடாது என காரணம் கேட்டு அரசாங்கம் மனு ஒன்றை அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நெல் சந்தைப்படுத்தல் குறித்து விசேட கவனயீர்ப்பு பிரேரணை

**ஜே.வி.பி.நடவழிக்கை**

விவசாயிகளின் நெல்லை சந்தைப்படுத்தல் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து நாடாளுமன்றத்தில் விசேட கவனயீர்ப்புப் பிரேரணையொன்றை முன்வைக்க ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது.

நாடு முழுவதும் விவசாயிகள் தங்களின் நெல் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் கடுமையான நடைமுறைச்சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதன் காரணமாக விவசாயிகள் பெரும் பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. எனவே இது தொடர்பாக நாடாளுமன்ற நிலையியற் கட்டளை 23/2 விதியின் கீழ் விசேட கவனயீர்ப்பு பிரேரணையொன்றை முன்வைக்க ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க முடிவு செய்துள்ளார்.

இதன்போது நெல் கொள்வனவிற்கான உத்தரவாத விலை மற்றும் நெல்கொள்வனவு நிலையங்களின் எண்ணிக்கை போன்ற விபரங்களை பகிரங்கப்படுத்துமாறு அரசாங்கத்திடம் அவர் கோரிக்கை முன்வைக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் மூலம் விவசாயிகள் மத்தியில் தனக்குள்ள செல்வாக்கை அதிகரித்துக் கொள்ளும் நடவடிக்கையில் ஜே.வி.பி. இறங்கியுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சறுக்குமா? ஜெயிக்குமா? புதிய பாராளுமன்றம்

...எனவே, சாட்சிகாரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழுவதே மேல் என எண்ணிய மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவுக்கு கடிதம் எழுதி ஊழல் வழக்கில் இருந்து தன்னை காப்பாற்றும்படி கெஞ்சுகின்ற நிலைமைக்கு ஆளாகியுள்ளார். பாராளுமன்ற அமர்வில் சாதாரண உறுப்பினராக தற்போது அமர்ந்திருக்கின்றார்.

இதற்கு அடுத்தப்படியாக நிதி முறைகேடு குறித்து விசாரணை நடத்த மைத்திரிபால சிறிசேனா அரசு உத்தரவிட்டமையினை தொடர்ந்து மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் 20 அமைச்சர்கள் கோடிக்கணக்கில் பணத்தை சுருட்டி உள்ளமை தெரிய வந்தமை குறிப்பிடத்தக்கது..

இதுகுறித்து அமைச்சக செயலாளர் அஜித் ஜய சுந்தர கூறுகையில்,

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் பதவியில் இருந்த 20 அமைச்சரகள் ரூ.8000 கோடி மோசடி செய்திருப்பதற்கான ஆதாரங்களும், சாட்சியங்களும் கிடைத்துள்ளன. இதனையடுத்து அவர்கள் மீது இலஞ்சம், ஊழல், முறைகேடு உள்ளிட்ட பிரிவுகளின் கீழ், விசாரணை நடத்த ஆணைகுழுவுக்கு அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது என்றார்.

இதில் மாத்தறை, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி, புத்தளம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த அமைச்சர்கள் சிக்கியுள்ளன்ர். இவர்களுக்கு எதிராக வழக்கு தொடரவும் அரசு முடிவு செய்துள்ளது என்று அஜித் ஜெய சுந்தர தெரிவித்துள்ளார்.

தற்போது இந்த விவகாரம் இலங்கையில் மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய நிலையில் இவர்களுக்கு எதிராக சட்டம் முறையாக செயற்பட ஆரம்பிக்கும் பொழுது தேசிய அரசாங்கம் நிலைக்குமா? மேலும், 58 முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக ஊழல் மோசடி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் மோசடிகளில் ஈடுபட்டமை தொடர்பிலேயே இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து பார்க்க வேண்டிய மற்றுமொறு முக்கிய விடயம் என்னவென்றால், அழிந்தது விடுதலை புலிகள் மாத்திரமே, அவர்களது கோரிக்கை இன்றுமட்டுமல்ல என்றுமே அழியாது.

ஆகவே, பல வருடகாலமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது மானில சுயாட்சி கோரிக்கையினை கேட்கின்றது. இதனை பெறும் வரையில், எவ்வித அமைச்சு பத்விகளையும் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை.

தற்போது ஓரளவு ஜனநாயகம் மலர்ந்துள்ள இலங்கையில் அனைத்து இன மக்களின் தேவைகளை பூரத்தி செய்ய வேண்டிய கட்டயாத்தில் மைத்திரியும், பிரதமர் ரணிலும் உள்வாங்கப்பட்டுள்ளார்கள்.

இதனை இவர்கள் மேற்கொள்ள தவறும் சந்தர்ப்பத்தில், சர்வ தேசத்தின் பாரிய அழுத்தங்களுக்கு உள்வாங்கப்படுவார்கள் என்பது வெளிப்படையுண்மையாகும்.





தமிழர்களை இரண்டாம்பட்சமாக பார்க்கின்ற எதிர்த்தரப்பு, குறிப்பாக மகிந்த, விமல் வீரவனச, வாசுதேவ நாணயக்கார போன்றவர்கள் உள்வாங்குப்பட்டுள்ள இத் தேசிய அரசாங்கம் தமிழரின் பிரச்சினைகளுக்கு எப்படி பதில் அளிக்கப்போகின்றது.




அவர்கள் கடைசிவரைக்கும் அதனை ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கப் போவது இல்லை.

காரணம் எதிர்கட்சி தலைமைத்துவத்தின்ன தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கவே பல சூழ்ச்சிகளை மேற்கொள்ளும் சிலர், சுயாட்சி கோரிக்கைக்கு எவ்வகையில் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்பது கேள்விக்குறியாகும்.

இதற்கு அடுத்தப்படியாக பார்க்க வேண்டியது, இலங்கையில் கடந்த அரசாங்கத்தில் முஸ்லீம் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட அம்சங்கள். குறிப்பாக பள்ளிவாசல் உடைப்புக்கள் [illegible] கொலை போன்றவற்றுக்கு தேசிய அரசாங்கம் எத்தகைய முன்னெடுப்புக்களை எடுக்கப் போகின்றது.

அதற்கு அடுத்தப்படியாக பார்க்க வேண்டியது வெளிநாட்டு விவகாரங்கள்.

குறிப்பாக கடந்த பத்து வருடமாக சீனாவின் செல்லக் குழந்தையாக இருந்த இலங்கையானது தற்போது முதலாளித்துவ நாடுகளுடன், தனது தொடர்புகளை வலுப்படுத்திக் கொள்ளும் என்பதில் ஐயமில்லை. காரணம் ரணில் ஒரு முதலாளித்துவ சிந்தனை போக்கு கொண்டவர் என்பது அனைவருக்கும் தெரியும்.



ஆகவே முதலாளித்துவ நாடுகளுடன் உறவுகளை வலுப்படுத்தும் போது, தேசிய அரசாங்கம் நிலைக்குமா? எதிர்கட்சி அதற்கு வழிவகுக்குமா?




இன்னுமொரு முக்கிய விடயம் என்னவென்றால், கடந்த அரசாங்கத்தில் நிகழ்ந்த ஊடக கொலைகளுக்கு கட்டாயம் பதில் அளித்தே தீர வேண்டும்.

சுகிர்தராஜன் திருகோணமலையில் கொல்லப்பட்டார். நடேசன் கொல்லப்பட்டார். பிரகீத், லசந்த போன்ற சிங்கள ஊடகவியலாளர்களும் இலங்கை அரசின் இலக்கிற்கு ஆளாகினர். குறிப்பாக லசந்த சுட்டுக்கொல்லப்பட்டார். பிரகீத் எக்லியனகொட காணாமல் போகச் செய்யப்பட்டார்.

ஊடக நிறுவனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன.

எனவே கடந்த காலத்தில் நிகழ்த்தப்பட்ட ஊடக சுதந்திர மறுப்புக்களுக்கு பொறுப்புக் கூறும் விதமாக அந்த சம்பவங்களுடனும் கொலைகளுடனும் தொடர்புடைய குற்றவாளிகளை புதிய அரசு சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும்.



இதற்கு எதிர்தரப்பு எப்படி பதில் சொல்லப் போகின்றது?

கொள்கை அடிப்படையில் பல கோணங்களில் பிளவடைந்துள்ள இலங்கை அரசியல்வாதிகள், இனி தம்மை எவ்வாறு மாற்றிக் கொள்ளப் போகின்றார்கள் என்பது எதிர்காலத்தினை பொறுத்ததாகும்.

குறிப்பாக, பாராளுமன்றத்தில் உதயகம்மன்பில, விமல் வீரவனச, மகிந்த ராஜபக்ஷ, வாசுதேவ நாணயக்கார, டிலான் பெரேரா போன்றவர்களின் சுயரூபங்கள் அனைவருக்கும் தெரியும்.

இவர்களை எதிர்தரப்பாக கொண்டமையக்கூடிய இலங்கையின் புதிய பாராளுமன்றம் சறுக்குமா? ஜெயிக்குமா? என்பதனை எதிர்காலமே தீர்மானிக்கும்.

குடும்ப ஊழல்களை பாதுகாக்க களம் புகுந்திருக்கும் மகிந்த ஒருபுறம், மகிந்தவினை பாதுகாக்க, எதனையும் செய்ய தயாராக இருக்கும் விமல் வீரவனச ஒருபுறம், எப்படி பார்த்தாலும் தேசிய நல்லிணக்த்திற்கு இவர்கள் எதிர்புறம்.

இவர்களுக்கு மத்தியில் உண்மையான பௌத்த நெறியினை பின்பற்றும் மைத்திரியும், முதலாளித்துவ சிந்தனைப் போக்கினைக் கொண்டுள்ள பிரதமர் ரணிலும், புதிய அரசியலமைப்பு ஒன்றின் ஊடாக, இலங்கையின் போக்கினை மாற்றியமைத்தால், தேசிய நல்லிணக்கத்தினை ஏற்படுத்தினால், இலங்கையின் அரசியல் வரலாற்றில் இருவருமே ஜாம்பவான்களே.

**-திவ்யநாதன்-** (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் நெறி விழா

நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவ காலத்தையொட்டி இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தி வருகின்ற யாழ்.மாவட்ட அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள்நெறி விழா தினமும் பிற்பகல் 3மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இதற்கமைய இன்று ஞாயிற்றுக்கிழமை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள கணக்காளர் எம்.ஜி.காண்டீபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக சுகாதார, சுதேச மருத்துவ, சமூக சேவைகளும் புனர்வாழ்வும், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதன்போது வரவேற்புரையினை அபிவிருத்தி உதவியாளர் திருமதி.ந.கலையமுதா நிகழ்த்தவுள்ளார்.

கலைநிகழ்வுகளாக உடுப்பிட்டி அம்பாள் சமேத கல்யாண சுந்தரர் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வழங்கும் பண்ணிசை மற்றும் வி.சர்மினி-பேச்சு, அமுதசுரபி அறநெறிப்பாடசாலை மாணவி அ.அபிநயா-பேச்சு, தெல்லிப்பழை துர்க்கை அம்மன் அறநெறிப்பாடசாலை மாணவிகளான தி.அட்சயா, மா.தர்சினி, அ.அபிநயா ஆகியோரது பேச்சு, மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வழங்கும் குழுநடனம் மற்றும் கோ.நிசாந்தினி, அ.அனுஜா -தனிநடனம், இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வழங்கும் வில்லிசை, நாடகம் என்பன இடம்பெறவுள்ளன. (இ-5)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை பின்வரும் பிரதேசங்களில் மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்குமென இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது.

அந்தவகையில் 06.09.2015 ஞாயிறு காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணி வரை யாழ்.பிரதேசத்தில் பொற்பதி, கோண்டாவில் வோட்டர் வேர்க்ஸ், கோண்டாவில் ஒரு பகுதி, இராச வீதி, கோப்பாய் இராணுவ முகாம், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆகிய பிரதேசங்களிலும்,

08.09.2015 செவ்வாய் காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வவுனியா பிரதேசத்தில் பறயனாலங்குளத்திலிருந்து நேரியகுளம் வரை, செட்டிக்குளம் வைத்தியசாலை, பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் வி.சி.கே ஆலை, வலயம் 01, 02, 03 மற்றும் 04 ஆகிய பிரதேசங்களிலும்,

09.09.2015 புதன் காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை யாழ்.பிரதேசத்தில் அராலி சரஸ்வதி வித்தியாலயத்தடி, கருப்பிட்டிப் பிள்ளையார் கோவிலடி, அராலித் துறைமுகம், களவாத்துறை, அராலி வடக்கு, V.C ஆனைக்கோட்டை பிரதேசம், காக்கைதீவு, சாவற்கட்டு, கொக்குவில் மேற்கு ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் செக்கட்டிப்புலவு பிரதேசத்திலும் மன்னார் பிரதேசத்தில் வட்டுப்பித்தன்மடுவிலிருந்து புதுக்காமம் வரை ஆகிய பிரதேசங்களிலும்,

10.09.2015 வியாழன் காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை யாழ்.பிரதேசத்தில் ஆனைக்கோட்டை, நவாலி, காக்கைதீவு, சாவற்கட்டு, கொக்குவில் மேற்கு ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் கண்டாவளை, பரராயசிங்கம் தோட்டம், கொக்குத்தொடுவாய் வடக்கு, கொக்குத்தொடுவாய் மத்தி, கருநாட்டுக்கேணி சந்தி, கொக்குளாய் வைத்தியசாலை, வன்னிவிளாங்குளம், அம்பாள்புரம், வவுனிக்குளம், ஒட்டறுத்தகுளம், பாலிநகர், சிவபுரம், செல்வபுரம், பாண்டியன்குளம், நட்டாங்கண்டல், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபை (பாண்டியன்குளம்), அனிஞ்சியங்குளம், மல்லாவி, பாரதிநகர், மல்லாவி நீர்ப்பாசனசபை, திருநகர், யோகபுரம், ஆலங்குளம், துணுக்காய், தெனியங்குளம், கல்விளான், தென்னியங்குளம், உயிலங்குளம், பிள்ளையார் அரிசி ஆலை, 65ம் இன்பன்றி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் செக்கட்டிப்புலவு பிரதேசம், ஆறுமுகத்தான் புதுக்குளம், மாளிகை, நொச்சிக்குளம், மாமடுவிலிருந்து மகாகச்சக்கொடியவரை, பொகவஸ்வேவ, சளலங்கம, நமலகம, பிரப்பன்மடு, CEC கல்லுடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும்,

11.09.2015 வெள்ளி காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை யாழ்.பிரதேசத்தில் அராலி சரஸ்வதி வித்தியாலயத்தடி, கருப்பிட்டிப் பிள்ளையார் கோவிலடி, அராலித் துறைமுகம், களவாத்துறை, அராலி வடக்கு, V.C ஆனைக்கோட்டை பிரதேசம், காக்கைதீவு, சாவற்கட்டு, கொக்குவில் மேற்கு ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் முறிகண்டி, அக்கராயன், ஜெயபுரம், கோணாவில், ஸ்கந்தபுரம், நாகபடுவான், குமுழமுனை, நாச்சிக்குடா, முழங்காவில், வன்னேரி, ஆனைவிழுந்தான், வலைப்பாடு, வேரவில், 651 ஆவது படைப்பிரிவு முகாம், 652 ஆவது படைப்பிரிவு முகாம், நாச்சிக்குடா கடற்படை முகாம், 2 ஆவது கொமாண்டோ படைப்பிரிவு, இயாஸ் மொகமட் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் மாமடுவிலிருந்து மகாகச்சக்கொடியவரை, பொகவஸ்வேவ, சளலங்கம, நமலகம, பிரப்பன்மடு, CEC கல்லுடைக்கும் ஆலை, நவகம பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (இ-9)

## இசைப்பேருரை

நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவகாலத்தையொட்டி நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில கந்தபுராணத் தொடர் இசைப் பேருரை தினமும் மாலை 6.45 மணிக்கு நல்லை ஆதின குருமூர்த்த ஆலய மண்டபத்தில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மாவினால் வழங்கப்பட்டு வருகின்றது.

இன்று ஞாயிற்றுக்கிழமை வீரபாகு தேவர் தூது எனும் கந்தபுராணத் தொடர் இசைப் பேருரை இடம்பெறும். (இ-5)

## தெய்வீக இசையரங்கு

நல்லூர்க் கந்தன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தி வருகின்ற தெய்வீக இசையரங்கு தினமும் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள வயலின் இசை நிகழ்வில் வயலின்-உ.இராதாகிருஸ்ணன், உடன் வாசிப்பவர்-திருமதி.சைந்தவி நிஷாகரன், மிருதங்கம்-இ.ரகுகுலன், கெஞ்சிரா- ப்ரம்மஸ்ரீ வ.ரமணா, கடம்-கு.ரவிசங்கர், தபேலா-எஸ்.விமல்சங்கர் ஆகியோர் வழங்கும் இசை அரங்கு இடம்பெறவுள்ளன. (இ-5)

## விநாயகர் சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான விநாயகர் சதுர்த்தி விரதம் எதிர்வரும் 17 ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றையதினம் பிற்பகல் 3.45 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை கலட்டி எச்சாட்டி மஹாமாரி அம்மன் ஆலயத்தில் இருந்து அடியவர்களின் பால்குடபவனி இடம்பெறும். அத்துடன் பால் குட பவனிக்கான பதிவுகள் இடம்பெற்றுவருகிறது என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (இ-5)

## குடமுழுக்குப் பெருவிழா


(கரணவாய்)

வல்வெட்டித்துறை சிவபுண்ணிய பதியுறை உலகுடை விநாயகப் பெருமான் திருக்கோவில் மகா குடமுழுக்குப் பெருவிழா நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெறவுள்ளன. (இ-5-60)

## கணபதி ஹோமம்

(இருபாலை)

ஆவணிச் சதுர்த்தியை முன்னிட்டு யாழ்.மணிக்கூட்டு வீதி அரசடி விநாயகர் ஆலயத்தில் கணபதி ஹோமம் விழா எதிர் வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8மணிக்கு ஆரம்பமாகி மு.ப 10.30மணி வரை நடைபெறவுள்ளன. (இ-5-136)




## எம்மைக்காப்பாய்

துன்பம் துடைக்கின்றான் தூயோன் குமரேசன்
என்று நினைக்கின்றார் எம்மக்கள்-இன்று வரை
உன்னையே நம்பி உலகிலுயிர் வாழ்பவரை
அன்னையென என்றும் அணை

சி.வெற்றிவேலு
வட்டுக்கோட்டை

## நிலாப்போல தோன்றுவான் நினைக்கின்ற மனத்திலே

சீர்பூத்த நல்லூரான் திருப்பதிக்கு ஓய்வேயில்லை-அங்கு
நாள்தோறும் பக்தர் கூட்டம் போகா நாளேயில்லை
இனம் மதம் மொழியின்றி பக்தர்கூட்டம் நாடி வந்து
மனம் மொழி மெய்யில் கொண்டு வழிபட்டுப் போகுது
மலை மகள் குமரனின் நிலை பெயரோங்கி தெங்கும்
கலைக் கோவில் நல்லூர்க் கந்தன் கருணையில் சிறந்த வள்ளல்
இயழிசை நாடகம் முருகனின் தாண்டவம்
உடல் பொருள் ஆவியில் வழிபடும் ஆண்டவன்
விழாக்கோலம் கொண்டவன் விளங்கிடும் நாளிலே
நிலாப்போல தோன்றுவான் நினைக்கின்ற மனத்திலே

சி.ஜெகன்
பெரியபுலோ

## உனையன்றி துணையில்லை

கன்னிப் பெண்களின்
காவலனே
வேல் கொண்டு
வினை தீர்ப்பவனே
யாழ்ப்பாணத்தின்
அடையாளமே
அலங்காரக் கந்தன்
நீதானே
வேலவனே உன் கா்லடியே
சரணமப்பா
உனை விட எனக்கு
வேறு துணை யாரப்பா?

மருதங்கேணி வே.தரணிகா

## நல்லைக் கந்தன் நனிவிருத்தம்

தோண்டுவ ருள்ளந் தோண்டித்
துளிர்விடும் ஞானந் தன்னைக்
காண்டவர் கண்ணில் நின்று
கருத்தெனத் தோன்றும் வேலே
ஆண்டிடும் கலியுகத்தில்
அற்புத லீலை செய்து
வேண்டுவர் வேண்டும் யாவும்
விழைத்திடு நல்லைக் கந்தா

கலாபூஷணம் சந்தக் கவிஞர்.நவ.பாலகோபால்

சரவணா ரெக்ஸ்
SARAVANA TEX



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிமனையினுள் நுழைகின்ற யானைக்கூட்டங்கள் அட்டகாசம்

## பயன்தரும் மரங்களை நாசப்படுத்துவதாகப் பொதுமக்கள் குற்றச்சாட்டு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு முத்தையன் கட்டு கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகமாக காணப்படுவதாக பிரதேச வாழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த கிராமத்தினுள் கடந்த வியாழக்கிழமை இரவு குடிமனையினுள் நுழைந்த யானைக்கூட்டம் பயன்தரும் மரங்கள், நெற் பயிர்ச் செய்கை ஆகியவற்றை நாசமாக்கியுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இரவு வேளைகளில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் நுழையும் யானைகள் பயன்தருமரங்கள் மற்றும் கட்டடங்களையும் சேதமாக்கியுள்ளதாகவும் இதே வேளை இரவு வேளைகளில்வீடுகளில் வசிப்பதற்குகூட அச்சமடைந்துள்ளதாகவும் இந்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகளிடம் முறையிட்ட போதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லைஎனவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் தமது பிரதேசங்களில் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறவில்லை எனக் குறிப்பிட்ட மக்கள், போருக்கு பின்னரே இவ்வாறான சம்பவங்கள் தொடர்வதாகவும் கூறுகின்றனர்.

யானைகளைத் துரத்துகின்ற போதிலும் அவை நகருவதில்லை என்றும் மக்கள் கவலை தெரிவிப்பதுடன் இவ்யானைகள் தென்பகுதியிலிருந்து கொண்டு வந்தே தமது பிரதேசத்தில் விடப்பட்டவை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை யானையினைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (2-281)

# மாற்றம் வர வேண்டுமாகில் சர்வதேச விசாரணை அவசியம்

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(குருமன்காடு)

**இந்த நாட்டில் ஒரு மாற்றம் வரவேண்டுமாக இருந்தால் கடந்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் தொடர்பாக சர்வதேச பொறிமுறையுடன் கூடிய விசாரணை அவசியம் என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.**

வவுனியா பிராந்திய சுகாதார பணிமனையின் கட்டடத் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது. இதனைத் திறந்து வைத்து உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய சூழ்நிலையில் அபிவிருத்தியை ஒரு பக்கம் பார்த்துக் கொண்டிருக்கும் அதேவேளை எங்களுடைய தமிழ் பேசும் மக்களின் உரிமைப்போராட்டம் ஒரு முக்கியமான இடத்தை எட்டியுள்ளது.

இன்று இலங்கையில் தேசிய அரசாங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. 38 வருடங்களுக்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சி பதவியை பெற்றிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் பெற்றுக்கொண்டுள்ளார்.

எனவே, இந்த புதிய அரசியல் கலாசாரம் எங்களுடைய தமிழ் பேசுகின்ற மக்களினுடைய உரிமைப் போராட்டத்தையும் உரிமைகளையும் பெற வேண்டிய காலமாக எதிர் வரும் 5 வருடங்கள் அமையப் போகிறது.

அப்படி ஒரு மாற்றம் வரவேண்டுமாக இருந்தால் இந்த நாட்டிலே கடந்த காலத்தில் இடம்பெற்ற மனித குலத்திற்கு எதிரான யுத்தக் குற்றங்கள் தொடர்பாக விசாரணை செய்யப்பட வேண்டும். இவை பற்றி பல விடயங்கள் இப்போது பேசப்பட்டுக்கொண்டிருக்கின்றது. தமிழ் மக்கள் கடந்த காலத்தில் பல தடவை ஏமாற்றப்பட்டுள்ளார்கள். எனவே சர்வதேசத்தின் பொறிமுறையுடன் கூடிய தமிழ் இனத்திற்கு எதிரான மனித உரிமை மீறல்களுக்கு எதிராக விசாரணை செய்யப்பட வேண்டும்.

சர்வதேச விசாரணை மூலம் இதற்கு தீர்வு கிடைக்க வேண்டும். தமிழ் மக்களின் தீர்வுக்காக மாகாண சபையும் பாராளுமன்றமும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். இதன் மூலம் ஒன்றுபட்ட நாட்டுக்குள் நாங்களும் ஒரு தேசிய இனமாக வாழ வேண்டும் எனவும் தெரிவித்தார். (2-250)




# கழிவுநீர் வாய்க்கால்களில் நீர் தேங்கி நின்று துர்நாற்றம்

(வவுனியா)

வவுனியா 2 ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள கழிவுநீர் வாய்க்கால்களில் நீர் தேங்கி நிற்பதால் துர்நாற்றம் வீசுவதுடன் அவ் வீதியூடாக பயணிக்கும் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

இவ்வாய்க்கால்களினூடாக கழிவு நீர் வழிந்தோடமுடியாமல் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுகின்றது.

அத் துடன் வாய்க்காலினுள் குப்பைகள் மற்றும் சிறுபுதர்கள் மூடி வளர்ந்துள்ளமையால் அவற்றினை துப்புரவு செய்ய எவரும் முன்வரவில்லையென பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

தனியார் நிறுவனங்கள், ஹோட்டல்கள் என்பன காணப்படுவதுடன் தூர இடங்களுக்குச் செல்லும் தனியார் பேருந்து தரிப்பிடமும் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வீதி வவுனியா நகரின் பிரதான சாலைகளில் ஒன்றாக காணப்படுவதுடன் இவ்வீதியை பொது மக்கள் தனியார் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் அதிகம் பயன்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனமெடுத்து வாய்க்கால்களின் ஊடாக கழிவுநீர் வழிந்தோடுவதற்கு ஏற்ற வகையில் துப்புரவு பணியினை மேற்கொள்ள வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-281)



வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.இந்திரராசாவின் இவ்வாண்டிற்கான மூலதன நன்கொடை நிதியில் இருந்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான குழாய்க் கிணறு ஒன்று வவுனியா செட்டிகுளம் கப்பாச்சிக் கிராமத்திற்கு அமைத்துக் கொடுக்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.

# வஞ்சியன்குளம் கிராமத்தில் பயறுச் செய்கை அறுவடை ஆரம்பம்





(பனிக்கன்குளம்)

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வஞ்சியன்குளம் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட பயறுச் செய்கை அமோக விளைச்சலைக் கண்டுள்ளது.

மன்னார் நானாட்டனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வயல்விழாவில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டு அறுவடையை ஆரம்பித்து வைத்துள்ளார்.

பெரும்போகத்தில் நெற் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளில் பெரும்பாலானோர் சிறுபோகத்தில் ஈடுபடுவதில்லை. நெற்செய்கைக்கு அதிகளவில் நீர் தேவைப்படுவதால் சிறுபோகத்தில் அரிதாகவே நெற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

இதனைக் கருத்திற் கொண்டும் பெரும்போகத்துக்கும் சிறுபோகத்துக்கும் இடைப்பட்ட காலத்திலும் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள வேண்டியும் வடக்கு விவசாய அமைச்சு மறுவயற்பயிர்களின் செய்கையை ஊக்குவித்து வருகிறது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடையின் கீழ் மன்னார் மாவட்டத்தில் 100 விவசாயிகளுக்கு ஏறத்தாழ 100 ஏக்கரில் மறுவயற்பயிர்களில் ஒன்றான பயறு செய்கையை மேற்கொள்வதற்குரிய விதை பயறு கடந்த ஜுன் மாதம் வழங்கப்பட்டிருந்தது.

இரண்டு மாதப் பயிரான பயறு ஒரு தடவை நீர்ப்பாசனத்துடன் ஏக்கருக்கு 400 கிலோ என்ற அளவில் இப்போது பாரிய விளைச்சலைக் கொடுத்திருக்கிறது.

பயறு அறுவடை விழாவுக்கு வந்திருந்த விவசாய அமைச்சரிடம் விவசாயிகள், தனியார் வர்த்தக நிறுவனங்கள் குறைந்த விலைக்குப் பயறை கொள்வனவு செய்ய முயல்வதாகக் குறிப்பிட்டிருந்தனர்.

இதையடுத்து மன்னார் மாவட்ட [illegible] கூட்டுறவு அபிவிருத்திப் பிரதி ஆணையாளருடன் கலந்துரையாடி ஒரு கிலோ பய்றுக்கு 200 ரூபா நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதுடன் மன்னார் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாகப் பயறைக் கொள்வனவு செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வயல் விழாவில் வடமாகாண சபை உறுப்பினர்கள் வைத்திய கலாநிதி ஞா.குணசீலன், சூ.பி.சிராய்வா, விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், பிரதி விவசாயப் பணிப்பாளர் தெ.யோகேஸ்வரன் உட்பட அதிகளவிலான விவசாயிகள் கலந்துகொண்டிருந்தார்கள்.

இதனைத் தொடர்ந்து கற்கிடந்த குளம் கிராமத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ளவீட்டுத்தோட்டசெய்கைகளையும் வடமாகாண விவசாய அமைச்சர் தலைமையிலான குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டதோடு, குறித்த தோட்டத்தில் கிடைக்கின்ற [illegible] மேற்கொள்வதாகத் தெரிவித்தனர். (2-281)

# போக்குவரத்து பாலத்தை சீரமைத்து பயணத்தை இலகுபடுத்துங்கள்

## பொதுமக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)



கிளிநொச்சி கனகபுரம், உருத்திரபுரம் கிழக்கு ஆகிய கிராமங்களின் ஊடாக ஊடறுத்துச் செல்லும் பிரதான கழிவு வாய்க்காலின் பிரதான போக்குவரத்துப் பாலம் பல மாதங்களுக்கு முன்னர் சேதமடைந்து காணப்படுவதால் அதனூடான போக்குவரத்தில் ஈடுபடுகின்ற பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

இவ்வீதிக்கான பாலம் சேதமடைந்து இருப்பதாலும் உருத்திரபுரம் மயான வீதி பாலம் அமைக்கப்பட்டாமல் இருப்பதாலும் சேதமடைந்துள்ள பாலத்தின் மேற்படி வீதிவழியாகவே அனைவரும் பயணத்தை தொடர்ந்த வண்ணமுள்ளனர்.

அத்துடன் உருத்திரபுரம் வைத்தியசாலை செல்லும் நோயாளர்கள், பாடசாலை செல்லும் மாணவர்கள் எனப் பல தரப்பினரும் இவ்வீதியிலுள்ள பாலத்தின் வழியாகப் பயணிக்கின்றனர்.

கிளிநொச்சி நீர்ப்பாசனத்திணைக்களத்தின் பராமரிப்பில் உள்ள இப்பாலத்தை தற்காலிகமாக புனரமைத்து போக்குவரத்துக்கு இலகுவான முறையில் புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதனுடைய இலட்சியம் என்னவென்று அறிந்து கொண்டால் போதும். அதனைக் கொண்டே அவனை அறிந்து கொள்ளலாம். -ஹேராம்ஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்களின் பாதுகாப்பு அரணாக சர்வதேச விசாரணை இருக்க முடியும்

சர்வதேச விசாரணை என்பதை சிலர் சர்வதேசத்தில் நடக்கும் விசாரணை என்று நினைக்கின்றனர் போலும். அரசுக்குக் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றுவதற்காக இவ்வாறான திருகுதாளங்களை இவர்கள் செய்யலாம்.

ஆனால் உண்மைநிலை என்று ஒன்று உண்டு. அதாவது சர்வதேச விசாரணை என்பது சர்வதேசத்தால் இலங்கையில் நடந்த போர்க்குற்றம்-போரில் பாதிக்கப்பட்டவர்களின் வாக்குமூலம் என்பவற்றை பதிவு செய்து அதிலிருந்து தீர்ப்புக்கு வருவதாகும்.

இங்கு போரில் ஈடுபட்ட படைத்தரப்பிடமும் அதனோடு சம்பந்தப்பட்டவர்களிடமும் விசாரணை நடத்த வேண்டும். இவ்வாறான விசாரணை மூலம் சர்வதேசம் ஒரு தீர்ப்பை வழங்கும்-வழங்கவேண்டும்.

வன்னியில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் எனத் தமிழ் மக்கள் வலியுறுத்துவதன் நோக்கும் இரண்டு.

அதில் ஒன்று; உள்ளக விசாரணையில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்பது.

மற்றையது; சர்வதேச விசாரணை மூலம் இலங்கையில்; இலங்கை அரசு, தமிழின அழிப்பை 2009 ஆம் ஆண்டிலும் அதற்கு முந்திய காலத்திலும் செய்துள்ளது என்ற உண்மையைப் பதிவு செய்வது.

இந்தப் பதிவு ஒன்றுதான் தமிழர்களின் உரிமைகள் விடயத்தில் முதன்மையான சாட்சியமாக இருக்க முடியும். இதன் காரணமாகத்தான் சர்வதேச விசாரணை தேவை என்று தமிழினம் வலியுறுத்துகிறது. இதற்கு அப்பால், காலத்துக்குக் காலம் பதவிக்கு வருகின்ற சிங்கள ஆட்சியாளர்கள் எதிர்காலத்திலும் தமிழின அழிப்பில் ஈடுபடலாம். அதற்காக தென் பகுதியில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளைக் கட்டவிழ்த்தும் விடலாம். இத்தகையதொரு சம்பவம் நடக்க மாட்டாது என்பது போல தமிழ் அரசியல் தலைமையின் செயற்பாடுகள் உள்ளன.

இங்கு சர்வதேச விசாரணை என்பது நாட்டைக் காட்டிக் கொடுப்பது என்று பொருள் படாது. மாறாக போர்க்குற்றம் நடந்திருந்தால்-தமிழின அழிப்பு அரங்கேறியிருந்தால் அதனைச் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் எவரும் பின்னிற்கக்கூடாது.

இந்த நாட்டில் தமிழர்கள் பெரும்பான்மையாகவும் சிங்களவர்கள் சிறுபான்மையாகவும் இருந்து, வன்னியில் நடந்த அழிவு சிங்களவர்களுக்காக இருந்தால், சர்வதேச விசாரணை வேண்டாம் என்று சிங்களவர்கள் கூறுவார்களா என்ன?

ஆகவே, நாம் கூறுவதெல்லாம் போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும் என்பதுதான். இங்கு போர்க்குற்றவாளிகளைத் தண்டிப்பதை தடுப்பதும் மகா குற்றமாகும்.

அதிலும் ஒரு நாட்டில் இரு இனங்களுக்கு இடையிலான முரண்பாட்டில், ஆளும் இனம் சிறுபான்மை இனத்தைத் துவம்சம் செய்து விட்டு அதற்கான விசாரணையை ஆளும் தரப்பே செய்வதென்பது மடமைத்தனமானது.

ஆகையால் சர்வதேச விசாரணையை வலியுறுத்துவது தமிழ் மக்களினதும் சமய, பொது அமைப்புகளினதும் தலையாய கடமை.

இதற்காக கையெழுத்துப் போராட்டங்களை நடத்துவது அகிம்சை வழியிலான- ஜனநாயகத்தை மதிக்கின்றதான போராட்டம். இந்தப் போராட்டத்தை இழிவுபடுத்த நினைப்போர் முதலில் தாங்கள் ஆளும் வர்க்கத்திடம் அடிமைப்பட்டதை, முன்னைய ஜனாதிபதியின் முன் கைகட்டி நின்றதை ஒரு கணம் சிந்தித்து தங்களைத் திருத்த வேண்டும். இல்லையேல் தமிழ் மக்கள் திருத்துவார்கள்.

# எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பொதுச்செயலர் ஊடாக கோரவும்

## சபாநாயகர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் பதவி வேண்டும் என்றால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் ஊடாக உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுக்கப்பட வேண்டுமென சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கடந்த 3ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவராக இரா.சம்பந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

அன்றைய தினமே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களான வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, தினேஷ் குணவர்தன போன்றவர்கள் சபாநாயகரை சந்தித்து எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தேவை என்பதனை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடிதம் மூலம் அறிவிப்பதில் பயனில்லை.

அவ்வாறு கூட்டமைப்புக்கு அந்த பதவி வழங்கப்பட வேண்டுமாயின் அது குறித்து கூட்டமைப்பின் பொதுச் செயலாளரின் ஊடாக அறிவிக்கப்பட வேண்டுமென கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்குமாறு 55 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டு ஜனாதிபதி மற்றும் கட்சியின் பொதுச் செயலாளரிடம் ஆவணமொன்று ஒப்படைக்கப்பட்டதாக வாசுதேவ நாணயக்கார வார இறுதி சிங்களப் பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

விரைவில் மீளவும் பொதுச் செயலாளர் விஸ்வ வர்ணபாலவை சந்தித்து எதிர்க்கட்சித் தலைவர் குறித்த கடிதமொன்றை பெற்றுக்கொண்டு அதனை சபாநாயகரிடம் ஒப்படைக்க உத்தேசித்துள்ளதாக தெரிவித்தார். • (இ-7)

# ஆன்மிக அருளுரை

நல்லூர்க்கந்தன் ஆலய உற்சவ காலத்தையொட்டி யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் **இந்துவாக வாழ்வோம** செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்கிரத சைதன்யா சுவாமியினால் வழங்கப்பட்டு வருகின்ற ஆன்மிக அருளுரை தினமும் இரவு 7.15 மணி தொடக்கம் 8 மணி வரை நல்லூர் வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று ஞாயிற்றுக்கிழமை **கீதை காட்டும் பாதை** எனும் ஆன்மீக அருளுரை இடம்பெறும்.(இ-5)


**சின்மயா மிஷன்**

**நல்லூர் முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வலம்புரி பத்திரிகையின் இணை அனுசரணையுடன் இணைந்து நடத்தும் இந்துவாக வாழ்வோம் வினாவிடைப்போட்டி**

வினா: 10) a) சவால் எப்போது உருவாகின்றது?
b) சவால்களை எதிர் கொள்வதில் நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் யாவை?

**வினாக்களுக்கான விடைகளை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் நடைபெறும் இந்துவாக வாழ்வோம் கண்காட்சியைப் பார்வையிடுவதன் மூலம் அறிந்துகொள்ள முடியும்.**

# "இயேசுவிடம் மற்றவர்களை கொண்டு செல்லும் நண்பர்களாவோமா?"



யூத இனத்தைச் சேராத பிற இன மக்கள் வாழ்ந்த பகுதிகள் தீர், சீதோன், தெக்கப்பொலி ஆகும். இன்றைய ஞாயிறு பைபிள் செய்தியின்படி இயேசு அப்பகுதிகளுக்குச் சென்றார். அங்கே பிற இனத்தை சார்ந்த ஊனமுற்ற அதாவது காது கேளாதவரும் திக்கிப் பேசுபவருமான ஒருவரை இயேசுவிடம் கொண்டு வருகிறார்கள். இயேசு அந்த மனிதருக்குக் குணம் அளிக்கிறார். அந்த மனிதரிடம் இயேசு 'எப்பத்தா" என்று கூறினார். அதாவது 'திறக்கப்படு" என்பது தான் அதன்பொருள். எப்பத்தா என்று இயேசு சொன்னவுடன் அம் மனிதரின் காதுகள் திறக்கப்பட்டன, நாவும் கட்டவிழ்ந்தது, இந்தக் குணப்படுத்தலால் அம்மனிதர் உடனே திறந்த உள்ளம் கொண்டவரானார். அவரால் புதிய வழியில் மற்றவர்களோடு தொடர்பை ஏற்படுத்த முடிந்தது.

## பரமபிதா காட்டிய பாதை

வறுமையை ஒரு சாபமாகவும், வறியோர் - ஊனமுற்றோர் கடவுளின் தண்டனைக்கு ஆளானவர்கள் என்றும் நம்பி வந்த யூதர்கள் மத்தியில் இயேசு 'வறியோர் பேறு பெற்றோர்" என்று மலை உச்சியில் போதித்தார். அப்போது யூத மதத்தலைவர்களுக்கு இயேசு இவ்விதம் சொன்னது பெரும் அதிர்ச்சியாக இருந்தது. அவன் தனது ஆழ்மனதில் நம்பியவைகளை மக்களுக்குச் சொல்லியது மட்டுமல்லாமல் வாழ்ந்தும் காட்டினார். அவரது போதனைகளும், எடுத்துக்கொண்ட நிலைப்பாடும், வாழ்ந்த வாழ்வும் யூதர்களுக்கு ஒரு சவாலாகவே இருந்தன.

பைபிளில் உள்ள புதிய ஏற்பாட்டுப் பகுதிகளில் கூறப்பட்டுள்ள அந்த ஊனமுற்ற மூவரின் குணப்படுத்தல்களையும் இவ்விடத்தில் குறிப்பிடுவது நல்லது: பிறவியிலேயே பார்வையற்ற ஒருவர், முடக்குவாதமுற்ற ஒருவர், காது கேளாதவரும், திக்கி பேசுபவருமான ஒருவர் ஆகியோரே அந்த மூவருமாவர்.

ஏன் இயேசு இவ்வாறான அற்புத நிகழ்வுகளை செய்தார்? என நாம் யோசிக்கலாம். அவர்தமது குணப்படுத்தும்ஆற்றலை விளம்பரப்படுத்தவா? மகிமை பெறவா? அல்லது இதனைஒருதுண்டிலாகக்கொண்டு மக்களை தன்பக்கம் ஈர்க்கவா? இயேசு புரட்சிகரமாகப் பேசி மக்களை தன் வயப்படுத்த வேண்டும்என்றா? இல்லை. இயேசு ஊனமுற்றோரை குணப்படுத்தியதில் எந்த விதமான எதிர்பார்ப்பையும் நோக்கமாக கொண்டு செயற்படவில்லை. மாறாக அவர் மனித குலத்தின் மீது அளவிலா அன்பு கொண்டதே இதற்கு காரணம். அவர் தம்மை மக்களின் நண்பன் என்றும், நண்பனுக்காக தம் உயிரைத் தியாகம் செய்ய முன்வரும் உண்மை நண்பனாகவும் மக்களை பாதுகாக்கும் நல்லாயனாகவும் இருப்பதாக கூறினாரே. இதைவிட இதற்கு மேல் நாம் என்னத்தை எதிர்பார்க்க வேண்டும். அவருடைய மனித நேயத்தின் மகத்துவத்தை எடுத்துக் காட்டவே இவ்வாறு செய்தார். இயேசு வாய்பேசாத, காது கேளாத ஒருவனை குணமாக்கிய புதுமையை, தன் வல்லமையை வெளிப்படுத்த அவர் எடுத்துக்கொண்ட முயற்சியாக பார்க்காமல், யூத சமூகத்திற்கும், இன்று நமக்கும் காட்டும் ஒரு மாற்றுப் பாதையாக பார்க்க வேண்டும்.

இங்கு நாம் இன்னும் ஒரு விடயத்தை கருத்தில் எடுத்துக்கொள்ளலாம்: இயேசுவிடம் வாய் பேசாத, காது கேளாத அம்மனிதனை மற்றவர்கள் கொண்டு வந்தனர் என்பதே. அந்த மனிதன் தானாக இயேசுவிடம் வரவில்லை. தன் குறைகளைப் பார்த்து தன்னை ஒரு குற்றவாளி என்றும், கடவுளின் தண்டனையை அனுபவிப்பவன் என்றும் முத்திரை குத்திய யூத சமுதாயத்தின் மேல் அவன் வெறுப்பை வளர்த்திருக்க வேண்டும். இயேசுவையும் இந்த சமுதாயத்தின் ஒரு ஆளாக நினைத்து அவன் அவரை அணுக தயங்கியிருக்க வேண்டும். தயக்கம், குழப்பம், தன்மீது தனக்கே ஏற்பட்ட வெறுப்பு, விரக்தி, வேதனை என்று பல சிறைகளுக்குள்தன்னையே பூட்டிக்கொண்டவன் அவன் எனலாம். அவனுடைய ஒரு சில நண்பர்கள் அவனுக்கு நல்லது நடக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இயேசுவிடம் அவனை கொண்டு வந்தனர். அப்போது இயேசு தமது விரல்களை அவன் காதுகளில் இட்டு உமிழ் நீரால்அவரின் நாவைத் தொட்டார். பிறகு வானத்தை அண்ணார்ந்து பார்த்து இறைவனிடம் மன்றாடியுள்ளார். அவனை நோக்கி 'திறக்கப்படு" என்றார். நாம் எமது சிந்தனைப்படி கூறுவதாயின்அடுத்து அவன் காதுகளில் அவர் கையை வைக்கும்போது அந்த மனிதனிடம் இயேசு சொல்லாமல் சொல்லியது இது தான் எனலாம் உன்னை இதுவரையோ பின்னரோ மனம் தளரச் செய்யும் வண்ணம் இந்த உலகம் சொல்வதைக் கேளாதே. உன் காதுகளையும், நாவையும் நல்ல செய்திகளுக்காகத் திறந்து விடு. வேதனையில், விரக்தியில், நீ வாழ்ந்தது போதும். உன்சிறைகளைத் திறந்து வெளியே வா. உன் சிறைகள் திறக்கபடுக." அதனால்தான் அவருடைய காதுகள் திறக்கப்பட்டன. நாவும் கட்டவிழ்ந்தது. அவர் தெளிவாகப் பேசமுடிந்தது.

இயேசு அந்த மனிதருக்குப் பேச்சுத் திறனும் கேள்வித் திறனும் வழங்கியபோது அந்த மனிதனின் உள்ளத்தையும் திறந்தார். அவருடைய இதயத்தையும் கூடவே திறந்தார். அதைத் தொடர்ந்து கடவுளின் வார்த்தையைக் கேட்கவும் அதைப் பேசவும் அந்த மனிதர் முன்வந்தார். இயேசுவிடத்தில் நாம் நம்பிக்கை கொள்ளும்போது அவர் நமக்கு இத்தகைய கேள்வித் திறனையும் பேச்சுத் திறனையும் நல்குவார். நாமும் இயேசுவிடம் மற்றவர்களையும் கொண்டுபோகும் நண்பர்களாவோமா?

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திரப் பத்திரிகையாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்.மேரிஸ், சென்.ஜோசப் சுப்பர் 8 சுற்றுக்கு முன்னேற்றம்








நெற்கொழு கழுகுகள் வி.க நடத்தும் வடமாகாண ரீதியான உதைபந்தாட்ட போட்டியில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற போட்டியில் யாழ், சென்.மேரிஸ் மற்றும் மன்னார் சென்.ஜோசப் அணிகள் சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதி பெற்றன.

முதலாவது போட்டியாக இடம் பெற்ற சென். மேரிஸ் வி.க. எதிர் வல்வை வி.க. இடையிலான போட்டியில் ஆட்டத்தின் 16 ஆவது நிமிடத்தில் சென்.மேரிஸ் வீரர் நிதர்சன் ஒரு கோலினை அடித்தார்.

பெறப்பட்ட கோலினைத் தொடர்ந்து வல்வை வி.க. கோலினை பெற்றுவிட வேண்டும் என்ற நோக்குடனும் சென். மேரிஸ் மேலும், கோல்களை பெறவேண்டும் என ஆடியபோதும் சந்தர்ப்பங்கள் அமைந்தும் மேலதிக கோல் எதனையும் பெற முடியவில்லை.

எனவே, 1:0 என்ற கோல் கணக்கில் சென்.மேரிஸ் அணி வெற்றி பெற்றது. சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தியதுடன் ஒரு கோலினையும் அடித்த நிதர்சன் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

இரண்டாவது போட்டியாக இடம்பெற்ற சென்.ஜோசப் வி.க எதிர் வதிரி பொம்மேர்ஸ் வி.க இடையிலான போட்டியில் ஆட்டத்தின் முதற் பாதியில் இரு அணிகளாலும் கோல் எதனையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

இரண்டாவது பாதி ஆட்டம் விறுவிறுப்பாகத் தொடர இரண்டாவது பாதியின் 7 ஆவது நிமிடத்தில் சென்.ஜோசப் வீரர் ரெக்சன் முதலாவது கோலினை அடிக்க தொடர்ந்து 17 ஆவது நிமிடத்தில் நட்சத்திர வீரர் டிங்கோணி ஒரு கோலினைப் பெற்றார்.

ஆட்டத்தின் 2 நிமிடங்கள் இருக்கும போது பொம்மேர்ஸ் அணியினர் போதிய வெளிச்சம் இன்மை என கூற போட்டி நிறுத்தப்பட்டது. எனினும், போட்டி நடுவர்களின் அறிக்கையில் மிகுதி நேர விளையாட்டினை தொடர போதுமான வெளிச்சம் காணப்பட்டதாகச் சுட்டிக்காட்டப்பட்டதனைத் தொடர்ந்து போட்டி ஏற்பாட்டாளர்களால் சென்.ஜோசப் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (க)


## உடற்கல்வி விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட சுற்றுத்தொடர்

### யங்கம்பன்ஸ் வெற்றி

சென்.மைக்கல் விளையாட்டுக் கழகத்தை 8:0என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கம்பர் மலை யங்கம்பன்ஸ் அணி உடற்கல்வி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதை பந்தாட்ட சுற்றுத் தொடரில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற போட்டியில் சென். மைக்கல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யங்கம்பன்ஸ் விழையாட்டுக் கழகம் மோதியது.

அவ் அணியின் அதிரடி ஆட்டம் மூலம் கம்பர் மலை யங்கம்பன்ஸ் அணி 8:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அவ் அணி சார்பாக தர்சன் 3 கோலினையும், பிரகாஸ், ரதன் தலா 2 கோலினையும், நிறோ ஒரு கோலினையும் போட்டனர். (க)

## விவேகானந்தா வி.கழக மென்பந்து சுற்றுப்போட்டி



அமரர்கள் வைத்திய கலாநிதி க.பரிமே லழகர், ஆசிரியர் வே. விமலன், மாணவன் செ.பரண்தரன், நிகழிச்சித்திட்ட உரிமையாளர் இ.பிரபாகரன் ஞாபகார்த்தமாக தும்பளை மேற்கு விவேகானந்தா விளை யாட்டுக் கழகத்தினால் நடத்தப்படுகின்ற மாபெரும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மாதனை கண்ண கை அம்மன் ஆலய மைதானத்தில் கழகத் தலைவர் S.Pவிவேகானந்தன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக வடம ராட்சி வலயக்கல்வி அலுவலக உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் இ.ராஜசீலன் கலந்து கொள்ளவுள்ளார். 6 பேர் 5 பந்துப் பரிமாற்ற ங்களைக் கொண்ட இறுதிப்போட்டியில் வதிரி ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகமும் 11 பேர் 15 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இறுதிப் போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க)

SPORTS
விளையாட்டுச் செய்திகள்

# யாழ்.மத்திய கல்லூரி 200வது ஆண்டு உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்.மத்திய கல்லூரி சம்பியன்



யாழ்.மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட உதைபந்தாட்ட போட்டியின் இறுதியாட்டமும் 3 ஆம் இடத்திற்கான ஆட்டமும் கடந்த வியாழக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. 3ஆம் இடத்திற்கான போட்டி சென். ஹென்றிஸ் கல்லூரிக்கும் உடுப்பிட்டி அமெரிக்கன் kp~d கல்லூரிக்கும் இடையே நடைபெற்றது.

அப்போட்டியில் சென். ஹென்றிஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி 3ஆம் இடத்தைக் கைப்பற்றி அதற்குரிய வெற்றிக்கேடயத்தையும் பணப்பரிசில் 15,000 ரூபா பெற்றுக்கொண்டது.

அதன் பின்னர் இறுதியாட்டம் யாழ்.மத்திய கல்லூரிக்கும் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையே விறுவிறுப்பான சூழ்நிலையில் ஆரம்பமாகியது. இடைவேளை வரை ஒரு அணியினால் கூட கோல் போட முடியவில்லை. இடைவேளையின் பின் பத்தாவது நிமிடத்தில் மத்திய கல்லூரி அணி வீரர் ஜேம்சன் அடித்த கோனரை கமில்ரன் லாவகமாக தட்டிகோல்ஒன்றைப் போட்டார்.

இதன் பின் போட்டி மேலும் விறுவிறுப்படைந்தது. சென்.பற்றிக்ஸ் அணி வீரர் சுரேஸ் போட்டி முடிவடையும் தறுவாயில் கோல் ஒன்றைப் போட்டு சமநிலைப்படுத்தினார். பனால்ரி முறை ஆரம்பிக்கப்பட்டது அங்கும் விறுவிறுப்புத் தான்.

முதல் ஐந்து தடவையில் இரு அணிகளும் தலா மூன்று கோல்களை போட முடிந்தது. தொடர்ந்த ஆறாவது தடவையில் சென்.பற்றிக்ஸ் அணி கோல் போட தவற மத்திய கல்லூரி அணி கோல் போட்டு 4-3 என்றகோல் கணக்கில் வெற்றியை சுவீகரித்துக் கொண்டது. மத்திய கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தையும் பணப் பரிசில் 30,000 ரூபா பெற்றுக் கொண்டது. அதேவேளை சென். பற்றிக்ஸ் அணி இரண்டாவது இடத்திற்குரிய வெற்றிக் கிண்ணத்தையும் பணப்பரிசில் 20,000 ரூபா பெற்றுக்கொண்டது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக இங்கிலாந்தில் இருந்து வருகை தந்த கலாநிதி R.V.அகிலன் அவர்கள் கலந்து கொண்டார். (க)

## இன்றைய போட்டிகள்

நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் 11 நபர் 15 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள போட்டியில் கொம்மாந்தறை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இணுவில் கலைஒளி விளையாட்டுக்கழகமும் மீனாட்சி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகமும் மைக்கல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாவலர் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (க)

DRAYTON POST OFFICE AND STORES LONDON அனுசரணையுடன் மாதனை விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் வல்வை ஒற்றுமை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பிங்பொங் விளையாட்டுக்கழகமும் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் மகேசன் விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து ஐங்கரா விளையாட்டுக்கழகமும் முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ஞானம்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அரியாலை ஸ்ரார் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னாபிரிக்க...

டர் பக்கத்தில் நேற்று பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிடுகையில், சீன விஜயத்தை தொடர்ந்து நாடு திரும்பும் வழியில் தென்னாபிரிக்க , ஜனாதிபதி பயணம் செய்த விமானம் கட்டுநாயக்கவில் தரித்துச் சென்றது.

இதன்போது தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமாவைச் சந்தித்து நான் கலந்துரையாடினேன் என ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னதாக தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமாவுடன் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர பேச்சு நடத்தியிருந்தார்.

சீனாவில் இடம்பெற்ற போர்வெற்றி கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்காக தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமா கடந்த வியாழக்கிழமை பீஜிங் சென்றார்.

இதன்போது அவர் பயணம் செய்த தென்னாபிரிக்காவின் விமானப்படை விமானம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரித்து நின்ற போதே, அவருடன் மங்கள சமரவீர பேச்சு நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## 1990-ல்...

பெண்களை வேறிடத்திலும் ஆண்களை மைதானத்திலும் கூடுமாறு அழைப்பு விடுத்ததாக கொம்மாந்துறையை சேர்ந்த 43 வயதான வெள்ளைச்சாமி கோவிந்தராஜ் கூறினார்.

இராணுவத்தினால் கூட்டி வரப்பட்ட முகமூடி அணிந்த நபர்களின் முன்னிலையில் நிறுத்தப்பட்ட தனது மூத்த சகோதரன் உள்ளிட்ட பலரை இராணுவம் பஸ்களில் அழைத்துச் சென்றிருந்ததாகவும் அவர் கூறினார்.

கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாமில் இருந்தவர்களை இராணுவம் விசாரணைக்காக சென்றிருந்த காலத்தில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளராக பதவியேற்றிருந்த, ஏ.டப்ளியூ பெர்ணான்டோ, 32 பேர் மட்டுமே விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு 24 மணிநேரத்தில் அனைவரும் விடுவிக்கப்பட்டுவிட்டதாக கூறியிருந்தார்.

ஆனால் 158 பேரில் ஒருவர் கூட விடுவிக்கப்படவில்லை என்று அகதி முகாமை நிர்வகித்து வந்த கிழக்கு பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளரான டாக்டர் த. ஜெயசிங்கம் கூறினார்.

1995ம் ஆண்டு ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கு.பாலகிட்ணர் தலைமையிலான ஆணைக்குழு முன்னிலையில் சகல ஆவணங்களையும் முன்வைத்து இது தொடர்பாக சாட்சியமளித்த போதிலும் அது அறிக்கையில் இடம்பெற்றதே தவிர உண்மை நிலை கண்டறியப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

25 ஆண்டுகளுக்கு முன்னர் காணாமல் போனவர்கள் உயிருடன் இன்னும் இருப்பார்கள் என்ற நம்பிக்கையை உறவினர்கள் தற்போது பெரும்பாலும் இழந்திருந்தாலும், அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது தொடர்பில் தற்போது ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்திலாவது உண்மைநிலை வெளிவர வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றனர். (செ-12)

## சர்வதேச...

பயனுள்ள விடயமாக அமையுமென யாழ்.மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வலம்புரிக்கு மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச விசாரணை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை இதுவரை தனது விசாரணையை முன்கொண்டு வரவில்லை. அதை பின்தள்ளிப் போட்ட வண்ணம் இருக்கின்றார்கள்.

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணையை உள்ளக விசாரணையாக மேற்கொள்ளலாம் என இலங்கை அரசு சில அறிவுறுத்தல்களை கொடுத்திருக்கிறது.

ஆனால் உள்ளக விசாரணைகள் மேற்கொள்வதனூடாக அது முற்றுப் பெற்ற விசாரணையாக இருக்குமா? அல்லது அரைகுறையான விசாரணையாக இருக்குமா? என தீர்க்கமாக கூற முடியாது.

ஒரு சிலர் உள்ளக விசாரணை பயணளிக்குமென்றும் நமது நாட்டுக்குள்ளேயே தீர்வைக் கொண்டுவந்து மக்கள் மத்தியில் பிரச்சினைகள் இல்லாமல் ஒற்றுமையாக ஒரு முடிவுக்கு வரலாம் என கூறுகின்றார்கள்.

வேறு சிலர் முன்னைய அரசாங்கங்களைப் போன்று இது மூடி மறைக்கப்படும். விடயமாகத்தான் அமையும் என்றும் இந்த விசாரணையின் மூலம் தமிழ் மக்கள் எதிர் பார்க்கும் நன்மை வராது என கூறுகின்றார்கள்.

ஐக்கிய நாடுகளின் அறிக்கையானது எப்போதோ வரவேண்டிய ஒன்று. தற்போது காலம்கடந்த அறிக்கையாக இருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபை முன்பிலிருந்தே ஊக்கமாக இருந்து ஐ.சி.ஆர்.சி போன்ற நிறுவனங்களை தடை செய்யாமல் அவர்களுடன் ஒத்துழைத்து செயற்பட்டிருந்தால் நாம் எத்தனையே நன்மைகளை பெற்றிருக்கலாம். அத்துடன் காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்று இதுவரை தெரியாமல் இருக்கும் உண்மைகள் வெளிவந்திருக்கும்.

அந்த நேரத்தில் ஐக்கிய நாடுகள் அசண்டைத்தனமாக இருந்து செய்யவேண்டிய கடமைகளை உரிய நேரத்தில் செய்யாமல் விட்ட காரணத்தால் இன்று நாம் பல விதமான பிரச்சினைக்குள் இருக்கின்றோம்.

இந்த இறுதி நேரத்திலாவது ஐக்கிய நாடுகள் சபை இந்த விடயத்தில் அக்கறை எடுத்து தமிழ் மக்கள் விரும்புகின்றமுறையில் சர்வதேச விசாரணைகளை முன்னெடுப்பது சிறுபான்மையின மக்களுக்கு ஒற்றுமையான ஒரு முடிவை கொண்டு வருவதற்கு உதவியாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## மாடியிலிருந்து...

இருந்த நபர் மாடியிலிருந்து தவறி கீழே வீழ்ந்துள்ளதாக கூறப்படுகிறது.

கீழே விழுந்து உயிருக்கு போராடிக் கொண்டிருந்த பிரஸ்தாப நபரை குடியிருப்பு மக்களின் உதவியுடன் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்தபோதும் அங்கு கொண்டு செல்லப்பட்டு அரை மணி நேரத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அதேவேளை மேற்படி சம்பவம் தொடர்பான மரண விசாாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டிருந்தார். (செ-5)

## சர்வதேச விசாரணை...

இன்றைய தினமும் யாழ்.பஸ் நிலைய முன்பாக காலை 9 மணியிலிருந்து மாலை 6 மணி வரையிலும் திருநெல்வேலி சந்தை முன்பாக காலை 7 மணி முதல் 10 மணி வரையிலும், பொன்னாலை வரதராஜ பெருமாள் ஆலயம் முன்பாக காலை 7 மணி முதல் 10 மணிவரையும் மற்றும் நல்லூர் ஆலய வெளிச்சூழல்களிலும் இன்றைய தினம் நடைபெறவுள்ளது.

இதேவேளை யாழில் உள்ள பல கிராமங்களுக்கும் இக் குழு கையொப்பங்களை பெறுவதற்கு வருகை தரவுள்ளதாகவும் அனைவரும் ஒத்துழைப்புத் தருமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மேலும் இக்கையொப்பங்களை கிராமம் தோறுமுள்ள கழகங்கள் அமைப்புக்கள் திரட்டி தர முடியுமெனவும் இதற்கான கையொப்ப படிவங்களை இக்குழுவின் தொலைபேசி இலக்கமான 0212212530 என்ற இலக்கத்துக்கு அழைத்து பெற்றுக்கொள்ள முடியுமென போராட்ட ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது. (செ-4)

## அமைச்சர்களின்...

அமைச்சரவை பொறுப்பேற்பதில் ஏற்பட்ட தாமதத்துக்கு காரணம்.

பதவி ஆசை கொண்டவர்களாலேயே அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய தேவை புதிய அரசாங்கத்துக்கு ஏற்பட்டது.

இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதே தமது அமைச்சின் நோக்கம் என்று மனோ கணேசன் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையில், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் எண்ணிக்கையை 30இலிருந்து 48ஆக உயர்த்துவதற்கும், ஏனைய அமைச்சர்களின் எண்ணிக்கை யை 40இலிருந்து 45ஆக உயர்த்துவதற்கும் புதிய தேசிய அரசாங்கம் நாடாளுமன்றத்தின் அனுமதியை பெற்றிருந்தமை தெரிந்ததே. (செ-12)

# மகிந்த ஆட்சிக்கு வந்திருந்தால் அப்பாவிகள் பலர் கொல்லப்பட்டிருப்பர்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கருத்து

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இலங்கை பொலிஸ் ஆட்சியாக இருந்தது. இந்த நிலையில் மகிந்த நாடாளுமன்ற தேர்தலின் ஊடாக மீண்டும் ஆட்சிக்கு வந்திருந்தால், நாட்டில் அப்பாவிகள் பலர் கொலை செய்யப்பட்டிருப்பார்கள் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்

தெரிவு செய்யப்பட்ட செய்தியாளர்களுடன் இந்தியாவில் வைத்து கருத்துக்களை பகிர்ந்து கொண்ட சந்திரிகா, தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் இருந்து மீளவே, மகிந்த மீண்டும் தேர்தலில் போட்டியிட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

அவரின் ஆட்சியின் போது சிங்களவர்களும் தமிழர்களும் முஸ்லிம்களும் கருத்துக்களை வெளியிட தயங்கியதாக சந்திரிகா தெரிவித்துள்ளார்.

பிராந்தியத்தில் இந்தியாவின் அபிலாசைக்கு அப்பால் சென்று செயற்பட முடியாது என்று குறிப்பிட்ட அவர், மகிந்த ராஜபக்ஷ இந்தியாவை திருப்திப்படுத்திக் கொண்டு ஏனைய அதிகாரமுள்ள நாடுகளின் அதிகாரங்களை இலங்கைக்குள் மேம்படுத்தியதாக சந்திரிகா குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தியாவை பொறுத்தவரையில், அதன் உதவி இலங்கையின் முதலீடுகளுக்கு தேவைப்படுகிறது. தென்னாசியாவிலும் சர்வதேசத்திலும் இந்தியாவின் ஆற்றலை குறைத்து மதிப்பிட முடியாது.

இதேவேளை இலங்கையில் சீனாவின் பல்வேறு பாரிய முதலீடுகளுக்காக ராஜபக்ஷ நிர்வாகத்துக்கு பாரிய தொகை தரகுப்பணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் சந்திரிகா சுட்டிக் காட்டியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவை கடந்த ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைய செய்வதில் இந்தியாவின் பங்கு இருந்தது என்ற கருத்தை மறுத்த சந்திரிகா, இலங்கை மக்களே தமக்கு தேவையான ஜனநாயகத்தை ஏற்படுத்தினர் என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழர்களுடன் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பில் கருத்துரைத்த அவர், தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைமையை தாம் வகிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், தமது ஆணைக்குழு பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுக்க பொன்னான வாய்ப்பை பெற்றுள்ளது. அத்துடன், தமிழர்களின் காணிகள் மீண்டும் கையளிக்கப்பட்டு வருகின்றன.

காணாமல் போனோர் தொடர்பான பிரசசினைகளும் அதிகாரப் பகிர்வு தொடர்பிலும உரிய தீர்வுகள் எட்டப்படும் என்றும் சந்திரிகா தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில் இரண்டு தரப்புக்களும் உடனடியான தீர்வுகளை காண வேண்டும் என்றும் சந்திரிகா வலியுறுத்தியுள்ளார். (செ-12)

# செப்.14இல் ரணில் ஒக்.8இல் மைத்திரி இந்தியாவுக்கு விஜயம்

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அடுத்தடுத்து இந்தியாவுக்கான பயணத்தினை மேற்கொள்ளவுள்ளனர் என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி பிரதமர் செப்டெம்பர் 14ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை இந்திய பயணத்தை மேற்கொள்வார் என்று இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இதன்போது ரணில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை செப்டெம்பர் 15ஆம் திகதியன்று சந்திக்கவுள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒக்டோபர் 8ஆம் திகதி முதல் 10ஆம் திகதிவரை இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இதன்போது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பௌத்தத்தை மேம்படுத்தும் வலையமைப்பு ஏற்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் புதிய அரசாங்கம் பல முனைகளில் இலங்கை மீதுள்ள வெளி நாட்டு அழுத்தங்களை குறைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றார்கள். (செ-12)

# திருமண வீட்டில் நகைகள் திருட்டு

## 42 பவுண் பறிபோனது

திருமண வீடொன்றிலிருந்து சுமார் 42 பவுண் தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று நள்ளிரவு நீர்வேலிப் பகுதியில் உள்ள திருமண வைபவம் இடம்பெற்ற வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

குறித்த திருமண நிகழ்வு இடம்பெற்ற வீட்டில் இருந்த நபர்கள் உறங்குகின்ற சமயமே மேற்படி கொள்ளைச் சம்பவம் துணிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அண்மையில் யாழில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் ஒப்பிடும்போது மேற்படி நகைக்கொள்ளை சம்பவம் பாரிய ஒன்றாக காணப்படுகின்றது.

குறித்த கொள்ளை தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ள அதேவேளை திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்களையும் பொலிஸார் தேடி வருகின்றனர். (செ-11)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

ஏன் AF இல் FRENCH கற்க வேண்டும்?



- ★ உலகம் முழுவதும் பிரெஞ்சு கற்பதற்கு 1883 இல் PARIS இல் நிறுவப்பட்ட மிகப்பெரிய சர்வதேச நிறுவனம் AF. 136 நாடுகளில் 1040 கிளைகள் (இலங்கையில் கொழும்பு, கண்டி, மாத்தறை, காலி & யாழில் 1976 முதல்).
- ★ இலங்கையில் FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் ஒரே நிறுவனம் AF.
- ★ பிரான்ஸ் நாட்டு ஆசிரியர் & யாழ். பல்கலைக்கழக பிரெஞ் ஆசிரியர்கள்.
- ★ சர்வதேச நிறுவனமொன்றின் CERTIFICATES ஐ பெறுங்கள். இலங்கையில் AF மட்டுமே INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது. DELF A1 பரீட்சை : AF மாணவர்களுக்கு Rs.3850. ஏனையோருக்கு Rs.9900.
- ★ பிரெஞ்சு மொழிபெயர்புகள். VISA FORM நிரப்பித்தரப்படும்.
- ★ யாழ், வன்னி, மன்னார், தீவகத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே FRANCE, CANADA ...செல்கிறார்கள்.
- ★ யாரும் படிக்கலாம். வயதெல்லை இல்லை. www.ambafrance-lk.org

BEST PLACE IN SRILANKA

13.09.15 சனி, ஞாயிறு 11 - 1 pm இன்றே பதியுங்கள்

021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

குறிப்பு: Embassy, International என்ற சொற்களை தவறாக பயன்படுத்தும் தனிநபர்களிடம் விழிப்பாக இருங்கள்!!! வடமாகாணத்தில் ஒரே முகவரி தான் (1682)

கச்சேரி → புகையிரதக்கடவையும் ஆலயமும் → AF (வெள்ளை மாடிக்கட்டடம்)


## 1990-ல்...

கூறப்படும் இவர்களுக்கு நடந்தது என்ன என்று 25 ஆண்டுகளாகியும் இதுவரை தங்களால் கண்டறிய முடியாதிருப்பதாக உறவினர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றார்கள்.

1989ம் ஆண்டு இந்திய இராணுவதினர் நாட்டைவிட்டு வெளியேறியிருந்த நிலையில் அக்காலத்தில் ஜனாதிபதியாக இருந்த பிரேமதாஸ தலைமையிலான இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் போர் நிறுத்தம் ஒன்று கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

அந்தப்போர்நிறுத்தம் 1990-ம் ஆண்டு நடுப்பகுதியில் முறிவடைந்த காலகட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினரால் தனித்தும் கூட்டம் கூட்டமாகவும் கைது செய்யப்பட்டிருந்த ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் காணாமல்போயுள்ளதாக மனித உரிமை அமைப்புகளினால் அவ்வேளையில் தகவல்கள் வெளியிடப்பட்டிருந்தன.

அவ்வேளையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தமிழ்ப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் தமது குடியிருப்புகளை விட்டு வெளியேறி பாதுகாப்புக்காக பொது இடங்களில் அகதிகளாக தஞ்சமடைந்திருந்தனர்.

1990ம் ஆண்டு செப்டெம்பர் ஐந்தாம் திகதி, அதிகாலை முகாமிற்கு வந்த இராணுவத்தினர் ஒலிபெருக்கி மூலம்

15 ஆம் பக்கம் பார்க்க....


## VACANCIES IN KILINOCHCHI

We are a Company affiliated to a bi-national group having a proven track record in India and Sri Lanka in the fields of Engineering, manufacturing and industrial support having long standing dealings with companies around the world.

Heritage Agri is a "State of the art" Cavendish banana farm with a modern export packing Centre located at Iyakachchi in the vicinity of Kilinochchi.

We are looking for suitably qualified young people with **good communication skills and Computer literacy** for the following positions.

### AGRICULTURAL MANAGER

**Qualifications -**

- Holds a valid degree in Agriculture
- Have Hands-on experience in agriculture
- Working experience in a farm is desirable
- Able to write reports in English
- Under 35 years of age

### JUNIOR MANAGER PROCESSING

**Qualifications -**

- Degree from a recognized University, preferably with a good grade in O/L mathematics
- Very good in moving with people
- Able to manage a work-force of 20
- Able to write reports in English
- Experience in a production facility is desirable.
- Under 35 years of age

Those who have just completed their Degree/Diploma also could apply.

Remuneration will be commensurate with qualification and experience and past performance.

Both females and males can apply. Please send your Bio-Data by e-mail to damayanthi@isfindustries.com or preferably hand written application in English by post within 07.

HERITAGE
HERITAGE AGRI

**General Manager**
**Heritage Agri (Private) Limited**
**¾, Rockwood Place,**
**Colombo 07.**

(C-2042)



## FALC FRENCH LANGUAGE CENTRE
FOR BETTER FRENCH IN NORTH

பிரெஞ்சு மொழி வகுப்பு

Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.

விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)

DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 985 மாணவர்கள் French கற்றுள்ளனர்.....
உடன் அனுமதியை பெற்றுக் கொள்ள : 0779 789 456 / 021 221 7781

No. 40, பலாலி வீதி, ஆரிய குளத்துக்கு அண்மையில் — ஆரம்பம் : 12.09.15 சனி 8 மணிக்கு
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 — ஆரம்பம்: 12.09 @ 4pm.
கண்டி வீதி, சாவகச்சேரி. — ஆரம்பம்: 16.09 @ 4pm

Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

(C-2007)



## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணத்தில் நகரத்துக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு ஒன்று வாடகைக்குண்டு. வாகனத்தரிப் பிடம் உண்டு. (1686)

தொடர்புகளுக்கு
075 891 5498



## METRO
Travels & Tours (Pvt) Ltd.

எமது சேவைகள் ......

- மிக குறைந்த விலையில் சகல நாடுகளுக்குமான விமான பயண சீட்டுக்கள்....
- சகல நாடுகளுக்குமான காப்புறுதி சேவைகள்....
- இந்தியா, மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கான விசா சேவைகள்...
- வெளிநாட்டு கடவுச் சீட்டுகளுக்கான இலங்கை விசா புதுப்பித்தல்...
- இவை அனைத்தையும் நீங்கள் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம் ....

(C-2049)

**METRO TRAVELS & TOURS (PVT) LTD**
# 272/1, Stanley Road,Jaffna, Sri lanka.
Tel:- 0212219424, 0212224647, 0212217199
Mobile: - 0773798767, 0777881115
Email: - bartheeban@metrotravels.lk



## தேவை

எழுதுவினைஞர், கீழ்வகுப்புகளுக்கு கற்பிக்க கூடிய, ஆசிரியர்கள் தேவை. (அண்மையில் இருப்பவர்கள் விரும்பதக்கது.) நேரில் வருகை தரவும்.

07.09.2015
திங்கள் 4.pm
மேலதிக தொடர்பு
0772170065

ஐடியல் கல்லூரி - மானிப்பாய் கிறீன் ஆஸ்பத்திரி பின் வீதி, மருதடி விநாயகர் கோயில் அருகாமை.



A/L பரீட்சை எழுதிய / 16 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான ஆங்கிலப் பாடநெறிகள்

## DIPLOMA IN ENGLISH
(SPOKEN ENGLISH)

வடமாகாணத்தில் தலைசிறந்த ஆங்கிலக் கல்லூரி

ஆரம்பம்: 12.09.2015 காலை 8.30 மணி
பிரிவு I : சனி/ஞாயிறு தினங்களில் காலை 7.30 - 10.00 வரை
பிரிவு II : சனி/ஞாயிறு தினங்களில் மாலை 3.00 - 5.30 வரை

06 மாதங்கள் நடைபெறும் இந்த பாடநெறியைப் பயின்ற அனைவரும் ஆங்கில மொழியினை சரளமாகக் கதைப்பதுடன் ஆங்கிலத்தில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களையும் பெறுகின்றனர்.

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

**E-CITY COLLEGE OF ENGLISH** (C-2048)

இல.372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் (வீரமாகாளி அம்மன் ஆலயம் அருகில்)
0212217106/0212217898/0773400418/0774924166/0770610271



## Study in Latvia

(Schengen Visa valid for 27 Countries)

ஐரோப்பிய நாடான Latvia வில் குறைந்த செலவில் படிக்க, உழைக்க

- ➔ No IELTS
- ➔ G.C.E A/L 3 Pass
- ➔ Very low Course fees
- ➔ High Visa Success rate
- ➔ English Medium
- ➔ 20 Hours Part time Allowed

Next Intake Feb 2016

Application dead line 30-09-2015

(C-2049)

iCS Study Overseas

77, மணிக்கூட்டு கோபுரவீதி. யாழ்ப்பாணம்
021 4926222, 077 3013060



SPEED LANKA EXPRESS Courier

## வெளிநாடுகளுக்கான
### தபால் பொதி விநியோக சேவை





- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

**Speed Lanka Express (Pvt) Ltd.**
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 077 62 17 926

(C-2045)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2046 06.09.2015 தொலைபேசி : 021 222 3378

நாதம் 30




# எதிர்க்கட்சித் தலைவர் பதவி; யாருக்கென்ன இலாபம்?

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாய்...நிலம்...?



சிறுகதை

செம்மண் வீதிகள் ஊடாக நடந்துகொண்டிருக்கிறேன். வாடைக்காற்று மேனி தழுவி, வருடிச் செல்கிறது. ஏனைய மரங்களை விட பலா மரங்கள் நிறைந்து காணப்படுகின்றன. முள்ளியவளை, தண்ணீரூற்று என்றால், நல்ல தண்ணி நினைவுக்கு வரும். யாழ்மொழியின் அழகிய கிராமம் முள்ளியவளை. தூரத்தே வேப்பமரக் கிளையில் குயில் ஒன்று கூவுகின்றது. பசுமாடுகள் கூட்டம் கூட்டமாகச் செல்கின்றன. மண்வாசமும் இயற்கை அழகும் மனதைச் சந்தோசப்படுத்திச் செல்கிறது.

யாழ்மொழியின் வீட்டிற்கு வாழைத்தோட்டங்கள் கடந்து தான் போகவேண்டும்.

மழைபெய்திருந்ததால் நிலம் சகதியாக இருந்தது. எனது காலில் இருந்த இரு செருப்புகளையும் கைகளில் தூக்கிக் கொண்டு யாழ்மொழியின் வீடு நோக்கி நடக்கத் தொடங்கினேன்.

செந்நிறப் பட்டுப் பூச்சிகள் செம்மண்ணில் ஊர்ந்து செல்கின்றன. பார்க்கும் போது பாவமாக இருந்தது. யாருடைய பாதங்களில் மிதிபட்டு இறக்கப் போகிறதோ! நான் மிகவும் கவனமாக நிலத்தைப் பார்த்து நடக்கிறேன்.

சில காளான்கள் புற்களுக்கு இடையே முளைத்திருக்கின்றன. செம்மண் ஒழுங்கையின் முடிவிலே, தாய் ஆட்டை செவியில் பிடித்துக்கொண்டு நடந்து வந்துகொண்டிருந்தாள் யாழ்மொழி. அவளின் பின்னால் இரண்டு ஆட்டுக்குட்டிகளும் துள்ளித்துள்ளி, குதித்து வந்துகொண்டிருந்தன.

"என்ன மான்விழி நீண்ட நாளைக்குப் பிறகு வந்திருக்கிறாய்!"

"ஓமடி.. யாரை மறந்தாலும் உன்னை மறக்க முடியுமே...!

அந்த இக்கட்டான நிலைமையில என்ரை உயிரைக் காத்த உன்னை எப்படி மறப்பன்."

"வா! அந்த மரத்துக்குக் கீழே இருப்பம். இப்ப நீ கொஞ்சம் உடம்பா வந்திட்டாய்."

உண்மையாவா மனதுக்குள் சந்தோசப்பட்டாள் மான்விழி. யாழ்மொழியைப் பார்க்கக் கவலையாக இருந்தது அவளுக்கு. நீ மெலிந்து போய் விட்டாய், என்று சொன்னால், அவள் கவலைப்படுவாள் என நினைத்து அதைச் சொல்லாமல் மனதோடு நிறுத்திக் கொள்கிறாள்.

அந்தச் செல்லடிக்குள்ள... நான் காயப்பட்டிருக்க, அவள் தன்னந்தனியா என்னைக் காவி... இழுத்து... பங்கருக்கை கொண்டை வைச்சு கட்டுப் போட்டு தண்ணி பருக்கி... அம்புலன்சில ஏத்திவிட்டு... இப்ப நடந்ததுபோல இருக்கு.

...அவளும் நானும் பள்ளிப் பருவத்திலிருந்தே தோழிகள் தான். படிக்கும் போதும்சரி, வெளியில சுற்றும்போதும் சரி சேர்ந்துதான் இருப்பம்... அவளைக் கண்டதும் மான்விழிக்கு பழைய சம்பவங்கள் கண்முன் விரிந்தன...

"மான் விழி எப்படிப் போகுது வாழ்க்கை? யாழ்மொழி குறுக்கிட்டாள்.

நான் இப்ப தையல் கடைக்கு உடுப்புத் தைக்கப் போறனான். அதில வாற வருமானத்தலதான் ஏதோ கட்டுமட்டா வாழ்க்கை நடக்குது. அவரும் வெளி நாட்டுக்கெண்டு வெளிக்கிட்டு இடையில நிக்கிறார். அம்மா ஒரு சீட்டுப்போட்டவா. அதில கிடைச்ச காசையும் அவவின்ரை, என்ரை நகைநட்டெல்லாத்தையும் அடகுல வைச்சுத்தான் அவரை அனுப்பினம். அதுவும் பிரச்சினையாப் போட்டுது... அது ஒரு பக்கம்.

இங்கையெண்டாலெண்டால் மனிசன வெளியில அனுப்பீட்டு வேலைக்கெண்டு, பொம்பிளை ஊர்சுத்தித் திரியுதெண்டு கதை...

"என்ன செய்யிறது? பொம்பிளையள் தனியா செயற்பட்டாலும் இந்தச் சமூகம் தவறான கோணத்திலதான் பார்க்குது..." என்றாள் யாழ்மொழி.

"அதுகிடக்கட்டும் விடு. நீ என்ன செய்கிறாய்..?" என்று கதையைத் திசைமாற்றினாள் மான்விழி.

"உனக்குத் தெரியும்தானே... இந்த வன்னிப் பிரளயத்துக்குள்ள அவரை இழந்திட்டன் நான் என்று.

பிறகென்ன... இந்தா ... இந்த ஆடுமாடு கோழியோட, அப்பா அங்கின கொண்டுவாற வருமானத்திலயும் ஏதோ பட்டினியில்லாமல் பிள்ளையை வளக்கிறன்...

இரு மான்விழி. தம்பி எழும்பிவிட்டான்... அழுகிறான்.. அவனுக்கு நித்திரையால முழிக்கேக்கை நான் பக்கத்தில இருக்கோணும். இல்லையெண்டால் அழுகைதான்" என்றவள் எழுந்து சென்று மகனை மகனைத் தட்டி... மறுபக்கம் உறங்க வைத்தாள்.

அவன் முகத்தைப் பார்க்கும் போதெல்லாம் யாழ்மொழிக்கு தன் கணவனின் சாயல் நிழலாடும்... அவளின் மகன், முழுதும் தந்தையின் சாயல்...

அவன் எந்தக் குறையும் இல்லாமல் வளர்ந்து, தந்தையைப் போல் பெரியாளாக வரவேணும் என்பதில் அவள் கண்ணும் கருத்துமாக இருந்தாள். ஒரு தாய்க்குத்தாயாவும் தகப்பனுக்குத் தகப்பனாகவும் தானே இருந்து தன்ரை பிள்ளையை ஆளாக்கவேண்டும் என்பதுதான் அவளின் ஆசை. ஒரு தாய்க்கு இதைவிட வேறென்ன ஆசை.

பிள்ளை உறங்கிவிட்டான். யாழ்மொழி, கிணற்றடிப்பக்கமாக நின்ற தென்னையில் இரண்டு இளநீரைப் பறித்துக் கொண்டு மாமரத்தடிக்கு விரைந்தாள்.

"இதை குடியடி மான்..."

கடைக்குப் போறதுக்கு யாருமில்லை...இதையாவது குடியன்"

"பறவாயில்லை யாழ்மொழி... இதுதான் உடம்புக்கு மிகவும் நல்ல பானம்... இயற்கையானது... அதுவும் உன்ரை தோட்டத்தில... மருந்துமாயம் இல்லாமல் உற்பத்தியானது. இதைவிட நல்ல ஒன்றை நீ எனக்குக் கொடுக்க முடியாது."

யாழ்மொழியின் இரண்டு ஆட்டுக்குட்டிகளும் நான் இருக்கிற கதிரைமீது ஏறி இறங்கி விளையாடுகின்றன. ஒன்று வெள்ளையும் கறுப்பும். மற்றையது மண்ணிறம் எனக்கு சந்தோசமாக இருந்தது. இரண்டு ஆட்டுக்குட்டிகளும் எங்கள் குழந்தைகளைப் போல துள்ளிக் குதித்து விளையாடுகின்றன...

"மகள் பள்ளிக்கூடத்தால வரப் போறாள்... ஏத்தப் போக வேணும். போகட்டே யாழ்..."

"உனக்கொண்டு சொல்ல வேணுமடி மான்..."

"என்ன...!"

நான் என்ரை பிள்ளையை நல்லா வளக்க வேணுமெண்டால், அப்பான்ரை வருமானமும் என்ரை இந்தக் கால்நடை வளர்ப்பு வருமானமும் போதாது... பிள்ளையை தங்கைச்சியிட்டைக் குடுத்திட்டு நான் வெளிநாடு-அதுதான் இந்த அரபு நாட்டுக்கு, பணிப் பெண்ணாகப் போகப் போறன்."

உண்மையில் நான் அதிர்ந்து போனேன். எனது கணவனுக்கே இன்னும் ஒரு வழியையும் காணேல்ல. இடைநடுவே நிற்கிறார்...

இவள் பொம்பிளை. என்ன செய்யப்போறாள்...

ஏதோ அதிக ஆசையில்லாமல், அதனால், அதிக கவலை, துன்பமும் இல்லாமல் உள்ளதைக் கொண்டு எளிமையான, சிறப்பான வாழ்க்கையை நடத்துகிறாள்... என்று பெருமைப் பட்டுக் கொண்டன்...?

அவளின் இந்த முடிவு... சற்று ஏற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது எனக்கு.

இருந்தாலும்... இது அவளின் அதிர்ஷ்டத்தைப் பொறுத்த விடயம் என எண்ணினேன்.

அவளின் ஆசைக்கு முற்றுப் புள்ளி வைக்க நான் விரும்பவில்லை.

"கடவுள் உனக்கு வழிவிடட்டும். இனியாவது உன் வாழ்க்கையில் துன்ப துயரங்கள் அணுகாமல் இருக்கட்டும்... கவனமாகப் போய்வா.. என்று வாழ்த்திவிட்டு" யாழ்மொழியிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டேன்... இருந்தாலும், என் மனம் சற்றுப் படபடப்பாகவே இருந்தது... அவள் எண்ணிய காரியங்கள் ஈடேற வேண்டும் என்று இறைவனை மனதுக்குள் பிரார்த்தித்துக் கொண்டு படலையை விட்டு வெளியேறினேன்.

வீடு நோக்கி நடக்கிறேன். வீதியிலே கொக்கிளாய் நோக்கி பேருந்து, பயணிகளுடன் செல்கிறது. ஐஸ்பழம் விற்கும் சைக்கிள் ஒன்று பாடியபடி செல்கிறது. சாலையோர வேம்பமரத்துக்குக் கீழ் இரண்டு சிறுவர்கள் பனங்கிழங்குகளை விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள்...

காலம் நகர்ந்துகொண்டிருந்தது. யாழ்மொழி தனது மூன்று வயது மகனை தங்கையோடு விட்டுவிட்டுப் புறப்படப் போகும் நாளும் நெருங்கிக் கொண்டிருந்தது.

குழந்தை தவிக்கப் போகும் தவிப்பை எண்ணும் போதெல்லாம் யாழ்மொழிக்கு கண்கள் அவளையறியாமலே குளமாகும்.

இருந்தாலும் அவன் பெரிய படிப்புப் படிச்சு பெரிய ஆளாக வரவேணுமெண்டால், பணம் என்றது, பெரிய விஷயம்தான் என்பது அவளின் உறுதியான முடிவு. எனவே, மனதை நன்றாகவே திடப்படுத்திக் கொண்டாள்.

அன்று வெள்ளிக்கிழமை கவுதிக்குச்செல்வதற்காக கொழும்பு செல்லத் தயாரானாள் யாழ்மொழி.

தன் மகனை ஆசையோடு தூக்கி முத்தமிட்டாள்.

தான் அடிக்கடி நடக்கும் வீட்டு ஒழுங்கையில் இரண்டு, மூன்று தடவைகள் திரும்பத் திரும்ப நடந்தாள்.

தான் தண்ணீரூற்றி வளர்த்த வாழைமரங்களை சுற்றிச் சுற்றி வந்தாள். ஆசையோடு வளர்த்த ஆட்டுக்குட்டிகளுக்கு முள்முருக்கிலையை ஒடித்து சாப்பிடக் கொடுத்தாள்.

முற்றத்தில் பூத்து நின்ற தும்புச் செவ்வரத்தையின் பூக்களை பறித்து காளி கோவிலின் முன்படியில் வைத்துவிட்டு, விமான நிலையம் செல்லும் பேருந்து நிலையத்திற்குச் செல்லத் தயாரானாள்...

எவ்வளவு ஆழமாக நேசித்திருந்த மண்ணை விட்டு, பழகிய ஊர் உறவை விட்டு, உண்மையில் எவ்வளவோ வலிகளைப் பொறுத்துக் கொண்டு, அவளின் பயணம்...

பணிப்பெண்ணாக... ஒரு புதிய- துயர வாழ்க்கைக்கு முகங்கொடுக்க, புதிய இடத்தில், வேற்று மொழி, மதம் கொண்டவர் மத்தியில்... பெண்ணடக்குமுறை... உலகறிந்த உச்சம் கொண்ட அந்த நாட்டுக்கு அவள் போய்க் கொண்டிருக்கிறாள்...அவளை வழியனுப்பச் சென்ற என் மனதில்... பல எண்ணங்கள்... ஓடிமறைகின்றன.

அவளின் வாழ்வு விடியுமா...? அவளின், தனது பிள்ளை பற்றிய கனவு பலிக்குமா...? இந்த மாயவுலகுக்குள்..., புதிய உலக ஒழுங்குக்குள்.. அவளும்...ஒரு சிறு புள்ளியாக...

கண்களுக்கு எட்டாத, ஸ்பரிசிக்க முடியாத , விம்பமாக...?

அவள், திரும்பி வருவாளா...?

எப்போது...?

இங்கே...அவளுக்காகக் காத்திருக்கும் அவளின் மகன்...

அவனின் தந்தையின் இரத்தங்குளைந்து, உலர்ந்துவிட்ட மண்ணில்... தாயின் வியர்வையும் மூச்சுக்காத்தும் கலந்து, நாளாகிய மண்ணில்...

ஈரக்காற்றை... சொந்தக் காற்றை... சுவாசித்தபடி...தாய் நிலத்தில்...!

ஏக்கத்தோடு...!

முல்லைதிவ்யன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவியைக் கொடுத்து விசாரணையை தடுத்து நிறுத்திய புதிய அரசு




வன்னிப் பேரவலம் இப்போது தனிப்பட்ட இழப்புக்களாக மாற்றப்பட்டுள்ளது. மண்விடுதலைக்காகச் சமராடி ஆகுதியானவர்கள் விடயம் புரியாதவர்கள் என்றவாறு சமகாலத்து தமிழ் அரசியல் தலைமை நடந்து காட்டியுள்ளது.

சர்வதேச விசாரணை என்பதை விட்டுக்கொடுத்தல் என்பதற்கு சன்மானம் எதிர்க்கட்சித் தலைமை என்பதாக எங்கள் நிலைமை முடிந்து போயிற்று.

இந்த விடயத்தில் யாரையும் குறைகூறுவது பொருத்தமாகாது. தமிழர்களின் தலைவிதி அதுவென்றால் என்ன செய்யமுடியும். நாமே நமக்குப் பகையும் நாமே நமக்கு நட்பும் என்ற மணிவாசகரின் வார்த்தைதான் நினைவுக்கு வருகின்றது.

நாங்களே வாக்களித்து நாங்களே பாராளுமன்றம் அனுப்பிவிட, அவர்கள் அரசுடன் ஒன்றுசேர்ந்து எதிர்க்கட்சித் தலைமையைப் பெற்று அதற்குச் சன்மானம் சர்வதேச விசாரணையை விட்டுக்கொடுப்பது என்ற முடிவுக்கு வந்தனர்.

இப்போது சர்வதேச விசாரணை இல்லை என்றாயிற்று. தமிழ் அரசியல் தலைமைக்கு எதிர்க்கட்சித் தலைமைப் பதவி.

அட, இலங்கையில் எதிர்க்கட்சித் தலைமைப் பதவி என்பது ஜனாதிபதியைவிட, பிரதமரை விட மிகவும் அதிகாரம் வாய்ந்தது போல எங்கள் தரப்பால் நினைக்கப்படுகிறது.

கூடவே, இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்றும் கூறப்பட்டிருக்கும்.


தந்தை செல்வநாயகம் செய்யாததை; அமிர்தலிங்கத்தால் முடியாததை ஏன்? தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் இயலாததை நான் செய்து காட்டுகிறேன் பார் என்ற தடிப்பில் அலுவல்கள் நடக்கின்றன.

ஓடுகின்ற பஸ்களில் புதிதாகப் பயணம் செய்கின்ற சிறுபிள்ளைகள் தாம் இருக்கின்ற பஸ் ஓடுவதாக நினைப்பதில்லை. மாறாக மரங்கள், கொடிகள், செடிகள், கட்டடங்கள் ஓடுவதாகவே புலப்பட்டுக் கொள்வர். சிறிதுகாலம் செல்ல பயணத்தால் ஏற்பட்ட பழக்கமும் அனுபவமும் பஸ்தான் ஓடுகிறது மற்றையவை நிலையாக உள்ளன என்பதை உணரவைக்கும்.

இதுபோன்ற நிலைமையில்தான் தமிழ் அரசியல் தலைமையும் உள்ளது.

அதாவது சர்வதேச விசாரணையை விட்டுக்கொடுப்பதன் மூலம் எதிர்க்கட்சித் தலைமையையும் இனப்பிரச்சினைக்கான தீர்வையும் அமைய முடியும் என்று தமிழ் அரசியல் தலைமை நினைக்கிறது.

ஆனால் இலங்கை அரசோ சர்வதேச விசாரணையில் இருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்காக எதிர்க்கட்சித் தலைமையை தமிழர் தரப்புக்கு கொடுப்பதில் எந்தத் தவறும் இல்லை என்று கருதுகிறது.



# எதிர்க்கட்சித் தலைமை எப்பவோ முடிந்த முடிபு

பாராளுமன்றத்தில் 16 ஆசனங்களைக் கொண்ட ஒருவருக்கு எதிர்க்கட்சித் தலைமையைக்கொடுத்து சர்வதேச விசாரணை என்ற மிகப்பெரிய ஆபத்தில் இருந்து தப்பித்துக்கொள்வதே புத்திசாலித்தனம் என்ற அடிப்படையில் தென்னிலங்கை ஆளும் வர்க்கம் செயற்படுகிறது.



அதேநேரம் விடுதலைப்புலிகளைக் கொன்றொழித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் படைத்தளபதிகள் ஆகியோரைக் காப்பாற்ற வேண்டும் என்பதில் புதிய அரசு மிகத் தெளிவாக இருக்கிறது.

ஆனால் தமிழ் அரசியல் தலைமையின் தலைமை விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட வேண்டியவர்கள் என்ற விருப்பத்தை உள்ளார்ந்தமாகக் கொண்டுள்ளது.

விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டதாலேயே நாங்கள் தமிழ் அரசியல் தலைமையாக இருக்க முடிகிறது. எதிர்க்கட்சித் தலைமையை எடுக்க முடிகிறது என்ற நினைப்பால் சர்வதேச விசாரணையைத் தாரை வார்த்துத் தண்ணீரால் கழுவி விட்டது.

வன்னிப்போரில் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டனர் என்பதற்கு அப்பால் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கொன்றொழிக்கப்பட்ட கொடூரத்தையும் தமிழ் அரசியல் தலைமை மறந்து போய் அமிர்தலிங்கத்திற்கு அடுத்த எதிர்க்கட்சித் தலைவர் நானே.

என் அந்திமத்திற்கு முன்பாக அந்த இடத்தைப் பிடித்துக்காட்டுகிறேன் என்ற விடாப்பிடியில் தமிழினத்தின் அத்தனை தியாகங்களும் எரிந்து கருகி நாசமாகிப் போயிற்று.

சர்வதேச விசாரணையை தவிர்த்து அரசுடன் உடன்பட்டு அரசியல் தீர்வையும் பெற்றுவிடுவதே நல்லது என்று தமிழ் அரசியல் தலைமை நினைக்குமாயின் அதற்குள் இரண்டு மகா பிழைகள் இருப்பதையும் அவை உணரவேண்டும்.

அதாவது சர்வதேச விசாரணையை விட்டுக்கொடுப்பதன்மூலம் தமிழின அழிப்பு செய்தவர்கள் தப்பித்துக் கொள்வர் என்பது ஒன்று.

அடுத்தது சர்வதேச விசாரணையை விட்டுக் கொடுத்தமைக்காக இனப்பிரச்சினைக்குத் தீர்வு தரப்படும் என்று நம்பப்படுகிறது. ஆனால் இந்த யுகத்தில் இலங்கை ஆட்சியாளர் எவரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வரார்கள். அவ்வாறு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்று அரசுத் தலைமை விரும்பினாலும் அதற்குப் பேரினவாதிகளும் பௌத்த பீடங்களும் ஒருபோதும் இடம்கொடுக்கமாட்டா.

இதுதவிர அரசியல் தீர்வு என்ற விடயம் முன்னெழும்போது சர்வதேச விசாரணையில் இருந்து தப்பித்த தமிழின அழிப்பாளர்கள் வேகம் கொண்டு அரசியல் தீர்வை அடித்து நொருக்குவர் என்பது நிறுதிட்டமான உண்மை.

எனவே முடிவு சர்வதேச விசாரணையை விட்டுக் கொடுத்ததற்கான சன்மானம் எதிர்க்கட்சித் தலைமைப் பதவி என்பதாக மட்டுமே இருக்கும்.

30 ஆண்டுகாலம் போராட்டம் நடத்தி இலட்சக்கணக்கான தமிழ்மக்களும் பல்லாயிரக்கணக்கான போராளிகளும் உயிர்நீத்து எடுத்தது எதிர்க்கட்சித் தலைமைப் பதவி என்பதாக தமிழரின் சரித்திரம் முடிந்து போகும்.

இத்துயரத்தில் இருந்து தமிழினம் தப்பிப்பிழைத்து தனக்கான நிரந்தரத் தீர்வையும் தனக்கான பாதுகாப்பையும் நிலைநிறுத்த வேண்டுமாயின் சர்வதேச விசாரணை என்றுமட்டுமே சாத்தியமாகும்.

ஆகவே தமிழ் அரசியல் தலைமை இராஜதந்திரத்தோடு செயற்படுவதாக இருந்தால் தமிழினத்திற்கு நீதி கிடைக்கவேண்டுமென விரும்பினால், அதற்கான ஒரேவழி சர்வதேச விசாரணையை வலியுறுத்தி அதனை அமுல்படுத்துவதும் அதன் வழி தமிழ் இன அழிப்புச் செய்தவர்களை தண்டிப்பதுமாகவே இருக்கும். இதைச் செய்யாமல் தீர்வு கிடைக்குமென நினைத்தால் எல்லாம் படுதோல்வியும் ஏமாற்றமுமாகவே முடியும்.

விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மோதிரம்



விஜயநகரப் பேரரசின் அவை கலைந்தது. அரசர் கிருஷ்ணதேவராயர், வெளியேறிக்கொண்டிருந்தார். ஏனைய உறுப்பினர்களும் பின் தொடர்ந்தனர்.

அப்போது அமைச்சர், தெனாலி ராமனிடம் மெல்லிய குரலில், "தெனாலி... உனக்கோ வயதாகி விட்டது. ஏன் நீ அரசரிடம் கேட்டு பணி ஒய்வு பெறக்கூடாது" என்றார்.

அது அரசரின் காதில் விழவே, அரசர் சிரித்தாவாறு, "தெனாலிராமா! வேண்டுமானால் சொல்... மகிழ்ச்சி யோடு தருகிறேன்" என்றார்.

"அப்படியானால் சரி... ஆனால், ஒரு நிபந்தனை! எனக்குப் பதிலாக வரப்போகிறவரை நான்தான் சோதித் துத் தேர்வு செய்து தருவேன்" என்றார்.

"அதெற்கென்ன அப்படியே செய்ய லாம்...!" என்று அரசர் ஏற்றுக் கொண்டார்.

"சரி, அப்படியென்றால், உங்கள் மோதிரத்தை என்னிடம் கொடுங்கள்" என்றார் தெனாலிராமன்.

ஏன்...? என்று அரசர் கேட்க வில்லை. மோதிரத்தைக் கழற்றப் போனார். அதற்குள் முந்திக்கொண்டு, அமைச்சர் தன் மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்துவிட்டார்.

அதனைப் பெற்றுக்கொண்ட தெனாலிராமன், "அடுத்த வியாழக் கிழமை சோதனை... அதில், வெற்றி பெறுபவர் எனது பதவியை பெறு வார்... நான் ஒய்வில் போய்விடு கிறேன்" என்றார்.

மோதிரத்தைப் பெற்றுக்கொண்ட தெனாலி, ஒரு பெரிய- மரத்தினா லான டப்பாவில் அதை வைத்து மூடி, அரண்மனையில் இருந்த, யானை நீர் குடிக்கும்- ஆழமான பெரிய தொட்டி யினுள் அதைப் போட்டுவிட்டு, யார் அதை எடுக்கிறாரோ அவரே எனக்குப் பின் என் பதவிக்கு வரமுடியும்..." என்றார்.

அடுத்த சில நாட்களில், பதவித் தேர் வுக்கு மனு செய்திருந்த இளைஞர்கள் அனைவரும் வந்து, ஆழமான தொட் டியை பார்த்தனர். அப்போது தொட்டி முற்றிலும் வறண்டு போயிருந்தது.

மோதிர டப்பா அடியில் கிடந்தது. அதனுள் எப்படி இறங்கி அதை எடுப் பது? அனைவரும் பல்வேறு உபாயங் களைச் செய்து பாத்தனர். எவராலும் எடுக்க முடியவில்லை.

அதற்குள் தெனாலிராமன் மீது பல குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

அமைச்சர், அவர் காதில் விழும் படியாகவே, "தெனாலிராமன் அந்த மோதிரத்தை தானே அபகரித்துக் கொள்ள செய்யும் தந்திரம் இது... இல்லா விட்டால், அவன் அதை வெளியில் எடுத்துக் காட்டட்டுமே...!" என்றார்.

அதைக்கேட்டதும், தெனாலிராமன் நேராக அரண்மனைக்குச் சென்றார்.

அரசர் ஒவ்வொரு ஆண்டிலும் ஹோலிப்பண்டிகையின்போது அந்த யானைத் தொட்டியில்தான் வண்ண நீரை நிரப்புவது வழக்கம். அதற்கு நீர் நிரப்பவும் வடிகட்டவும் தனித்தனிக் குழாய்கள் உண்டு. தெனாலி சென்று நீர் நிரப்பும் குழாயை திறந்துவிட்டார்.

தொட்டியில் நீர் நிரம்பவே, அடியில் கிடந்த சிறிய மரத்தினாலான டப்பா நீரில் மிதந்து மேலே வந்துவிட்டது. அதை எடுத்துத் திறந்து மோதரத்தை அரசர்கையில் ஒப்படைத்துவிட்டார். அரசரிடமிருந்து அது அமைச்சரைப் போய்ச் சேர்ந்து விட்டது.

மகிழ்ச்சியடைந்த அரசர் கிருஷ்ண தேவராயர், "மோதிரத்தை எடுத்துத் தருபவர்தான் உனக்குப் பிறகு உன் பதவிக்கு வரமுடியும் என்றாய்... இப் போது நீயே எடுத்துத் தந்துவிட்டாய்... எனவே, உன் பதவி உன்னையே வந்த டைந்துவிட்டது. ஆகவே, உனக்கு ஒய்வு தருவது பற்றி இனி நான் எண்ணிக் கூடப் பார்க்க முடியாது" என்றார்.

தெனாலியை ஒய்வு எடுக்கும்படி தெரிவித்த அமைச்சர் வெட்கித் தலை குனிந்தார்.

# முயற்சி...!



முயற்சி திருவினை ஆக்கும்'
பொய்யாமோ வள்ளுவர் வாக்கு?
முதல் மனிதன் தொடங்கியது.
முடிவு இன்றித் தொடர்வது.
முயற்சி, ஈட்டிய பலன்களை
முற்றாய் உணர்ந்து மகிழ்வோமே!

காடுகள் கழனிகள் ஆனதும்
மேடுகள் சமநிலம் ஆனதும்
தரிசுகள் விளைநிலம் ஆனதும்
கரம்புகள் காவாய் ஆனதும்
மண்ணில் விளைந்த யாவுமே
மனிதர்கள் சிந்திய வியர்வையே

புவியின் வளத்தை அளந்திட்டோம்
பூவுலகை முற்றும் இணைத்திட்டோம்
பூமியில் புதைந்த கனிமமெலாம்
புறத்தே கொணர்ந்துகொட்டிட்டோம்
அணைகள் கட்டி நீரதைத் தேக்கி
அமுதெனப்பண்டம்விளைத்திட்டோம்.

# பூச்சிகொல்லிகளால் குழந்தைகளில்- மனஅழுத்தம்

உணவுப்பயிர்களுக்குப் பயன்படுத்தப் படும் பூச்சிகொல்லி மருந்துகள், அவற்றைத் தாக்கும் பூச்சிகளின் மூளையையும் நரம்பு மண்டலத்தையும் பாதித்து அவற்றை அழிக் கின்றன.

கரிமப்பயிர் உற்பத்தி-கரட்



அம்மருந்துகள் மனிதன் உட்பட விலங்கு களிலும் அதே தாக்கத்தையே விளைவிக் கின்றன என்று இது பற்றிய ஆய்வில் ஈடுபட் டுள்ள விஞ்ஞானிகளில் ஒரு பகுதியினர் தெரி விக்கின்றனர்.

இதனால், தற்பொழுது மக்கள் அசேதன வளமாக்கிகள் பயன்படுத்தப்பட்டு பயிரிடப்பட் உணவுப் பொருட்களை கைவிட்டு, சேதன வளமாக்கிகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய் யப்படும் பழங்கள், காய்கறிகளை தெரிவுசெய் யும் பழக்கத்துக்கு மாறிவருகின்றனர் என்று வளர்ச்சியடைந்த நாடுகளின் சந்தை ஆய்வு கள் தெரிவிக்கின்றன.

மேற்படி ஆய்வுகள் சம்பந்தமான சில விட யங்கள் கீழே சுருக்கமாகத் தரப்படுகின்றன.

2014 ஜுலையில் பிரித்தானிய (Journal of nutrition) வெளியிட்ட அறிக்கையின்படி கரிமப் பயிர்கள் (சேதன வளமாக்கிகள் பயன்படுத்தப் பட்ட பயிர்கள்) 17% வீதம் நோயெதிர்ப்புச் சக்தியை அதிகமாகக் கொண்டுள்ளது என்று தெரிவிக்கிறது.

அதாவது, பூச்சிகொல்லி, களைகொல்லி, வேறு ஓமோன்கள் பயன்படுத்தப்படும் உற்பத்திப் பொருட்களிலும் பார்க்க 17 % அதிகமான நோயெ திர்ப்புச் சக்தியைக் கொண்டுள்ளன. மேலும் கரிம உணவுப் பயிர்கள், பக்கவாதம், புற்று நோய் வாய்ப்பை மிகவும் குறைக்கிறது என்றும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

2012 -ல் குழந்தைகள் மருத்துவர்களுக் கான அமெரிக்க அக்கெடமி தனது அறிக்கை யில் கருவிலுள்ள குழந்தைகள் மற்றும் வளரும் பிள்ளைகளுக்கு பூச்சிகொல்லி, களைகொல்லி பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன் படுத்தப்பட்ட உணவுப் பொருட்களைத் தெரிவு செய்யுமாறு அவர்களின் பெற்றோர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. பூச்சிகொல்லிகளில் உள்ள நச்சுத் தன்மைகள் இவர்களை இலகுவில் பாதிக் கிறது என்பதுவே முக்கிய விடயமாகும்.




2014 இல் வேறொரு ஆய்வின்படி- பூச்சி கொல்லிகள் பயன்படுத்தப்படும் வயல்களுக்கு அருகில் வசித்துவந்த கர்ப்பிணிப் பெண்களி டம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 970 கர்ப்பிணிப்பெண்கள் ஆய்வுக்குட் படுத்தப்பட்டிருந்தனர். இதில் மூன்றில் ஒரு பங்கினர், பூச்சிகொல்லிப் பயன்பாட்டுக்குரிய வயல்களுக்கு, ஒருமைலுக்கு உட்பட்ட பிரதேசங் களில் வசித்திருந்தனர். இவர்களில் 60 % வீதமானவர்களுக்கு மேற்பட்டவர்களின் குழந் தைகள், மன இறுக்கம் (Outism Spectrum Disorders) என்ற நோய்க்கு உட்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.




இவர்கள் வாழ்ந்த பகுதிகளில் பூச்சிகொல்லி களில் காணப்பட்ட அசேதன மூலக்கூறுகளின் காரணமாகவே இத்தகைய நோய்த்தாக்கம் ஏற்பட்டது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலே குறிப்பிட்டதுபோன்று, இந்த அசே தன மூலக்கூறுகள், குழந்தைகளின் மூளை, நரம்பு மண்டலத்தைப் பாதிக்கின்றன என்பதை புரிந்துகொள்ள முடியும்

பூச்சிகொல்லிகளின் அசேதனங்கள், நீர், வளி, நிலம் ஆகியவற்றை மாசுபடுத்துகின்றன. (அத்தோடு மண்ணுக்கு நன்மை பயக்கும் நுண்ணுயிர்களையும் இவை அழித்தொழித்து விடுகின்றன.)

இதன் மூலமும், நேரடியாகவும் மனிதர் கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

தமிழில்-பாமா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532




## தியாகம் என்றால்?

**கோபி — கெருடாவில்**

**நீங்கள் யாரையாவது பார்த்து வியந்ததுண்டா?**

பால்காரன், பலூன்காரன்.
தண்ணீரை விற்கலாம் என முதலில் கண்டு பிடிச்ச பால்காரனையும் காற்றை விற்கலாம் என முதலில் கண்டுபிடித்த பலூன் வியாபாரியையும் பார்த்து வியந்திருக்கிறேன்.

**ஜெயா — கொடிகாமம்**

**தமிழர்களின் தலைமை பற்றி?**

தமிழனுக்கு நாடுதான் இல்லை என நினைத்துக் கொண்டிருந்தோம். நல்ல தலைமையும் இல்லை என்பதை தற்போதைய செயற்பாடுகள் விளக்குகின்றன.

**தவம் — மீசாலை**

**யானை தன் கையாலேயே தனக்கு மண்ணள்ளி போடுமாம்? என்பதன் அர்த்தம்?**

வாழ்க்கையில் பல பிரச்சினைகளுக்கு முக்கிய காரணமே நம் உடலுக்கு நாம் டாக்டர் ஆகவும் நம் மனதுக்கு நாம் வக்கீலாகவும் இருப்பதுதான்.

**ரஜிதன் — சுதுமலை**

**உங்கள் வேலையை எனக்குத் தருவீர்களா வியாசரே?**

இல்லையப்பா பதில் எழுதிப்பழகிவிட்டது இனிக் கேள்வி கேட்க என்னால் முடியாது. மன்னித்துவிடும் உமக்கு ஏதும் மார்க்கற்றிங் வேலை வாங்கித் தருகின்றேனே?

**தருண் — கோப்பாய்**

**தியாகம் என்றால்?**

மூன்றாவது முத்தம் கொடுக்கும் போதே அவனின் கன்னங்கள் சிவந்து அழ ஆரம்பித்துவிட்டாள். முதலில் 'சேவ்' எடுக்க வேண்டும் என் செல்ல மகளுக்காக.

**ரூபன் — சுன்னாகம்**

**சமீபத்தில் சிரிக்க வைத்த விடயம்?**

போர்க்குற்றத்திற்கான ஐ.நா. சர்வதேச விசாரணை உள்ளக விசாரணையாக்கப்பட்ட அதேநேரம் எதிர்க்கட்சி தலைமை கூட்டமைப்புக்குகிடைத்தது. (ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் எதிர்ப்புக்களை மீறியும்) உதடுகள் சிரித்தன உள்ளம் குமுறி அழுது கொண்டிருந்தது.



## பெண்களின் மச்சத்திற்கு பலன் உண்டா?

**தர்சி — வயாவிளான்**

**தேர்தல் காலத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுமா?**

வாக்குறுதியா... யாருக்கு யார் தந்தது. அதெல்லாம் உசுப்பேற்றுவதற்குச் சொன்னதையா. விளையாட்டுக்குச் சொன்னதையெல்லாம் உண்மையென்று எண்ணியதற்கு நாமென்ன செய்ய?
நாகபாம்புகள் அடங்கிக் கிடக்க நாக்கிளிப்புழு படமெடுத்தாடுகிறதாம் என்று ஒரு முதுமொழி இருக்கிறது. இருக்க வேண்டியவர்கள் இல்லாததால் நாக்கிளிப்புழுக்கள் நாகமாகிவிட்டது.. போட்ட புள்ளடிகளை மீண்டும் அவர்கள் எங்கள் முகத்தில் போடுவார்கள். அப்போது தெரியும் நாகமெது நாக்கிளி எது என?



"தலைவர் மாற்றி மாற்றிப் பேசும் பழக்கம் உள்ளவர் என்பதால் பத்திரிகையாளர்களும் ரி.வி. அன்பர்களும் அவர் பேச்சைப் பதிவு செய்ய வேண்டாம் என்று அன்புடன் எச்சரிக்கிறோம்!"

**சி.சுகிர்தமலர் — உரும்பிராய்**

**இன்றைய முதியோர் மனநிலை பற்றி?**

தன் மகன் கையால் கொள்ளி போட வேண்டும் என ஆசைப்பட்ட முத்தம்மாள் பட்டாசுக்கடை வெடி விபத்தில் சிக்கிக் கருகிப் போனாள்.
(சமீபத்தில் படித்த போது என் மனதை உருக்கிய கதை)
ஒவ்வொரு பெற்றோருக்கும் அடிமனதில் ஆழப் பதிந்திருக்கும் விடயம் தன் மகன் கையால் கொள்ளி போடவேண்டும் என்பது தான்.



## இன்றைய முதியோர் மனநிலை பற்றி?

**மதி — சுழிபுரம்**

**அப்பாவின் அன்பைப் பற்றி சொல்லுங்கள்?**

உங்கள் அப்பா உங்களில் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார் என்று அறிய வேண்டுமென்றால் ஒருநாள் நித்திரை போல பாசாங்கு காட்டி விழித்திருந்து அப்பாவின் அம்மாவுடனான உரையாடலை கேட்டுப்பாருங்கள்.

**கிருஷா — வரணி**

**உங்கள் மனைவி வாழைப்பழத்தோலில் சறுக்கி விழுந்து விட்டாராமே?**

ம்ம்ம்... முயற்சி செய். முயற்சி திருவினையாக்கும் என்பதை தொடர்ந்து முயற்சித்தேன். என் முயற்சி பலித்தது (வயது போனால் வாழைப் பழம் சாப்பிடுவதை தவிர்ப்பது நல்லது)

**கௌரி — கரணவாய்**

**தமிழர்களின் இனப்படுகொலை பற்றி?**

உலக நாடுகள் சேர்ந்து வெட்டிய குழி

**வே.அகிலேஸ்வரன் — மருதங்கேணி**

**பெண்களின் மச்சத்திற்கு பலன் உண்டா?**

உங்கள் மனைவியின் உள்ளங்காலில் மச்சமிருந்தால் நீங்கள் பிறர் கேள்விகளுக்குப் பதில் கூறவேண்டிவரும் எனப் படித்துவிட்டு ஓடிப்போய் மனைவியின் உள்ளங்காலை நோக்கினேன். மச்சம் இருந்தது. நான் வியாசர் என்பது நினைவில் வந்தது.

**பவானி — புன்னாலைக்கட்டுவன்**

**சோதனைமேல் சோதனை வந்தால் என்ன செய்யலாம்?**

சோதனை வேதனையானதுதான். ஆனால் வாழ்வில் அசைக்கமுடியாத சாதனைகளைச் செய்தவர்களின் வாழ்வில் சோதனைகள் ஏராளம். அந்தச் சோதனைகளை அவர்கள் முட்களாகப் பார்க்கவில்லை. ஏணிப்படிக்கற்களாகப் பார்த்தார்கள். உச்சம் தொட்டார்கள்.

### அன்பு வாசகர்களே!


நீங்களும் வியாசர் பகுதிக்கு உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள். அரசியல், ஆன்மீகம், சமூகம், பொழுதுபோக்கு சார் கேள்விகளை மிக சுருக்கமாக உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பி வையுங்கள்.

ஆசிரியர்
வியாசர் பதில்கள்
இல. 3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

குறுந்தகவல் (SMS)
021 567 1532

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## எப்படி மறந்தீரோ

முதுகோடு முதுகுரச
முள்ளந்தண்டு தானிறு
அன்பொழுகக் குடித்த
அந்த ஐஸ்கிறீமை மறந்தீரோ?
இதமாக என் பைக் பின்
இருந்தீரே நானோட
எப்படி முடிந்ததுவோ?
இதற்கிடையில் மறப்பதற்கு
பொன்னான மழைநேரம்
பூமிமட்டும் அறியும்படி
என்னோடு ஒண்ணாக
ஒரே பைக்கில் போனதை நீர்
இந்நாளில் மறந்தீரோ?
அன்பாலே நீர் தந்த
அன்பளிப்பு எல்லாமே
என்புருக வைக்குதய்யா
எனை நீர் ஏன் வெறுத்தீரோ?
பொங்கலொடு வருசமுமாய்
புது உடுப்பு தீபாவளி
என்றெல்லா நாளினுக்கும்
பைமுட்ட பொருள் தந்தீர்
கைவிட்டு விடுவதற்கா?
காத்திடுவேன் உனை என்றும்
கைவிடேன் என்றதெல்லாம்
கனவிலே மொழிந்த நல்ல
கனிவான வார்த்தைகளோ?
இதயத்து வலியதனை
எப்படி நானுரைக்க
வலி நீங்க வார்த்தை சொல்வீர்
வாழ்நாள் உமக்காக

அன்பு
மிருசுவில்

## இமயம் தொட

இருள் இருள் என
இரவுக்குள் அகப்பட்டுக்
கிடந்திடாதே!
ஒளி ஒளி என
மனதில் ஒளியேற்றி
வெளியே வா!
ஒரு சிறு பொறியிலிருந்தே
இந்த உலகம் ஒளிர்கிறது
எனில்
நீ மட்டுமேன் இருளில்
வெளியே வா!
ஒளி இருள் உன் மனம் சார்ந்ததே!

மாவை. நா.கஜேந்திரன்

## ஊமையின் குரல்

யாருக்குக் கேட்கும் ஊமையின் குரல்???
ஊரின் அவலம் கண்டு உரத்து அழ ஆசை
குரலைக் கடவுள் பறித்துக்கொண்டான்
உண்மைகளை மறைக்கவென்று...
அழகான பாட்டுப் பாடி அவை போற்ற வாழ
ஊமைக்கும் ஆசை உணரவில்லை கடவுள்...
தப்புகளைத் தட்டிக்கேட்க நா ஒன்றுதா என்றால்
இறைவனும் சிலையாய்மாறி
கல்லாய் ஊமையாய் ஆகியதுண்டு...
உறங்காத குழந்தைக்கு தாலாட்டுப்பாட
உரத்து ஒரு குரலில் உரக்கமாய்
பேசிவிட வாராதோ வார்த்தை???
யாருக்குக் கேட்கும் ஊமையின் குரல்???

சொ.சோதிலட்சுமி
முல்லைத்தீவு



## இல்லை

எழுதப்படாத காகிதங்கள்
பத்திரிகைகள் ஆவதில்லை
சிந்தப்படாத மைத்துளிகள்
வரலாறு படைப்பதில்லை
முயற்சிக்காத மனிதர்கள்
முன்னேற்றம் காண்பதில்லை
தீட்டப்படாத தூரிகைகள்
வண்ணங்க்ளை
அறிந்திருப்பதில்லை
ஓடாத நீர் நிலைகள்
கரைதாண்டிப் போவதில்லை
சுமை தாங்காத இதயங்கள்
வாழ்வின் தத்துவங்கள்
அறிந்திருப்பதில்லை

அரியாலையூர்
செ.மிஷாந்தி

# மௌனத்தின் தேடல்- 264



## நாளைய தலைவர்களா...

கிணற்றுக்குள் பூதமென்று
பயம் காட்டி சிறுவர்களை
பணிய வைத்த
காலம் மலையேறி...
இக்கிணற்றையும் தோண்டினால்
மனிதப் புதைகுழிதான் என்று
காலைவிட்டு எம் கண்களை
விழிக்க வைக்கும்...
இன்றைய சிறுவர்கள்தான்
நாளைய தலைவர்களா...

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

## பிரயத்தனம்

உயிரை மெய்யென்று
கூறிக்கொண்டாலும்
உயிர் பிரியும் போது
மெய்யும் பொய்யாகிவிடும்
நாரதர் கலகமென்றும்
நன்மையில் முடிவதுபோல்
சோகநிலை வராதிருக்க
இந்தச் சிறுவர்களின்
பெரும் பிரயத்தனமென்றும்
மறவாத வெற்றியைப்
பெறவேண்டும்
பொதுக்கிணறும் விரைந்து
தூய்மைபெற வேண்டும்

க.நாகராசா
நுணாவில்

## அடக்கி வளர்ப்போம்

வாழப்பிறந்த சிறுவர்களே
பாழுங்கிணற்றில் விளையாடி
வீழ்ந்திடாதீர்
நீருக்குள் நாளும் பிள்ளைகள்
மூழ்கி இறப்பதை அறியீரோ
சூழ்நிலை கருதிப் பெற்றோரும்
ஒழுக்கம் சிறக்க வளர்த்திடுவீர்
அடக்கி நாளும் பிள்ளைகளை
அன்பாய் வளர்த்தால்
துன்பமில்லை

துரை
தென்மட்டுவில்

## வாக்கும் நோக்கும்

அரசியலும் ஒரு வகையில்
விசித்திரமான குட்டைதான்
இதைக் கலக்கும் போது
உண்மைகள் வெளிவரும்
நாலும் தெரிந்தவர் போல்
நான்குபேர் கூடுவதும்
நான்குவிதமாய்ப் பேசுவதும்
நாளும் நடக்கும் காரியம்தான்
கோடிகளைப் புரள வைத்து
போதையில் மிதக்க வைத்தாலும்
தடத்திற்கு அகப்படாமல்
தடாகத்தைச் சுத்தமாக்கி
நீந்தும் மீன்கள் போல்
உரிமையை என்றும் காப்பதில்
வலிமை வாய்ந்த சக்தி
வாக்குரிமையென்பதை
மக்கள் மறந்து போகாமல்
தக்க சமயத்தில் நிரூபிப்பர்

அரு.கனகராசா
சாவகச்சேரி

## காலதேவனின் கரங்களில்

வயல்வெளிக் கிணற்றினை
விளையாட்டுப் பொருளாய் எண்ணி
மகிழ்ந்திருக்கும் பிஞ்சுகளை
காலதேவன் கவர்ந்து செல்ல
நேரமாகிவிட்டது என்பதை
மெகாத் தொடர்களில்
மெய்மறந்திருக்கும் அன்னையவர்
அறியவில்லை போலும்

உடுவிலூர் கலா

## சிறுவர்களே

பெற்றோரின் அன்பு
பிணைப்பில் இணையில்லாத
செல்வம் நீங்கள்
பெரியோரின்
துணையில்லாமல்
நீரோடு விளையாட
வேண்டாம்
விளையாட்டு வினையாகிவிடும்
கவனம்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## கடமை

அன்று
பள்ளிப் பருவத்தில்
நண்பர்களுடன்
இன்று
நீர் நிலைகளில் உள்ள
எண்ணெய்க் கசிவை கண்டறிய
அரச ஊழியருடன்


இரா.ஜெ.துஷ்யந்தா
மாதகல்

## ஒற்றுமை

ஒன்றாய்ச் சேர்ந்து சந்தோசமாய்
விளையாடும் சிறுவர்களே
உங்கள் ஒற்றுமை நாளைய உலகை
நிச்சயம் வளமாக்கும்

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

# மௌனத்தின் தேடல் –265



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 09.09.2015ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடந்த 09.08.2015 ஞாயிற்றுக்கிழமை சேவை வழங்குநர் பற்றிய விபரங்கள் வெளிவந்தன. அதனைத் தொடர்ந்து இவ்வாரம் "ஐயோ சேர் அடிக்காதையுங்கோ" என்ற விபரணம் வெளிவருகிறது.**

## மனவெளி

## "ஐயோ!சேர் அடிக்காதையுங்கோ!

வகுப்பின் பின்பக்கத்திலிருந்து வேகமாக பிரம்பின் தும்பு பறக்க அடித்துக் கொண்டு வந்த துரைசேர் கிருஷாந்தனைக் கண்டதும் தன்னுடைய அடியின் வேகத்தைக் கூட்டினார்.

*"ஐயோ சேர் அடிக்காதையுங்கோ!* என்று கதறக் கதற அடி பின்னியெடுத்துவிட்டார்.

*"நான் உனக்கு அண்டைக்குச் சொன்னனான், கிரிக்கெட் கிறவுண்டில காணக்கூடாதென்று" அப்பா உன்னை படிக்க அனுப்பிவிட நீ இஞ்சை பாட நேரத்தைக் கட் பண்ணி கிரிக்கெட் அடிக்க வந்து நிக்கிறாய்?*

பிரம்பின் தன்மையால் கால் சுரீரென்று எரியத் தொடங்கியது. மெதுவாக பார்க்கவே அது அடிபட்ட இடம் சிவந்து வீங்கத் தொடங்கியிருந்தது. அடியின் வலியைவிட அவருடைய திடீர் தாக்குதலால் அவன் சற்று திகைத்துத்தான் போய்விட்டான். அதிலிருந்து விடுபடச் சற்று நேரமாகிவிட்டது.

துரைசேர், "அடிமாடன்" எண்டுதான் நாங்கள் பட்டம் வைச்சனாங்கள் அந்தளவுக்கு ஒரே அடிதான். அவர் தனக்கெண்டு ஒரு பிரம்பைப் பிரத்தியேகமாக வைத்திருப்பார். எந்த விசயம் கதைக்கிறதெண்டாலும் அவர் அருகில் நீட்டி வைக்கப்பட்டிருக்கும் பிரம்பு அவர்களைச் சுதந்திரமாகக் கதைக்க விடமாட்டுது. அவருடைய அடிகளின் கதைகள் ஒவ்வொரு மாணவனின் மனதிலும் வடுக்களாகவும், கால்களில் தழும்புகளாகவும் பதிந்து போயிருக்கின்றன. அது என்னவோ தெரியவில்லை!

துரைசேர் என்ன செய்யச் சொன்னாலும் கிருஷாந்தனுக்கு அவர் சொல்வதைச் செய்யவிருப்பம் வருவதுமில்லை. அவன் செய்வதுமில்லை. அடிவாங்கும் போது மட்டும் சற்றுப் பயந்து விடுவான்.

கிரிக்கெட் விளையாடப் போவது வீட்டிலும் யாருக்கும் பிடிப்பதில்லை. பாடசாலை



யிலும் வகுப்பாசிரியருக்கு பிடிப்பதில்லை. எல்லோர் கண்ணிலும் மண்ணைத்தூவி விளையாடப்போனால், துரைசேரிடம் மாட்டுப் பட்டால் துலைஞ்சுது எல்லாம். கிருஷாந்தனுக்கு படிப்பிலை ஆர்வம் கொஞ்சம் இருந்தாலும் கிரிக்கெட்டில தான் அதிக ஆர்வம்.

*"அப்பா அறிஞ்சால் கொண்டே போட்டு விடுவார்"* வீட்டிலையும் எதிர்ப்புக்கொடிதான்.

வாங்கின அடியின் தழும்புடன் வீட்டுக்குப் போகப்புறப்பட்டான். சற்று வீங்கிய காலின் நிலையையாராவது கண்டால் என்னவென்று சொல்வது. மனதுக்குள் பொய் ஒன்றை உருவாக்கினான். அம்மா நான் வரேக்குள்ளை சறுக்கி விழுந்திட்டன் அது தான் காயம். பயத்துடன் ஒதுங்கிவிட்டான். அவன் மனதில் ஆயிரம் யோசனைகள் இந்தப் பதினான்கு வயதில் தான் ஒரு கிரிக்கெட் கூட சுதந்திரமாக விளையாட முடியவில்லையே. கால் சுரீரென்று வலித்தது.

*"தம்பி விடிய பள்ளிக்கூடம் போகவெல்லேவேணும், வேளைக்குபடு"* அம்மாவின் குரல் கணீரென்று ஒலித்தது.

கண்களை மூடினான். பாடசாலை முடிந்து மாலை நேர கிரிக்கெட் சம்பியன் போட்டி நடந்து கொண்டிருக்கின்றது. கிருஷாந்தனின் இடக்கை பந்துவீச்சில் எதிரணியினர் சுழன்று சுழன்று விழுந்து கொண்டிருந்தனர். சிறுபையனான அவனது பந்துவீச்சின் அபாரத்திறமையை அனைவரும் பாராட்டிக் கொண்டிருந்தனர். அவர்களது அணிவெற்றி பெற்றது. எல்லோரும் அவனைத் தூக்கிச் சுற்றிவந்தனர். மகிழ்வுடன் போட்டி முடிந்தது. நன்றாக இருட்டிவிட்டது. தனியே இருட்டுவழியால் [illegible] சைக்கிளில் மிதித்துக் கொண்டு வருகின்றான். வீட்டில் அனைவரும் தேடப் போகின்றார்கள்.

*என்னபொய் சொல்வது?* என்று யோசித்தவண்ணம் வந்து கொண்டிருந்தான். ஒழுங்கையால் திருப்பும் போதே அவனது மனம் திக் என்று அடித்துக் கொள்கின்றது. நன்றாக இருண்டுவிட்டது. மழை வேறு பெய்யத் தொடங்கியது. நாய்கள் தொடர்ந்து குரைத்துக் கொண்டிருந்தன. பயத்தில் நா உலர்ந்திருந்தது. வழக்கமாக வரும் பாதைதான். ஆனாலும் அவனுக்கு பயங்கரமாக இருந்தது. திடீரென்று நாய் ஒன்று பாய்ந்து அவனைக் கடிக்கத் தொடங்கியது. கத்துகின்றான்.

*ஐயோ! ஐயோ! அம்மா* என்று கத்துகின்றான். நாய் தொடர்ந்து துரத்துகின்றது. கண்களைத் திறக்க அவனால் முடியவில்லை. கனவில் கண்ட காட்சி அவனை விட்டுப்போகவில்லை.

தம்பி! தம்பி! அம்மா, தட்டியெழுப்புகின்றார். கண்ணை முளித்த போது, துரைசேர் கையில் தடியுடன் நிற்பதுதெரிந்தது. குழப்பமாகவிருந்தது. மீண்டும் கண்களைத் துடைத்து விட்டு பார்த்த போது அம்மா தெரிந்தாள்.

அப்போதுதான் அவனுக்குதான் கண்டது கனவு! என்பது புரிந்தது. அம்மாவின் நச்சரிப்புடன் பாடசாலைக்கு கிளம்பினான். அவனுடைய கனவு தன்னுடைய விளையாட்டுடன் சேர்ந்த படிப்புத்தான். ஆனால் வீட்டில் அப்பா எதிர்பார்க்கும் பெரியளவு மதிப்பெண்களை அவனால் எடுக்க முடிவதில்லை. ஆனாலும் ஓரளவு படிப்பான். படிக்கும் நேரத்தைவிட அதிக நேரம் விளையாடுவான். அவன் விளையாடும் போது மிகவும் சந்தோசமாக இருப்பதாக உணர்ந்தான். வகுப்பில் அமர்ந்து அன்றைய கனவை நினைத்துக் கொண்டிருந்தான். கணிதபாடம் நடந்து கொண்டிருந்தது. அவனால் கவனிக்க முடியவில்லை. கனவின் முடிவில் கையில் பிரம்புடன் துரைசேர் நின்றகாட்சி! அவன் கண்களை விட்டுப் போகமறுத்தது. தூரத்தில் அவருடைய குரல் கேட்டது. அப்படியே ஸ்தம்பித்துப் போய் உட்கார்ந்திருந்தான். அவர் தங்கள் வகுப்புக்குத்தான் வருகின்றார். தனக்கு அடிக்கத்தான் வருகின்றார் என்று அதே யோசனையாக இருந்தது. அன்றைய பாடங்கள் எதையும் அவன் கவனிக்கவில்லை. இடைவேளை நேரத்திலும் காலில் ஏற்பட்ட வீக்கத்தின் காரணமாக அவன் விளையாடப் போகவில்லை. சாப்பிடவும் இல்லை. யோசனையுடன் இருந்தான்.

சிலநாட்களில் அவன் மிகவும் சோர்ந்து போய்விட்டான். மனமுடைந்த நிலையில் காய்ச்சல் வந்ததுபோல இருந்தான்.

இரண்டு வாரங்கள் கடந்தன. கிருஷாந்தன் பாடசாலைக்கு வருவதில்லை என்று பாடசாலை அதிபர் வீட்டுக்கு சென்று விசாரித்தார். பெற்றோர் அதிர்ந்து போய்விட்டனர்.

என்னசேர் ஒவ்வொரு நாளும் வெளிக்கிட்டு பள்ளிக்கூடம் தானே வாறவன்? அப்ப அவன் எங்கை போறான்?

கொஞ்சநாளா அவன் போக்கே சரியில்லை... அம்மா பதைபதைக்கத் தொடங்கினாள்.

அப்பாவும் அதிபரும் கிருஷாந்தனைத் தேடக்கிளம்பினர்.

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை துறை சார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

**அனுப்பவேண்டிய முகவரி : சாந்திகம் ஊடகக்குழு,**
**8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக் களும் ஏற்றுக்கொள்ளப்படும்:

Email: psych@sltnet.lk
Face book: Shanthiham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல்நிலை வல்லரசுகளின் நவீன ஆக்கிரமிப்புப் போர்

ஜனநாயகம் என்ற கருதுகோளை உலகிற்கு வழங்கிய கிரேக்கமும், ஜனநாயகத்தின் தொட்டிலாகச் சித்தரிக்கப்பட்ட அதன் தலைநகர் ஏதென்சும் இன்று ஜனநாயகத்தின் கல்லறையாக மாற்றப்



தொழிலாளர் கிளர்ச்சி

பட்டுள்ளன. அனைத்துலக நிதி நிறுவனங்களின் ஆணைகளுக்கு அடிபணிய மாடடோம் என்று கிரேக்க நாடே கிளர்ந்தெழுந்து வாக்களித்த போதிலும், அந்த ஜனநாயக முடிவை ஏற்க மறுத்து அந்நாட்டை அடிமையாக்கியுள்ளன ஏகாதிபத்திய நிதி நிறுவனங்கள். ஏற்கெனவே வேலையின்மை, ஊதியவெட்டுகளால் வாழ்விழந்து நிற்கும் கிரேக்க மக்கள், தற்போது ஏகாதிபத்தியங்கள் விதித்துள்ள நிபந்தனைகளால் ஓட்டாண்டிகளாகி கஞ்சித்தொட்டிகளின் முன்னே உணவுக்காக கையேந்தி நிற்கும் அவலத்துக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கிரீஸ் நாடானது இந்தியா போன்ற பின்தங்கிய ஏழை நாடல்ல. ஐரோப்பிய ஏகாதிபத்தியக் கட்டமைப்பிலுள்ள முதலாளித்துவ நாடுதான். இருப்பினும் அந்த நாட்டில் ஏன் இந்த அவலநிலை?

சமூகரீதியான உற்பத்தியும், உற்பத்தியின் பலன்களை தனிநபர் சுவீகரிப்பதுமான முதலாளித்துவக் கட்டமைப்பானது, இந்த அடிப்படையான முரண்பாட்டின் காரணமாக முதலாளித்துவத்தின் நெருக்கடியாக அவ்வப்போது வெடித்துக்கொண்டிருக்கிறது. இருப்பினும் நெருக்கடியில் சிக்கி வீழ்ந்து கொண்டிருக்கும் முதலாளித்துவக் கட்டமைப்பைத் தூக்கிநிறுத்த, மறுகாலனியாதிக்கம் என்ற புதியதொரு காலனியாதிக்க வடிவத்தைக் கொண்டு உலகை மேலாதிக்கம் செய்து கொள்ளையிடுவதை ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசுகள் செயல்படுத்தி வருகின்றன.

தனியார்மயம்- தாராளமயம்- உலகமயம் என்ற கொள்கை, இம்மறுகாலனியாதிக்கத்தின் பொருளாதாரக் கொள்கையாகப் பின்பற்றப்படுகிறது. உலகளாவிய அளவில் மூலதனத்தை மையப்படுத்தி ஒன்றுகுவிப்பது, உழைப்பை உச்சபட்சமாகச் சுரண்டுவது, சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் அதன் செல்வாக்கு மண்டலங்களைக் கைப்பற்றிக் கொள்வது, மூலதனததையும் வளங்களையும் கைப்பற்றிக் கொண்டு மேலாதிக்கம் செலுத்துவது - என்ற திட்டத்தின் மூலம் ஏகாதிபத்திய வல்லரசுகள் இந்நெருக்கடிகளுக்குத் தீர்வு காண முயன்றன.

இதற்காக காட் ஒப்பந்தத்தை திணித்து, உலக வங்கி, ஐ.எம்.எட், உலக வர்த்தகக் கழகம் முதலானவற்றை ஆயுதங்களாகக் கொண்டு உலகமயமாக்கலைப் பிரம்மாண்ட பரிமாணம் கொண்டதாக மாற்றி, புதிய உலகப்பொருளாதார ஒழுங்கமைவைக் கட்டியமைத்தனர். இந்த உலகமயமாக்கத் திட்டத்துக்குப் பொருத்தமாக அந்தந்த நாடுகளுக்கு ஏற்ப திட்டத்தை வகுத்தனர்.

மேலாதிக்க வல்லரசுகளின் இத்திட்டங்களுக்கு ஏற்ப உலக நாடுகளின் அரசியல்-பொருளாதாரங்கள் மறுவார்ப்பு செயப்பட்டன. இவற்றை ஏற்காத நாடுகளின் அரசுகள் கவிழ்க்கப்பட்டு, விசுவாச அரசுகள் ஏகாதிபத்தியவாதிகளால் நிறுவப்பட்டன.

ஐரோப்பிய கண்டத்திலுள்ள கிரேக்க நாட்டில் அதன் சுயசார்புபொருளாதாரத்தை வீழ்த்தி, ஐரோப்பிய ஒன்றிய கூட்டமைப்பில் இணைத்துக் கொள்வது, யூரோ பொது நாணயமுறையின் கீழ் அந்நாட்டின் பொருளாதாரத்தைப் .பிணைத்து, மூலதனத்தைத் திரட்டிக் கொண்டு உலகமயமாக்கலை விரிவுபடுத்துவத் ஐரோப்பிய ஒன்றியத்தில் மேலாதிக்க வல்லரசாக உள்ள ஜெர்மனியின் திட்டத்துக்கு ஏற்ப கீரீசை மறுவார்ப்பு செய்வது, இதனை வளர்ச்சி என்ற பெயரில் நியாயப்படுத்துவது - என்பது ஏகாதிபத்தியவாதிகளின் திட்டமாக இருந்தது. இதற்கான கருவிகளாக "டிராய்கா" எனப்படும் ஐரோப்பிய ஆணையம், ஐரோப்பிய-மத்திய வங்கி, ஐ.எம்.எ:.ப். ஆகிய மும்மூர்த்திகளைக் கொண்டு கிரீசில் மேலாதிக்கம் செலுத்தும் திட்டத்தை ஏகாதிபத்தியவாதிகள் செயல்படுத்தினர்.

இந்தப் பாதையில் கடந்த 2001 முதலாகப் பயணப்பட்ட போதிலும் கிரேக்கப் பொருளாதாரம் எந்த வளர்ச்சியையும் சாதிக்க முடியாமல் போனதோடு, கடன் சுமை எனும் தீராத நெருக்கடியால் மஞ்சள் கடுதாசி கொடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

கிரேக்கத்தின் பொருளாதார நெருக்கடிக்கு முதன்மைக் காரணம் அதன் சுயசார்பு பொருளாதாரம் அழிக்கப்பட்டதுதான். ஏற்கெனவே கிரீசின் அரசியல்வாதிகள் நடத்திய வீட்டுமனை ஊழலும், முதலாளிகள் நடத்திய வரி ஏய்ப்பும் அரசின் கஜானாவைக் காலி செய்துவிட்டன. தனது பொருளாதாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள சர்வதேச நிதிச் சந்தையில் கடன் பெறுவதைத் தவிர வேறு வழியில்லாத நிலைக்கு கிரீஸ் விழுந்தது. பட்ஜெட் பற்றாக்குறையை மூடிமறைத்து, அந்நாட்டின் பொருளாதாரம் நல்ல நிலையில் இருப்பதாக வெளியுலகுக்குக் காட்ட கிரீஸ் அரசும் அமெரிக்காவைச் சேர்ந்த கோல்டுமேன் சாக்ஸ் வங்கியும் இணைந்து தில்லுமுல்லுகளில் ஈடுபட்ட விவகாரம் அம்பலமானதும், தனது கடன் பத்திரங்களை விற்கக் கூட முடியாத நிலைக்கு கிரீஸ் தள்ளப்பட்டது. இவற்றின் காரணமாக அந்நாடு மீண்டும் "டிராய்கா" மும்மூர்த்திகளிடம் கடன் வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் மேலாதிக்கம் செலுத்தும் ஜெர்மனி, கிரேக்கத்துக்குக் கடனாகக் கொடுத்த தொகையை, அந்நாடடுக்குப் போர் ஆயுதங்களை விற்று பறித்துக் கொண்டது. கிரேக்கத்துக்கு எவ்வித போர் அச்சுறுத்தலும் இல்லாத போதிலும், உலகிலேயே அதிகமாக ஆயுத இறக்குமதி செயும் நாடுகளில் ஐந்தாவது இடத்துக்கு கிரேக்கம் மாற்றப்பட்டது. கிரேக்கத்தில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்த வைத்தும், சுற்றுலாத் துறையில் பெருமளவு முதலீடு செய்ய வைத்தும் அந்நியக் கடன்களை ஏகாதிபத்திய நிதி நிறுவனங்கள் திணித்தன. கடனையும் அதற்கான வட்டியையும் திருப்பிச் செலுத்த முடியாமல் கிரேக்கம் நிதி நெருக்கடியால் தடுமாறிய நிலையில், ஓய்வூதியம் குறைப்பு, அத்தியாவசியப் பொருட்கள் மீது விதிக்கப்படும் மறைமுக வரிகள் அதிகரிப்பு, கல்வி-மருத்துவம் உள்ளிட்டு பல்வேறு மக்கள்நலத் திட்டங்களுக்கான மானியம் வெட்டு உள்ளிட்டு பல்வேறு தாக்குதல்களை அந்நாட்டின் உழைக்கும் மக்கள் மீது ஏகாதிபத்திய நிதி நிறுவனங்கள் மிருகத்தனமாகத் திணித்தன. அதன் பிறகே ஐரோப்பிய ஒன்றியமும் ஐ.எம்.எப்.பும் பற்றாக்குறை நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக கிரீசுக்குக் கடன் கொடுத்தன. அந்தக் கடனில் 85 சதவீதம் பழைய கடன்களுக்கும் அதற்கான வட்டியுமாகப் பறித்துக் கொள்ளப்பட்டதன் விளைவாக, கிரேக்கம் மேலும் அதலபாதாளத்தில் வீழ்ந்தது. ஏகாதிபத்தியங்களின் உலகமயமாக்கத் திட்டத்தின்படி, கடன் பொறியில் சிக்கவைக்கப்பட்ட கிரேக்கம் இவ்வாறுதான் திவாலாக்கப்பட்டது.

தமது வாழ்வுரிமை பறிப்புக்கும் ஏகாதிபத்திய ஆதிக்கத்துக்கும் எதிராகப் போராடி வந்த கிரேக்க மக்கள், அப்போராட்டத்தின் ஊடாக சிரிசா கட்சியைத் தெரிவு செய்து ஆட்சியில் அமர்த்தினார்கள். முந்தைய கிரேக்க ஆட்சியாளர்கள் வாங்கிய கடனை அசலும்


மக்கள் கிளர்ச்சி

வட்டியுமாக திருப்பிச் செலுத்த முடியாத நிலையில், கடந்த ஜூன் 30-ம் தேதியுடன் முடிவடையும் கடன் ஒப்பந்தத்தை நீட்டிக்கு மாறும், திவாலாகிவிட்ட பொருளாதாரத்தை மீட்க புதிதாக 29.1 பில்லியன் யூரோ டாலர் கடன் தருமாறும் சிரிசா ஆட்சியின் பிரதமர், "டிராய்கா"விடம் கோரினார். கிரேக்க அரசாங்கத்துக்கு மீண்டும் கடன் தருவதற்கு, "டிராய்கா" மிகக் கடுமையான நிபந்தனைகளை விதித்தது. அவற்றை ஏற்றுக் கொள்வதா, வேண்டாமா என்பது குறித்து கிரேக்கத்தின் சிரிசா கூட்டணி அரசு, மக்களின் கருத்துக் கணிப்பைக் கோரும் தேர்தலை அறிவித்தது.

இந்நிபந்தனைகளை ஏற்க மாட்டோம் என்று வாக்களிக்குமாறு சிரிசா கூட்டணிக் கட்சியினரும் பல்வேறு இடதுசாரிகளும் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். அதற்கெதிராகத் திரண்ட ஏகாதிபத்தியவாதிகளும் வலதுசாரி பிற்போக்குக் கட்சிகளும் அவற்றின் ஊடகங்களும், "வேண்டாம் என்று வாக்களித்தால் நாடு திவாலாகிவிடும் எல்லோரும் பிச்சைக்காரர்களாகிவிடுவோம் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து கிரேக்கம் வெளியேற்றப்பட்டுவிட்டால் அதோகதிதான்" என்றெல்லாம் பயபீதியூட்டும் பிரச்சாரத்தை வெறியோடு நடத்தி கிரேக்க மக்களை எச்சரித்தன. ஆனால், அவற்றையெல்லாம் துச்சமாக மதித்து, பட்டினி கிடந்து செத்தாலும் ஏகாதிபத்திய கட்டளைக்கு அடிபணிய மாட்டோம் என்று கடந்த ஜூலை 5-ம் தேதியன்று நடைபெற்ற கருத்துக் கணிப்புக்கான தேர்தலில் "டிராய்கா"வின் நிபந்தனைகளை ஏற்க மறுத்து ஏறத்தாழ 62 சதவீத மக்கள் வாக்களித்து உரத்த குரலில் முழங்கினர்.

இத்தேர்தல் முடிவுகளின் மூலம் "டிராய்கா" மும்மூர்த்திகளால் திணிக்கப்படும் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றும், நாட்டின் இறையாண்மையும் ஜனநாயகமும் பாதுகாக்கப்படும் என்றும் கிரேக்க மக்கள் பெரிதும் நம்பினார்கள். ஆனாலும் கிரேக்க மக்களின் ஜனநாயக முடிவையும், கிரேக்க அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட சலுகைகளுக்கான பரிந்துரைகளையும் நிதியாதிக்க கும்பல்கள் கடுகளவும் ஏற்க மறுத்தன. "டிராய்கா"வைப் பொருளாதாரப் பயங்கரவாதிகள் என்று சாடி, யூரோ பொது நாணயத்துக்குப் பதிலாக கிரேக்க நாடு சொந்த நாணயமுறையை உருவாக்க வேண்டுமெனக் கோரிவந்த கிரேக்க நிதியமைச்சர் கட்டாயமாக பதவியிலிருந்து விரட்டப்பட்டார். "கடன் கட்ட முடியவில்லை என்றால் நாட்டை அடமானம் வை" என்று கட்டளையிட்டு, கிரேக்கத்தின் இறையாண்மையையும், கிரேக்க மக்களின் அரசியல் உரிமைகளையும் காலனியாதிக்க முறையில் பச்சையாகவே நசுக்கி ஏகாதிபத்தியவாதிகள் அந்நாட்டை அடிமைப்படுத்தியுள்ளனர்.

"மதிப்புக் கூட்டு வரியை மேலும் உயர்த்த வேண்டும் அரசுத்துறை ஊழியர்களின் சம்பளத்தைக் குறைப்பதோடு, முதியோர்களின் ஓவூதியத்தையும் குறைக்க வேண்டும் விமான நிலையங்களும் துறைமுகங்களும் மின்துறையும் தனியாரிடம் தாரை வார்க்கப்பட வேண்டும் பொருளாதாரத்துறையில் ஐரோப்பிய ஒன்றியம் நியமிக்கும் குழுக்கள் மற்றும் ஐ.எம்.எப்.பின் அதிகாரத்தையும் கண்காணிப்பையும் நிறுவ வேண்டும் தொழிலாளர் சட்டங்களை மாற்றியமைக்க வேண்டும் ஐம்பது பில்லியன் யூரோ டாலர் அளவுக்கான அரசின் சொத்துக்களை பிணைத்தொகையாக ஐரோப்பிய ஏகபோக முதலாளிகளின் பொறுப்பில் ஒப்படைக்க வேண்டும் கடந்த 6 மாதங்களில் சிரிசா அரசு செயல்படுத்திய மக்கள் நலத் திட்டங்களை முற்றாக ரத்து செய்ய வேண்டும்" என்றெல்லாம் கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. அவற்றை அப்படியே ஏற்றுக் கொண்டு சிரிசா அரசாங்கம் சரணாகதி அடைந்துள்ளது. கிரேக்க மக்களுக்கு இது பேரழிவு மட்டுமின்றி பெருத்த அவமானமுமாகும்.

-பாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

facebook

# மிரட்ட வரும் குட்டிப் பேய்க் கதை!! பயம் எப்பொழுது வரும்...?

ஓர் ஊரில் ஒரு குடியானவன் தன் மனைவி மகனுடன் மிகவும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தான். அவனுக்குத் தன் மனைவியின் மேல் கொள்ளைப் பிரியம். அவளை அதிகமாக நேசித்தான்.இப்படி சந்தோஷமாக இருக்கும் பொழுது அவன மனைவியை ஒரு பாம்பு கடிக்க அவள் இறந்துவிட்டாள்.

இந்த நிகழ்ச்சியை அந்த மனிதனால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. அளவிற்கு அதிகமாக உருண்டு பிரண்டு அழுதான். ஊர் மக்கள், தன் மனைவியைச் சுடுகாட்டிற்கு கொண்டு சென்று எரிக்க வேண்டும் என்று சொன்னதும் அதை ஏற்றுக்கொள்ள முடியாமல் மேலும் அழுதான்.

அவனைப் பார்க்கவே பாவமாக இருந்தது.ஆனால் வேறு வழியில்லாமல் அவனைச் சமாதானப்படுத்திச் சுடுகாட்டிற்கு அழைத்துச் சென்று அந்தப் பிணத்தை எரித்தார்கள். அவனால் தாழ முடியாமல் அங்கேயே உருண்டு பிரண்டும் கத்தி அழுதான். சரி இவன் அழுது அழுது தன்னைத் தானே சமாதானமாக்கிக் கொள்ளட்டும் என்று அவனை அங்கேயே விட்டுவிட்டு ஊர் மக்கள் சென்று விட்டார்கள்.

மனிதன் தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டால்தான் முழு ஆறுதல் அடைந்த திருப்தி பெறுவான்.அவனும் அன்று இரவெல்லாம் அந்தச் சுடுகாட்டில் கத்தி அழுது கொண்டிருந்தான். அவன் அழுது கொண்டிருந்த இடத்தில் ஒரு மரம் இருந்தது. அதில் ஓர் அம்மா பேயும் ஒரு குட்டிப் பேயும் இருந்தது. இந்த மனிதன் கத்தி அழுதுகொண்டே இருந்ததால் அந்தக் குட்டிப் பேய்க்கு தூக்கம் வரவில்லை.

அதனால் அது கோபமாகத் தன் தாயிடம் "அம்மா... அந்த ஆள் அழுவதால் எனக்குத் தூக்கம் வரவில்லை. நீ போய் அவனை பயமுறுத்தி துரத்திவிட்டு வா...." என்று சொன்னது.

அதற்கு அம்மா பேய்.... "வேண்டாம். அந்த மனிதன் இப்பொழுது அதிக கவலையில் இருக்கிறான். இந்த நேரத்தில் அவன் கவலை மட்டும் தான் அவனுக்குப் பெரியதாகத் தெரியும். இந்த நேரத்தில் நாம் போய் பயமுறுத்தினாலும் அவன் பயப்படமாட்டான்" என்றது.

இந்தக் கூற்றை குட்டிப்பேய் ஏற்கவில்லை. "எவ்வளவு பெரிய மனிதனானாலும் நிச்சயம் ஒரு பேய்க்கு பயந்து தான் போவான். நான் போய் அவனைத் துரத்துகிறேன் " என்று சொல்லிவிட்டு அவன் எதிரில் வந்து நின்று அவனைப் பயமுறுத்தியது. பலவித பயங்கர சத்தங்களைக் கொடுத்தது. அங்கிருந்த மண் மற்றும் மர இலைகளை அவன் மேல் விழுமாறு செய்தது. மரத்தைப் பயங்கரமாக உலுக்கி அவனைப் பயமுறுத்தப் பார்த்தது.



உம்ம்ம்... ஒன்றுக்கும் அவன் பயப்படவில்லை. அவன் தன் கவலையை நினைத்தே அழுது கொண்டிருந்தான். குட்டி பேய்க்கே சலிப்பு வந்து அவனை விட்டுவிட்டு திரும்பி வந்து பேசாமல் இருந்து விட்டது.இப்பொழுது கொஞ்ச காலம் ஓடி விட்டது. இந்தக் குடியானவன் தன் ஊர் மக்கள் சொன்னார்கள் என்று தன் மகனைக் காரணம் காட்டி இன்னொரு பெண்ணை மணந்து கொண்டு புதுப் பெண்ணுடன் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்தான்.

ஒரு நாள் வியாபாரத்திற்காக அந்தச் சுடுகாடு தாண்டிப் போக வேண்டியிருந்ததால் அப்பக்கமாகப் போய் கொண்டு இருந்தான். அவனை அந்தக் குட்டி பேய் பார்த்துவிட்டு தன் அம்மாவிடம்... "தன் வாழ்நாளிலேயே தான் பார்த்தத் தைரியசாலி இவன் தான்" என்றது.

அதற்கு அம்மா பேய்... "அவன் தைரியசாலி கிடையாது. வேண்டுமானால் இப்பொழுது அவன் எதிரில் நீ போய் சும்மா நின்று பார்" என்றது.குட்டிப்பேயும் உடனே அந்தக் குடியானவன் முன் சும்மா வந்து நின்று சிரித்தது. அந்தக் குட்டிப்பேயைப் பார்த்தது தான் தாமதம். அந்தக் குடியானவன் பயந்து வாய் உலறி நடுங்கிப் போய் தலைதெறிக்க ஓடி போனான்.

குட்டிப் பேய் அம்மாவிடம் வந்து... "அன்றைக்கு தான் முழுப் பலங்கொண்டு பயமுறுத்தியும் பயப்படாதவன் இன்று நான் சாதாரணமாக எதிரில் போய் நின்றதும் பயந்து ஓடியது ஏன்..?" என்று கேட்டது.

இதற்கு அம்மா பேய், "மனிதன் சந்தோஷமாக இருக்கும் பொழுது தனக்கு ஏதாவது துன்பம் வந்து விடுமோ என்ற பயத்திலேயே வாழ்கிறான். அந்த நேரத்தில் ஒரு சிறிய பயத்தைக் கொடுத்தாலும் அவன் அதிகமாக பயந்து விடுகிறான். இதே கவலையான நேரத்தில் அந்தக் கவலையை விட தனக்கு வேறு துன்பம் இல்லை என்று அரட்டுகிறான்.

அதனால் மனிதன் அதிக சந்தோஷமாக இருக்கும் பொழுது தான் அவனை மிகச் சாதாரணமாக பயங்கொள்ள வைத்துவிட முடியும்" என்றதாம். (உண்மை தானா...?)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 479

Search for people, places and things Nagendram Home

டனித்தா டனி




அம்பி டைகர்





பத்மராஜன் ராஜன்



வழியில் தெரியாமல் தவறவிட்ட இரண்டு வெங்காயத்தை உரியவரிடம் ஒப்படைத்த இளைஞனை அனைவரும் வெகுவாக பாராட்டி

**டோ நீங்க எல்லாம் எங்க இருந்துடா கிளம்பிவாறீங்கா**

நிருசன் தல




கிரேசி கிருஷ்ணா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக விசாரணைக்கு நாம் உடன்படக்கூடாது!

மைத்திரி - ரணில் தலைமையிலான புதிய அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

**ஆளும் கட்சியில் அமைச்சராக இருந்தவர் பிரதான எதிர்க்கட்சியின் தலைமையில் உருவான கூட்டணியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டு ஜனாதிபதியானார். இது எவ்வாறு சாத்தியம் ஆனதோ அதேபோன்றுதான் எதிர்க்கட்சி தலைவர் தெரிவும் சாத்தியம் ஆகியுள்ளது.**

இலங்கை அரசியல் வரலாற்றில் 2015 ஆம் ஆண்டு பெரும் திருப்புமுனை ஆண்டு எனக் கூறுவதில் தவறிருக்க முடியாது. ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் என்று இந்த ஆண்டில் நாட்டில் பாரிய அரசியல் மாற்றம் ஏற்பட்டுள்ளது. தமிழரைப் பொறுத்தவரை 32 ஆண்டுகளுக்கு பின்னர் எதிர்க்கட்சித் தலைவராக தமிழர் ஒருவர் தெரிவாகும் நிலை உருவாகியுள்ளது.

30 ஆண்டுகள் நீடித்த இனவிடுதலைப் போராட்டத்தில் சொல்லொணாத் துன்ப துயரங்களை அனுபவித்த தமிழினத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியால் என்ன பலன் கிடைக்கப் போகின்றது என்றால் அதற்கு பதில் தருவார் யாராகவும் இருக்க முடியாது.

தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் பட்ட துன்பங்களையும் தமிழினத்திற்கு எதிராக இலங்கை அரசு ( மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு) அரங்கேற்றிய அராஜகங்களுக்கு சர்வதேச பக்கச்சார்பற்ற நீதிவிசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற வலியுறுத்தலையாவது முன்வைப்பாரா? சம்பந்தன். அதற்கு ஆட்சியாளர்களுடன் ஏற்படுத்திக்கொண்ட உறவு இடங்கொடுக்குமா? என்பதை சிந்தித்து செயலாற்ற வேண்டிய நிலைக்கு தமிழர் தள்ளப்பட்டுள்ளனர்.

இறுதிப்போரின் பேர்து பல்லாயிரக்கணக்கான தமிழ மக்கள் கொத்துக்குண்டுகளை வீசி கொத்துக் கொத்தாக கொன்றொழிக்கப்பட்டதை மகிந்த ஆட்சியில் இருந்த போது ஏற்றுக்கொண்ட சர்வதேசம் தற்போது தனது நிலைப்பாட்டை மாற்றத் தொடங்கிவிட்டது.

அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளும் ஆளுக்கொரு மாதிரி செயற்படும் என்ற நிதர்சனம் வெளிப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதியுடன் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதாக இலங்கை அரசு அறிவித்த போதும் தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கையில் போராட்டம் ஒன்றே மிஞ்சியுள்ளது.

**இராணுவம் கையகப்படுத்தி வைத்திருக்கும் தமிழ் மக்களுக்கு சொந்தமான பூர்வீக நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும். இடம்பெயர்ந்த நிலையில் நலன்புரி நிலையங்களிலும் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் அகதிவாழ்க்கை வாழ்ந்து வரும் மக்கள் மீள்குடியேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்னிலைப்படுத்தி** தமிழர் தாயகமான வடக்கு- கிழக்கு மாகாணங்களில் அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள், பொதுமக்கள் போராட்டங்களை பலவடிவங்களில் முன்னெடுத்திருந்தனர். இருப்பினும் இப்போராட்டங்களுக்கு முழுமையான பலன் கிடைக்கவில்லை.

**நிலமீட்புப் போராட்டமும் நில ஆக்கிரமிப்பும் தமிழர் தாயகத்தில் தொடர்கிறது**

போரின் இறுதிக்கட்டத்தில் இராணுவத்தினரிடம் உறவினர்களால் ஒப்படைக்கப்பட்டு காணாமற் போகச் செய்யப்பட்டவர்களை மீட்டுத் தரக்கோரி காணாமற்போனவர்களின் உறவினர்கள், அவர்களின் உரிமைக்காகப் போராடும் அமைப்புக்கள், பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் பல போராட்டங்களை முன்னெடுத்திருந்தன.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளராகயிருந்த நவநீதம் பிள்ளை, யாழ்ப்பாணம் உட்பட வடபகுதிக்கு விஜயம் மேற்கொண்ட போதும் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் சனல் - 4 சர்வதேச ஊடகவியலாளர்கள் சகிதம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த போதும் காணாமற்போனவர்கள் போராட்டங்களை முன்னெடுத்து தமது பிரச்சினைகளை உலகறியச் செய்தனர்.

**காணாமற்போனவர்கள் குறித்து புதிய அரசும் எவ்வித தகவல்களை வெளியிடவுமில்லை, அவர்களின் உறவினர்களின் போராட்டங்கள் முற்றுப்பெறவுமில்லை.**

பயங்கரவாதச் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் ஆயிரக்கணக்கானோர் தமது இளமைக்காலத்தை சிறைகளில் கழித்துவரும் துர்ப்பாக்கிய நிலையைப் போக்க அவர்களின் விடுதலையை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டங்கள் நாடளாவிய ரீதியில் பல சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டன.



சிறைச்சாலையில் மர்ம மரணங்களை எதிர்கொண்ட தமிழ் அரசியல் கைதிகளின் உயிரிழப்புக்கு நீதிகோரி முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களும், இனி ஒரு தமிழ் அரசியல் கைதி மர்ம மரணத்திற்கு ஆளாகக்கூடாது என்ற வலியுறுத்தல்களும் கோசங்களாக போராட்டங்களின் போது வானைப்பிளந்தன.

**தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்பது சாத்தியப்படாத ஒன்று. அவர்கள் சிறைகளில் தமது வாழ்நாளைக் கழிக்கவே பிறந்தவர்கள். அவர்களுக்கு விடுதலை, சுதந்திரம் என்பது இல்லை என்று உறுதிப்படுத்தும் வகையில் புதிய அரசு மௌனம் காத்துவருகின்றது.**

இவ்வாறு தமிழர் தாயகத்தில் போராட்டங்கள் முற்றுப்பெறாது தொடர்ந்த வண்ணமேயுள்ளன. மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு அச்சுறுத்தல் விடும் வகையில் இராணுவ நடவடிக்கைகளும், பொருளாதார ரீதியான சுரண்டல்களும் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

போரிலே காவுகொள்ளப்பட்ட உறவுகளை நினைத்து ஒரு சொட்டு கண்ணீர்விடக்கூட சுதந்திரமற்ற, சபிக்கப்பட்ட இனமாகவே தமிழினம் இலங்கையில் வாழ்ந்து வருகின்றது.

தமிழினம் தன்விடியலை எதிர்பார்த்து அகிம்சை வழியிலும் ஆயுதம் ஏந்தியும் போராட்டங்களை முன்னெடுத்தபோது உலக நாடுகள் உரிமையைப் பெற்றுக்கொடுக்க முனைப்பு காட்டவில்லை. மாறாக ஒன்றாக சேர்ந்து இனவிடுதலைப் போராட்டத்தை தீவிரவாதம் என்று முத்திரை குத்தி இல்லாதொழித்தது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போராட்டம் தமிழினத்திற்கு எதிரான போராட்டமாக மாற்றம் பெற்று ,ன அழிப்பு, இனப்படுகொலையாகி உலகையே உலுக்கியது.

தமிழினம் எதிர்கொண்ட பேரவலத்தை தடுக்க எதையும் செய்யவில்லை என்ற குற்ற உணர்வு தமிழ் அரசியல்வாதிகளுக்கு ஏற்படுவதையும் அவர்களால் தடுக்க முடியாது. அந்தக் குற்றஉணர்விலிருந்து விடுபட இனியாவது ஆக்கபூர்வமான நடிவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

சர்வதேச விசாரணை ஒன்றே தமிழரின் எதிர்பார்ப்பு என்பதை வலியுறுத்தி வடக்கு மாகாண சபை நிறைவேற்றியுள்ள அண்மைய பிரேரணையில் வலியுறுத்தப்பட்டதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றில் முக்கிய விடயமாக முன்வைக்க வேண்டும்.

சர்வதேச விசாரணை கோருவதை நாட்டைப் பிரிக்கும் செயலாக காட்ட மகிந்த தரப்பு ஆதரவாளர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, தினேஷ் குணவர்த்தன போன்றவர்கள் முயற்சிக்கலாம். ஆனால் இன விடுதலைப போராட்டத்தை இல்லாதொழித்ததோடு தமிழினப் படுகொலையை அரங்கேற்றியவர்கள் தப்பிக்கக்கூடிய உள்ளக விசாரணைக்கு உடன்படக்கூடாது.

போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து இலங்கை அரசு நடத்த உள்ளதாக உறுதியளித்துள்ள உள்ளக விசாரணைக்கு உடன்பட்டால் அது தமிழினத்திற்கு செய்யும் துரோகமாகவே கருதப்படும் என்பதை தமிழர் தரப்பு புரிந்துகொள்ளுதல் அவசியம்.

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் வடக்கு மாகாண சபை சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளதைப் போன்று நாடாளுமன்றில் சம்பந்தன் தலைமையிலான தமிழ் பிரதிநிதிகளின் குரலும் ஓங்கியொலிக்க வேண்டும்.

சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற வலியுறுத்தலை முன்னிலைப்படுத்தும் அதேவேளை உள்ளக விசாரணையை முற்றுமுழுதாக நாம் நிராகரிக்கின்றோம் என்பதை நாடாளுமன்றில் தமிழ் பிரதிநிதிகள் வெளிப்படுத்த வேண்டும். இதுவே அழிக்கப்பட்ட தமிழினத்தில் எஞ்சியுள்ளவர்களின் மன்றாட்டம்.

**காண்டீபன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

ஆலடிப்பிள்ளையார் கோவிலில் இன்று விசேட திருவிழா இல்லாததால் மாலைப்பொழுதில் பண்டிதர் பரமலிங்கத்தின் தலைமையில் ஆலடி மாநாடு நேரகாலத்தோடு கூடியது.

**பண்டிதர்:** ஆலடி மாநாட்டிற்கு முன்னதாக இரண்டு நிமிடங்கள் இறை வணக்கம் செய்வம்.

(பண்டிதர் கூறியதும் மாநாட்டில் இருந்தவர்கள் எழுந்து நின்று மௌனப் பிரார்த்தனையை செய்து முடித்தனர்)

**வாத்தியார்:** பண்டிதர் இறைவழிபாடு என்பது மிகவும் முக்கியம். இறைவழிபாட்டோட பெரியவர்களை வணங்குகின்ற பழக்கத்தையும் எங்கட பிள்ளைகளிட்ட நாங்கள் ஏற்படுத்த வேணும்.


தென்பகுதியில இருக்கிற சிங்களப் பிள்ளையள் தங்கள் பெற்றோர்களை தினமும் காலில விழுந்து கும்பிடுகினம். அதுமட்டுமல்ல எங்க போனாலும் அங்க இருக்கிற பெரியவர்களை வணங்குவதில அவர்கள் ஒருபோதும் பின்னிற்பதில்லை.

பணியுமாம் பெருமை என்பது போல சிங்களப் பிள்ளையளிட்ட இருக்கிற உயர்ந்த பண்பாட்டை நாங்களும் எங்கட பிள்ளையளுக்குக் கற்றுக்கொடுக்க வேணும்.

**கங்காணி:** ஓமோம் எங்களிட்ட இருக்கிற உயர்ந்த பண்பாட்டை சிங்களப் பிள்ளைகளும் சிங்கள மக்களிட்ட இருக்கிற உயர்ந்த பண்பை எங்கட பிள்ளையளும் கற்றுக்கொள்வதால உயர்ந்த பண்பாட்டு விழுமியம் இந்த நாட்டில் உருவாகும்.

அதேநேரம் இரு இனங்களிலும் மோசமான பழக்க வ்ழக்கங்களும் இருக்கத்தான் செய்யுது. அந்தப் பழக்கவழக்கங்களில இருந்து விடுபடுவதும் கட்டாயம்.

**விதானையார்:** கங்காணியார் சொல்லுறதிலும் நியாயம் இருக்கு. முன்பெல்லாம் பெட்டாவில் தெருவோரங்களில வைச்சு பெல்ட் போன்ற பொருட்களை சிங்களச் சனங்கள் விற்பனை செய்வினம். எங்கட தமிழ்ச் சனங்கள் அந்தப் பக்கத்தால போனால் ஒரு பெல்ட் இருபத்தைந்து ரூபா எண்டு சொல்லி அவர்களுக்கு பெல்ட்டை விற்பனை செய்து போட்டு பெலிட்டில துளை அடிக்கிறதுக்கு ஒரு துளைக்கு இருபத்தைந்து ரூபாய் என்று சொல்லி ஆறு துளை அடித்துப் போடுவினம். பிறகென்ன பெல்ட் 25 ரூபா. ஒரு துளை 25 ரூபா படி ஆறு துளைக்கும் 150 ரூபா. மொத்தம் 175 ரூபா கொடுத்தாகவேணும். இல்லையெண்டால் கத்தியைக்



## மோட்டார் சைக்கிளை திருத்தப்போய் அவிஞ்சு போன மூப்பர் கதை

கழுத்துக்குக் கொண்டு வருவினம். எண்டாலும் இப்ப அந்தக் கொடுமைத்தனம் நடப்பதில்லை. அந்தளவுக்குச் சிங்களச் சனமும் திருந்திற்று. அரசாங்கமும் விழிப்படைந்திற்று. இதால பெட்டா வியாபாரம் இப்ப எவ்வளவோ பெட்டர் என்று சொல்லலாம்.

**மூப்பர்:** பெட்டா திருந்தினாலும் அங்க நடந்த வேலையை இப்ப எங்கட ஆட்கள் செய்யத் தொடங்கிற்றினம்.

**பண்டிதர்:** ஏன்? மூப்பருக்கு என்ன நடந்தது.

**மூப்பர்:** அதை ஏன் பண்டிதர் ஐயா கேட்கிறியள். யாழ்ப்பாணத்தில உள்ள ஒரு மோட்டார் சைக்கிள் கொம்பனியில என்ர மோட்டார் சைக்கிளை மெக்கானிக்கல் சேர்விஸ் செய்யக் கொண்டு போனன். 3500 ரூபா வரும். எஞ்சின் ஒயில் தங்களோட என்று சொல்லிச்சினம். ரொம்ப சந்தோசம் எண்டுபோட்டு நானும் மோட்டார் சைக்கிளை அந்தக் கொம்பனியின்ர சேவிஸ் ஸ்ரேசனில விட்டிட்டு வந்தனான். மறுநாள் ஒரு தொலைபேசி அழைப்பு. மோட்டார் சைக்கிள் பற்றிக் கதைக்கக் கூப்பிட்டினம். நானும் போனன். அங்க இருக்கிற மெக்கானிக் சொன்னார் சில பாட்ஸ்களை மாற்ற வேணும் எண்டு. சரி எவ்வளவு காசு வரும் என்று கேட்டன். எல்லாப் பாட்ஸுக்கும் கணக்குப் போட்டு ஆகக் கூடியது 29 ஆயிரம் வரும் எண்டார்கள்.

கடவுளே 29 ஆயிரமோ! இந்த மோட்டார் சைக்கிள இப்படியே எவ்வளவு காசுக்கு விற்கலாம் எண்டு கேட்டன். 25 ஆயிரம் ரூபாவுக்கு விற்கலாம் என்று மெக்கானிக் சொன்னார்.

சரி 25 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளுக்கு 29 ஆயிரம் ரூபா செலவு.

பரவாயில்லை எண்டு நானும் ஓம் எண்டன். அவ்வளவுதான் மோட்டார் சைக்கிளை எடுக்கப்போன போது 40 ஆயிரத்து 900 ரூபா காசுக்கு கணக்கு முடிப்பு என்றபோது என் தலை சுற்றிச்சுது.

இன்னொரு மெக்கானிக் கிட்ட போய் தம்பி திருத்தின இந்த மோட்டார் சைக்கிளை என்ன விலைக்கு விற்கலாம் என்று கேட்க அவன் பெடியன் ஒரு 35 ஆயிரம் ரூபாவுக்கு விற்கலாம் எண்டான்.

25 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளுக்கு 40 ஆயிரத்து 900 ரூபா செலவு செய்து 35 ஆயிரம் பெறுமதிக்கு கொண்டு வந்தன்.

(இப்படி மூப்பர் சொல்ல மாநாட்டில் சிரிப்பு)

**விதானையார்:** மூப்பரும் அந்த நேரத்தில பெட்டா பெல்ட் வாங்கின மாதிரித்தான் மோட்டார் சைக்கிள் திருத்தப்போய் அவிஞ்சு போனார். என்ன செய்யிறது? நியாயமாக தொழில் செய்ய ஒருத்தருக்கும் விருப்பம் இல்லை. வந்தவனை முறிச்சுவிடுவம் என்பதுதான் அவர்களின்ர நோக்கம்.

**கங்காணி:** அது சரி வாத்தியார் நடந்து முடிந்த ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை எப்படி இருந்ததாம்.

**வாத்தியார்:** ஏதோ கடவுள் கண்திறந்த மாதிரி இந்த முறை பரீட்சை வினாத்தாள் சுகம் எண்டு சொல்லினம். ஆனால் ஐந்தாம் வகுப்புப் பிள்ளைகள் நெருப்பாற்றை நீந்தி வந்த மாதிரித்தான் அதுகளப் போட்டு வதை வதை எண்டு வதைத்து... கடவுளே! பிஞ்சுகளைக் கசக்கிப் போட்டம்.

**கங்காணி:** ஒரு புறத்தில பெற்றார் பிள்ளையள வதைக்கிறது. மறுபுறத்தில சில பிள்ளைகளை பாடசாலை நிர்வாகம் வதைக்கிறது. இப்பிடி பிஞ்சு உள்ளங்களை வக்கிரமடையச் செய்து விடுகிறம்.

**பண்டிதர்:** என்ன கங்காணியார் நீங்கள் சொல்லுறது விளங்கவில்லை. பாடசாலை நிர்வாகம் தரம் 5 பிள்ளைகள் சிலரை வதைக்கிறது எண்டமாதிரிச் சொல்லுறியள் என்ன சங்கதி?

**கங்காணி:** அதையேன் பண்டிதர் கேட்கிறியள். தரம் ஐந்தில படிக்கிற சில பிள்ளையள் பின்தங்கின நிலையில இருந்தால் அந்தப் பிள்ளையளைப் பரீட்சை எடுக்காமல் நிற்பாட்டுகிற கொடுஞ்செயல் நடந்திருக்குது.

**மூப்பர்:** என்ர ஆசீர்வாதப்பரே இந்தச் செயலை ஏன் செய்யினம்.

**வாத்தியார்:** தங்கட பாடசாலையின்ர சித்திவீதத்தை உயர்த்திக் காட்டத்தான்.

**பண்டிதர்:** கடவுளே அற்ப சொற்ப புகழுக்காக அந்தப் பிள்ளைகளை பரீட்சை எழுதாமல் தடுக்கிறதோ. இதை நான் நம்பமாட்டன்.

**கங்காணி:** பண்டிதர் ஐயா இது உண்மையாக நடந்த சம்பவம். ஒரு பிள்ளையை பரீட்சையில தோற்றாமல் செய்வதற்காக அந்தப் பிள்ளையின்ர தாயிட்ட அதிபர் கடிதம் வேண்டியிருக்கிறார்.

அந்த அப்பாவித்தாயும் என்ர பிள்ளையை பரீட்சை எழுத விடவேண்டாம் எண்டு கடிதம் எழுதி அதிபரிட்ட கொடுத்திருக்கிறார்.

ஒரு கோயிலில இருந்து அந்தத் தாய் அழுதிருக்கிறார். அங்க நிண்ட ஆசிரியர் ஒருவர் ஏனம்மா அழுகிறியள் எண்டு கேட்கத்தான் என்ர பிள்ளைய அந்த அதிபர் ஸ்கொலர்சிப் எழுதாமல் தடுத்துப்போட் டார் என்று சொல்லி வேதனைப்பட்டிருக்கிறா.

தன்ர பிள்ளையோட மூன்று பிள்ளையள் அந்தப் பாடசாலையில ஸ்கொலர்சிப் எழுதவிடாமல் தடுக்கப்பட்டிருக்கினமாம்.

**மூப்பர்:** என்ர பிதாவே! இவர்களை நீங்கள் தான் ஆசீர்வதிக்க வேண்டும். கடவுளே அந்தப் பிள்ளைகளுக்கு உன் கருணையைக் காட்டும். இப்படி மூப்பர் சொல்ல ஆலடிப்பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க மாநாட்டில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள் ...

பாடல்: மாலை சூடும் மணநாள்...
திரைப்படம்: நிச்சயதாம்பூலம்
பாடலாசிரியர்: கவியரசு கண்ணதாசன்
இசை: எம்.எஸ்.விஸ்வநாதன்,
டி.கே.இராமமூர்த்தி,
பாடியவர்: பி. சுசீலா



மாலை சூடும் மணநாள் இள
மங்கையின் வாழ்வில் திருநாள்
சுகம் மேவிடும் காதலின் எல்லை
வேறொரு திருநாள் இனி இல்லை
மாலை சூடும் மணநாள் இள
மங்கையின் வாழ்வில் திருநாள்
சுகம் மேவிடும் காதலின் எல்லை
வேறொரு திருநாள் இனி இல்லை
மாலை சூடும் மணநாள்

காதல் கார்த்திகைத் திருநாள்
மனம் கலந்தோர் மார்கழித் திருநாள்
காதல் கார்த்திகைத் திருநாள்
மனம் கலந்தோர் மார்கழித் திருநாள்
சேர்வது பங்குனித் திருநாள்
நாம் சிரிக்கும் நாளை திருநாள்

மாலை சூடும் மணநாள் இள
மங்கையின் வாழ்வில் திருநாள்
சுகம் மேவிடும் காதலின் எல்லை
வேறொரு திருநாள் இனி இல்லை
மாலை சூடும் மணநாள்

மங்கல குங்குமம் போதும் திரு
மலரும் மணமும் போதும்
மங்கல குங்குமம் போதும் திரு
மலரும் மணமும் போதும்
பொங்கிடும் புன்னகை போதும் மனம்
புதுமணத் திருநாள் காணும்

மாலை சூடும் மணநாள் இள
மங்கையின் வாழ்வில் திருநாள்
சுகம் மேவிடும் காதலின் எல்லை
வேறொரு திருநாள் இனி இல்லை
மாலை சூடும் மணநாள்

மாலை சூடும் மணநாள் குல
மங்கையின் வாழ்வில் திருநாள்
சுகம் மேவிடும் காதலின் எல்லை
வேறொரு திருநாள் இனி இல்லை
மாலை சூடும் மணநாள்

**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**
நியோஜிகன் - கிளிநொச்சி, அஸ்றா, சாறா, கஜர், றிஸ்மியா, மிஸ்கத், கனகமூர்த்தி, கிருஷாந்தன்- சிறுப்பிட்டி.

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

## ஈழத்து சினிமா

### வல்லூறு குறும்பட விமர்சனம்




சிறார்கள் மீது உடல்ரீதியாக மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல்களைப் பற்றி பேசும் குறும்படம் வல்லூறு.

அடர் காட்டுப்பிரதேசத்தில் வாழும் சிறிய கிராமம் ஒன்றில் கதைக்களம் நிகழ்கிறது. மிகப் பின்தங்கிய கிராமமாக அது இருக்கின்றது. சிறிய குடில்களில் போதிய வசதிகள் இன்றி மக்கள் துன்பங்கள் பழகிப் போன முகங்களுடன் இயல்பாக வாழ்கின்றார்கள். அதில் ஒரு தாயில்லாத குடும்பம் அறிமுகமாகின்றது. தந்தையோ முரட்டுக் குடிகாரர். தன்னை சுற்றியுள்ளவர்கள் தொடர்பான பிரஞ்சை இல்லாமல் தினமும் மது அருந்தி போதையிலே உழன்றுகொன்று இருக்கின்றவர். அவருக்கு இரண்டு பிள்ளைகள்.மூத்த பிள்ளை ஆண் பிள்ளை .இரண்டாவதாக பெண் பிள்ளை. ஆண் பிள்ளை பதின்ம வயதுகளில் இருக்கின்றார். பெண் பிள்ளை இன்னும் இளையவராக இருக்கின்றார்.

இவர்களுக்கு தினமும் உண்பதற்கு சிறிதளவும் உணவுகள் கிடைப்பதில்லை. துன்பமான பசிகள் விரட்டி விரட்டி வாட்டுகின்றது. மூக்கு முட்ட குடித்த தந்தை தனக்கு மட்டும் சோத்துப்பாசல் வேண்டி தான் மட்டும் உண்கின்றார். பிள்ளைகள் உணவினை ஏக்கத்தோடு பார்க்க அவர்களை விரட்டுகின்றார். மூத்தமகன் எப்போதும் காட்டுப்பகுதியில் கட்டபோலுடன் திரிகின்றார்.கோழிக்குஞ்சுகளைப் பிடிக்கும் வல்லூறுகளை அடிப்பதே அவனது தலையாத குறியாக இருக்கின்றது. பொறுப்பற்ற தந்தையின் விசனப்போக் குகள் பிள்ளைகள் இருவரையும் கடுமையாகப் பாதிக்கின்றது. உணவுகள் இன்றி அவதிகள் தொடர்கின்றது. அயல் வீட்டில் இருக்கும் தங்கையின் வயதை ஒட்டிய இன்னுமோர் பெண் பிள்ளை இவர்களோடு இருக்கமான நட்பில் தொடர்ந்தும் இருக்கின்றாள். பசியால் தினமும் வாடும் இவர்களைப்பார்த்து பரிதாபம் கொண்டு தன்னிடம் உள்ள மரவள்ளிக் கிழங்குகளை உண்ணக் கொடுக்கின்றாள். இவர்களின் நட்பு வலிகள் நிறைந்த வாழ்வில் ஒரேயொரு ஆறுதல் ஒளிக்கீற்றாக இருகின்றது.

தந்தையின் குடியை வெறுக்கும் மகன் அவரின் சாராயப் போத்தலை கட்டப்போலினால் அடித்து நொறுக்குகின்றார். இதனால் தந்தையின் கடுமையான கோபத்திற்கு ஆளாக நேர்கின்றது. தனது இடுப்புப் பட்டியால் மகன் கதறக்கதற கடுமையாகத் தாக்குகின்றார்.

இரக்கப்பட்டு உணவு கொடுக்கும் சிறுமியின் தாயார் சிறுமியை தடுக்கும்போதுகூட விடாப்பிடியாக தொடர்ந்தும் உணவு கொடுப்பது மட்டும் அல்லாது அவர்களோடு சுற்றித்திரிந்து காடு மேடுகளில் விளையாடுகின்றாள். மரத்துக்குக் கீழே நடனமாடுகின்றாள். இனிமையான நட்பு அவர்களுக்கு இடையே விரிந்து செல்கின்றது.

இப்படியே சென்று கொண்டிருக்க திடீரென்று கிராமத்தில் ஒருநாள் மக்கள் சலசலக்கின்றார்கள். என்னவென்று மற்றவர்கள் ஆராயத்தொடங்க காட்டில் ஒரு சிறுமியின் உடல் இருபதாகச் சொல்லப்படுகின்றது. அச்சிறுமி இவர்களுக்கு உணவு கொடுத்து நட்புப் பாராட்டிய சிறுமி. அச் சிறுமி கொலை செய்யப்பட்டிருக்கின்றாள். அவள் ஏன் கொலை செய்யப்பட்டாள்? அதற்கான காரணம் என்னவென்று மிச்சக்கதை உருக்கமாக நகர எத்தனிக்கின்றது.

படத்தின் மிகப்பெரிய பலம் எடுத்துக்கொண்ட கதையின் மையக்கருவும் அது நிகழ எடுத்துக்கொண்ட களமும் ஆகும். திரைக்கதையை படமாக்கிய விதத்தில் அநாவசியமான நீட்சிகள் தெரிகின்றது. எடிட்டிங் மிக சோம்பேறித்தனமாக இருக்கின்றது. தந்தை உணவுப் பார்சலை விரிக்கும் நேரம் மிக அதிகமாக இருக்கின்றது. அதே நேரத்தில் உள்ளே வந்து உணவுப் பார்சலை ஏக்கத்துடன் பார்க்கும் பிள்ளைகளின் ஏக்கங்கள் சரிவரப் பதிவாகவில்லை.

தான் கட்டப்போலினால் அடித்து வீழ்த்த நினைக்கும் வல்லூறு கடைசியாக யாராக ஆகியது என்ற அதிர்ச்சியுடன் படம் முடிவுக்கு வருகின்றது. கவனிக்க வேண்டிய குறும்படம்.

-அனோஜன் பாலகிருஷ்ணன்-

## ஈழத்துக் கவிதைகள்

### தீரா வஞ்சனை

வாழ்வில் சுமைகளை சுமந்தோம்
எங்கள வாழ்க்கையே போராட்டமாக மாறியது
அவலங்களை தாங்கியும்
குருவிகள் போல கூட்டமாக கூடு கட்டி
சுகமாக வாழ்ந்து வந்தோம்
உயிர்களை கையில் பிடித்தவண்ணம்
ஊரூராய் ஓலமிட்டோம்
ஒரு நாடு கூட எட்டிப்பார்க்கவில்லை.
சொந்தங்களை இழந்தோம்
உறவுகளை இழந்தோம்
இன்று அநாதையாக வீதியில் நிற்கின்றோம்

யாரும் செய்யாத துன்பத்தை
நாம் செய்தோம் இல்லை
தமிழன் என்ற அடை மொழியால்
யாவரும் வஞ்சிக்கப்பட்டோம்
வஞ்சியவன் புதை குழியில் படுத்துறங்க
விஞ்சியவன் எங்களை
எள்ளிநகையாடினான்
அழுதோம் புரண்டோம் மாண்டோம்
எங்கள் அவலக்குரல் யாருக்கும்
கேட்கவில்லை என்னதான் செய்தோம்
கோயிலுக்கு போனால் கோபுரங்கள்
சாய்ந்து விழும் வீதிக்கு போனால்
நடந்த தடம் கூட இல்லை.
எங்கள் விதிகளை யார் இடமும் சொல்லி
யாரும் கரிசனை காட்டியதில்லை.
கல்லாய் இருக்கும்தெய்வம் கூட
கண்ணை மூடிக்கொண்டு வாழ்கிறார்
தெய்வமே இப்படி என்றால்
எங்கள் கதிதான் என்ன நிலை

அன்புடன் ரூபன்

அம்மா - இறைவனின் உன்னத படைப்பு ....
அம்மா - இறைவனாக பார்க்கப்படும் பிறப்பு ....
அம்மா - ஒவ்வொரு இதயத்திலிருக்கும் சாமி .....
அம்மா - இன்ப துன்பத்தை தாங்கும் கடவுள் ....
அம்மா - எல்லா உயிரினங்களின் மூல கடவுள் ....!!!

தாயே உன்னை வார்த்தையால் .....
வரிகளால் அழைக்கும் போதும் .....
அம்மா என்று அழைத்த போதும் .....
உயிரில் அதிர்வு ஏற்படுகிறது ....
உயிரில் கலந்த உறவு தானே .....!!!

தான் எங்கிருந்து வந்தேன் ....
என்பதை எனக்கு எடுத்துரைக்கவே .....
என்னை ஆலயத்துக்கு அழைத்து ....
சென்றார் அம்மா என்பதை ......
மக்கு மண்டைக்கு புரியவில்லை ....!!!
தன் தாயைப்போல் எல்லா ....
தாயையும் நினைப்பவன் ஞானி .....
ஆனால் எந்த தாயையும் -நீங்கள் ....
அம்மா என்று அழைத்துபாருங்கள் ....
உங்களை தன் குழந்தையாகவே பார்க்கும் .....!!!
எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் ....
எந்த மனக்குழப்பமும் இல்லாமல் ...
எந்த வேறுபாடும் இல்லாமல் .....
அன்புவைக்கும் உயிர் வேண்டும் .....
தாயே அது உன்னால் மட்டுமே முடியும் ....!!!

கே. இனியவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆஃப்த ரெக்கார்டு!



ஒரு வழியாக உச்சி முதல் பாதம் வரை உள்ள அனைத்துத் தலைகளையும் பார்த்து தேர்தலுக்கான நங்கூரத்தை எறிந்து வருகிறார் தோரணையான நடிகர். இதில் சமீபத்தில் முன்னாள் தலைவரையும் சந்தித்து அரசியல் சூட்சமங்களையும் கேட்டு அறிந்துகொண்டு வந்துள்ளாராம்.

இப்போ ஆளுங்கட்சி தரப்பில் இவரது அடுத்தடுத்த அடிகளைக் கண்டு கொஞ்சம் ஆடிப் போய்த்தான் உள்ளனர். அரசியல்ல இதெல்லாம் சாதரணமப்பா!

நம்பர் ஒன் நயன் நடிகையை சமீபத்தில் இசை நடிகரின் படத்தில் நடிக்க கேட்க , வயதைக் காரணம் காட்டி படத்தை வேண்டாம் என நிராகரித்ததாகக் கூறப்பட்டு வந்தது. உண்மையை ஆராய்ந்ததில் இனி இரண்டாம் தர நடிகர்களை விடுத்து கொஞ்சம் பெரிய நடிகர்கள் படங்களை லபக்க வேண்டும் என்ற முடிவுதானாம்.

மேலும் சமீபத்தில் அந்த அண்ணன் நடிகருடன் நடித்து வெளியானஅந்த பேய்ப் படத்திற்குப் பிறகு முன்னணி நடிகர்கள் யார் படமும் கையில் இல்லை என்பது தான் இதற்கு காரணம் என்கிறது ஒரு தரப்பு. நேற்று வந்த நடிகைகள் எல்லாம் பெருந்தலைகள் படத்துல நடிக்கும் போது நாமளும் சும்மா இருக்கக்கூடாதுன்னு கொஞ்சம் யோசிக்க ஆரம்பிச்சுட்டாங்களாம். இப்பத்தான் புரிஞ்சிதா!

ஒரு பக்கம் அப்பா இயக்குநர் படத்தை முடித்துக்கொடுக்க சொல்லுங்க என புகார் கொடுத்து கண்ணைக் கசக்க, இன்னொரு பக்கம் விரல் நடிகரோ நாங்கள் புகாரே கொடுக்கவில்லை. அது புகார்னே சொல்ல முடியாது சும்மா சாட்டுக்கு ஒரு லெட்டர் எழுதுனோம்னு ஒரு பக்கம் வாயைத் திறக்க இப்போ அப்பாவின் மண்டை காய்கிறதாம். என்னதான் இருந்தாலும் பழைய நட்பாச்சே விட்டுக்கொடுப்பாரா நடிகர் என்கிறது கோலிவுட் குறும்பு வட்டாரம். பூவ பூவுன்னு சொல்லலாம், நீங்க சொன்ன மாதிரியும் சொல்லலாம்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கனவு நாயகி...



உலக பிரபலம் ஆன, கொஞ்ச காலத்தில் சர்ச்சைக்குள்ளான இறப்பைச் சந்தித்த, இளவரசி டயானாவின் நினைவு, ஆகஸ்ட் கடைசிநாள்.

உலகின் தவிர்க்க முடியாத கனவு நாயகி டயானாவின் இயற்பெயர் பிரான்செஸ் ஸ்பென்சர். இவர் ஜூலை 1, 1961ஆம் ஆண்டு பிறந்தார். வேல்ஸ் இளவரசர் சார்லஸின் முதலாவது மனைவி. இவர்களது பிள்ளைகள் இளவரசர்கள் வில்லியம், ஹென்றி (ஹேரி). இளவரசர் சார்லசுடன் டயானா திருமண ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட நாளில் இருந்து, டயானா பொது வாழ்வில் ஒரு முக்கிய புள்ளியாகக் கருதப் பட்டார்.

ஐக்கிய நாடுகள் மட்டுமல்லாமல் உலகளாவிய அளவில் இவர்களது திருமண வாழ்வு தொடக்கம் முதல் மணமுறிவு ஏற்படும் வரையில் ஊடகத் துறையில் அதிகம் பேசப்பட்டார். அது வரை இங்கிலாந்து மக்கள், பார்த்து வந்த அரச குடும்பத்து மனிதர்கள் வேறு. இறுக்கமான முகம். 'நீ சாமான்யன், நாங்கள் ராஜவம்சத்தினர்..!' என்கிற தோரணை. நிலப்பிரபுத்துவ மனோபாவம். தங்க வட்டத்துக்குள் ராஜ வாழ்க்கை. அந்தக் குடும்பத்துக்கு உள்ளே நுழையும்போதே, தான் வேறு ஜாதி என்று நிரூபித்துவிட்டவர் டயானா. பத்தொன்பது வயதில் சார்லஸைக கைப்பிடித்து பக்கிங்ஹாம் அரண்மனைக் குள் நுழைந்தார். வெகு சீக்கிரம், அடித் தட்டு மக்களின் இதயத்தில் இடம்பிடித்து விட்டார்.



உலகததின் பலபாகத்திலும் தொழு நோயாளிகள், புற்று நோயால். பாதிக்கப் பட்டவர்கள், எய்ட்ஸ் நோயாளிகள் அனைவருமே டயானாவுக்கு சிநேகித மானார்கள். எய்ட்ஸ் நோயாளிகளைத் தொட்டுப் பேசுவதால் எந்த பாதிப்பும் ஏற்படாது என்பதை உலகுக்கு முதன் முதலில் எடுத்துரைத்தவர் டயானாதான். கணவரின் மேல் டயானா, அளவுக்கு அதிகமான காதல் கொண்டிருந்ததாலோ என்னவோ, கமீலா என்ற திருமணமான

பெண்ணுடன் சார்லசுக்கு முன்பிருந்தே ஒரு உறவு இருந்து வருகிறது. அது இப்போதும் தொடர்கிறது என்று தெரிந்த போது, அவரால் அதைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

திருமணமான முதல் வருடத்திலேயே இதனால் இருவருக்கும் சிநேகம் குறைய தொடங்கியது. மனம் வெறுத்த டயானா, சிலமுறை தற்கொலை முயற்சியில்கூட ஈடுபட்டிருக்கிறார். எதை சாப்பிட்டாலும்

உடனே வாந்தி எடுத்துவிடுகிற (புலீமியா) நோய் கூட அவருக்கு வந்துவிட்டது. தன் சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்னைகளை மறக்க, பல சமூக நலத் திட்டங்களில் இன்னும் அதிகமாக ஈடுபட ஆரம்பித்திருந்தார் டயானா.

டயானா வாழ்ந்த காலத்தில் இங்கிலாந்து பத்திரிகைகளுக்கு அவர்தான் எப்போதும் முதல் பக்க கதாநாயகி. துரத்தித் துரத்திப் படமெடுத்தார்கள். துருவித் துருவிச் செய்தி சேகரித்தார்கள். டயானாவை இறுதிவரை தொடர்ந்தன, காதல்களும் கேமராக்களும் அவர் உயிரைக் குடித்தது. மக்களின் இளவரசியாக வாழ்ந்தவர் டயானா. சார்லஸ்- டயானா விரிசல் இவ்வளவு பகிரங்கமான பிறகு விவகாரத்து தான் ஒரே வழி என்று மகாராணியே வற்புறுத்த, விவாகரத்து நடந்தது.

டயானா இந்தியாவுக்குகூட வந்திருக்கிறார். உடல்நலம் குறைந்திருந்த அன்னை தெரசாவை சந்தித்தார் டயானா. தன் 79 விலை உயர்ந்த உடைகளை ஏலத்தில் விட்டு அதன் மூலம் கிடைத்த பெருந் தொகையை தர்மகாரியங்களுக்கு செல விட்டார். அரபு நாட்டைச் சேர்ந்த கோடீஸ் வரரான முகமது ஹல் என்பவரின் மகன் டோடியுடன், டயானாவுக்கு ஏற்பட்ட தனிப் பட்ட நெருக்கம் புதிய சர்ச்சைகளுக்கு இடம் கொடுத்தது. டோடியின் பழக்கம் ஏற்பட்ட பின்னர், எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சேவைகள், தர்ம அறக்கட்டளைகள் நிறுவுதல் என்று சற்று மாறத் துவங்கிய டயானா மக்கள் சேவை புரிதலேதான், தன் தலையாயக் கடமை என்றார்.

அன்பு, மக்களிடையே நிலவும் சகிப்புத் தன்மையில்லா போக்கு.. என்பன பற்றி பொதுப் படையாக பேசத் துவங்கினார். டோடி, டயானா இருவரும் பாய்மரக்கப் பலில் உற்சாகம் பொங்க பயணம் சென்றது செய்தியாளர்களுக்கு பெரும் சுவாரஸ் யத்தை கொடுத்தது. இருவரும் செல்லுமிட மெல்லாம் கேமராவும், கையுமாய் பத்திரிகை காரர்கள் அவர்களைத் துரத்தினார்கள். இந்தோனேஷியாவுக்கு சென்றிருந்தபோது அங்கிருந்த தொழுநோயாளிகளிடம் டயானா கைகுலுக்கியதும் பலரையும் வியக்க வைத்தது. டோடியும், டயானாவும் பிரான்ஸில், தனிமையில் இருக்க ஆசைப்பட, பத்திரிகைகாரர்களால் அதுமுடியாமல் போனது. பாரிஸில் 1997 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31ல் ரிட்ஸ் உணவகத்தில் மாலை உணவுக்குப் பின் காரில் டயானா, டோடி, ஒரு பாதுகாப்பாளர் மற்றும் ஓட்டுனர் போய்க் கொண்டிருந்தார்கள். விடாமல் அவர்களளது காரைத் துரத்தியது வேறு ஒரு வாகனம். அதில் பத்திரிகைப் புகைப்படக் காரர்கள். அவர்களிடமிருந்து தப்பியே ஆக வேண்டும் என்ற வேகத்தில் மணிக்கு 150 கிலோ மீட்டர் வேகத்தில் பறந்த, டயானாவின் கார் விபத்துக்குள்ளானது. இந்த விபத்துக்கும் ராஜகுடும்பத்துக்கும் தொடர்பிருப்பதாகவும் இன்றும் சர்ச்சைகள் உள்ளன.

டோடியும், கார் ஓட்டுனரும் அந்த இடத்திலேயே மரணமடைய, உயிருடன் இருந்த டயானாவை மட்டும் மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றனர். அழகான தேவதை போன்றே பார்த்துப் பழகிய டயானாவை, முகமும் எலும்புகளும் சிதைந்த நிலையில் பார்த்த மருத்துவர்கள் கூட அடக்க முடியாமல் கதறி அழுதனர். எவ்வளவு முயன்றும் அந்த புன்னகை இளவரசியை காப்பாற்ற முடியவில்லை. அவர் இறந்த செய்தி கேள்விப் பட்ட உலகமே வேதனையில் உருகி கண்ணீர விட்டது.

2.5 பில்லியன் மக்கள் தொலைக்காட்சி மூலம் இந்நிகழ்வைப் பார்த்தனர். வேல்ஸ்



இளவரசி டயானாவின் இறுதி ஊர்வலம் நடைபெற்றது. உலகின் கண்ணி வெடிகளை அகற்ற தன் ராஜ அந்தஸ்தை ஆயுதமாகப பயன்படுத்திய ராஜகுமாரியின் மறைவு, மனதில் நீங்கா சுவடானது. டயானா ரசிகர்களின் கோபக்குமுறல்கள் அந்த புகைப் படக் குழுவினரை நோக்கி பாய்ந்தன.

ஃபிரான்ஸின் தடவியல்துறையினருடன், உளவுத்துறையினரும் களத்தில் இறங்கி விபத்து குறித்து நடத்திய புலன் விசாரணையில், ஓட்டுனர் அதிகம் மது அருந்தியிருந்ததாகவும் அதனாலேயே கார் ஓட்டுனரின் கட்டுப்பாட்டிலிருந்து விலகி விபத்துக்குள்ளானதாகவும் கூறி விஷயத்தை முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

டயானாவின் மரணத்திற்குப் பின்னர் வில்லியமுக்கு அவசர அவசரமாக முடிசூட்டும வேலையும் படுஜோராக நடந்தது. அதன் பின் பல்லாயிரக்கணக்கான மலர்கள் அந்த இனிமையான இள்வரசி டயானாவின் கல்லறைக்கு இன்னமும் வந்து குவிந்து கொண்டிருப்பது அவர் மீது மக்கள் வைத்திருக்கும் அன்புக்கு எடுத்துக் காட்டாக இருக்கிறது.

நீண்ட காலமாக இழுத்தடிக்கப்பட்ட இவரது மரண விசாரணைகளின் இறுதி முடிவுகள் பதினொரு ஆண்டுகளுக்குப் பின்னர் ஏப்ரல் 2008 ல் வெளியிடப்பட்டது.

காலங்கள் கடந்தாலும் நம் ஊரிலும் "இவ பெரிய இளவரசி டயானா!" என்கிற வார்த்தை மட்டும் இப்போதும் காதுகளில் ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது.

உலகம் முழுக்க, அவர் நினைவு நாளில், அவரது கல்லறையில் பூங்கொத்து வைத்து, உருக்கமாகக் அஞ்சலி செலுத்தி வருகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணையே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்கும்!




போரின்போதும், ஆயுதமௌனிப்பின் பின்னரும், காணாமல் ஆக்கப்படுதல் கலாச்சாரம் தொடர்வதற் கான ஆதாரங்கள் வெளிவந்து கொண்டே இருக்கின்றன. மாற்றத்தின் பின்னும் நாங்கள் மாறும் என்று நினைத்தவைகள் மாறவில்லை. நீதிக்கானபயணத்தில் அத்தியாயங்கள் நீண்டு கொண்டே போகின்றன. காணாமல் ஆக்கப்படுதல் இலங்கை அரசியல் வரலாற்றில் கிளர்ச்சி எதிர்ப்பின் ஆயுதமாக மிகநேர்த்தியாக திட்டமிடப்பட்டு அரங்கேற்றப்பட்டது. வயதுபால் வித்தியாசமின்றி தமிழன் அல்லது தமிழிச்சி என்ற ஒரே ஒருகாரணத்திற்காக கடத்தப்பட்டவர்களின் கதிதெரியாது, இன்றும் ஐ.நாவும், மற்றநாடுகளும், எங்களின் பிள்ளைகளை எங்களுக்குத் தருவார்கள் என்று நம்பி கழுதை தேய்ந்து கட்டெறும்பாகியது தான் எங்களுடைய கதை. சர்வதேச விசாரணை என்று தொடங்கி இன்று எல்லாரும் திட்டமிட்டு உள்ளக பொறிமுறையில் வந்து- மீண்டும் வேதாளம் முருங்கைமரத்தில்.

காணாமல் ஆக்கப்படுதல் இலங்கை அரசியல் வரலாற்றில் வெவ்வேறு தளங்களில் வெவ்வேறு நோக்கங்களை அடைவதற்காக அரங்கேற்றப்பட்டது. ஆட்சிக் கதிரைகளை கைப்பற்றிய எந்த அரசாங்கங்களும், இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சார்பில் எந்தவொரு அரசாங்கமும், இன்றுவரை இதய சுத்தியுடன் செயற்பட்டதாக வரலாறு இல்லை. எல்லா அரசாங்கங்களுமே குற்றவாளிகளை பாதுகாப்பதில் தீவிரத் தன்மையைக் கொண்டிருந்தன. ஆரம்பத்தில் இருந்தே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கான ஒரேதீர்வாக சர்வதேச விசாரணை அவசியமென வலியுறுத்திக் கூறியுள்ளோம்.

இன்று ஆட்சிபீடமேறியிருக்கும் சிறிசேன அரசாங்கத்திடமும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கான அரசியல் விருப்பு இருப்பதாக தெரியவில்லை. அதற்கான உதாரணங்களாக போர்க் குற்றவாளிகளான ஜெனரல் சரத்பொன்சேகா பீல்ட் மார்சல் தரத்திற்கு உயர்தத்ப்பட்டார். மேயர் ஜெனரல் ஜெகத் டயசு கலாட்படையின் பணியாளர்களுக்கு பிரதம அதிதியாக நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு ஏற்கனவே ஐரோப்பிய மனித உரிமைநீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவர்களுக்குரிய நியமனங்கள் இலங்கையில் நிலவிவரும் தண்டனைகளில் இருந்து குற்றவாளிகள் தப்புவதற்கான கலாச்சாரம் செத்துவிடவில்லை என்பதற்கான அறிகுறியாகவே தென்படுகின்றது. இலங்யையின் குற்றவாளிகள் குறிப்பாக அரச கட்டமைப்பு சார்ந்த குற்றவாளிகள் தண்டணையில் இருந்து தப்புவதானது நிறுவன மயப்படுத்தப்பட்டு வந்துள்ளது. மேலே குறிப்பிட்ட கலாச்சாரச் செறிவுத் தன்மை உள்ளக பொறிமுறையின் மூலம் இழைக்கப்பட்ட வன்கொடுமைகளுக்கு நீதிகிடைக்காதது என்பதன் பிரதான காரணியாக விளங்குகின்றது.

இதற்கு பின்னால் உள்ள இலங்கை அரச கட்டமைப்பிற்கு வலுவூட்டும் சிங்கள பௌத்த பேரினவாத கருத்தியல் ஒருபோதுமே சிங்கள நாட்டையும், மக்களையும், பௌத்தத்தையும், பாதுகாத்த சிங்கள பேரினவாத விடுதலையின் கதாநாயகர்களாக கொண்டாடப்படும் படைக் கட்டமைப்பையும், அது சார்ந்தவர்களையும், காட்டிக்கொடுத்து இனப்படுகொலை சார்ந்து குற்ற வழக்கு தொடர அனுமதிக்கப் போவதில்லை என்பது வெள்ளிடைமலை.

சிங்கள பேரினவாத அரசால் போர் வீரர்களாக முன்னிலைப் படுத்தப்பட்டவர்கள் ஒரே இரவில் துரோகிகளாக்கப்படுவார்கள். அல்லது குற்றவாளிகளாக்கப்படுவார்கள் என்பது சிறுபிள்ளை நிலாவை கையில் பிடித்து தரும்படி அழுவதற்கு ஒப்பாகும்.

ஆயுதமௌனிப்பின் பின்னர் எல்லாருடைய இனத்துவ அடையாளங்கள் களையப்பட்டு ஒருமித்த இலங்கை அல்லது இனவாததேசிய் அடையாளத்திற்குள் வலிந்து திணிக்கப்பட்டோம்.

இதன் மூலம் இதுவரைநடந்த போராட்டத்தின் உண்மைத் தன்மையும் ஏற்புடைமைத் தன்மையும் கேள்விக்கு உட்படுத்தப்பட்டு இனத்துவ அடையாளம் முன்னுரிமைப் படுத்தப்படுவது தேசத்துரோகமாக கட்டமைக்கப்பட்டது. இது ஆயுத மௌனிப்பின் பின் எழுந்த மிகமுக்கிய சொல்லாடல் ஆகும்.

பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பு மேலும் மேலும் வலுவிழப்பு செய்யப்பட்டு அழுவதற்கும் அனுமதி பெற்று அழவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறோம். பாதிக்க்பட்டவர்களுக்கான உரிமையும், மறுக்கப்பட்டிருக்கின்றது.

மேற்குறிப்பிட்ட காரணிகள் இலங்கையில் உள்ளகபொறிமுறை மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை பெறுவது என்பது சாத்தியமில்லை என்பதை கூறி நிற்கின்றது.

இவ்வரலாற்று திருப்பு முனையில் காணாமல் ஆக்கப்பட்டோர்களுக்கான நீதி வேண்டிய பயணத்தில் புதிய தந்திரோபாயங்களை வழிவகுத்து போராடடத்தை இன்னும் வீரியமாக்க வேண்டிய தேவை இன்று எழுந்துள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை வெறுமனே மனித உரிமை சார்ந்த பிரச்சினை அல்ல. இப்பிரச்சினை உதிரியானதாக மட்டும் நோக்கப்பட முடியாது. இனப்படுகொலை என்ற அரசியல் நிகழ்ச்சித் திட்டத்தில் இது ஒருபகுதி மட்டுமே. ஆனாலும், தமிழின இனப்படுகொலையில் இதன் வகிபாகம் காத்திரமானது. ஏனெனில், தமிழன் அல்லது தமிழிச்சி என்ற ஒரு இனத்துவ அடையாளத்தை தக்கவைத்ததனால் மிகத் திட்டமிடப்பட்டு, நோக்கம் தெளிவாக்கப்பட்டு அரசகட்டமைப்பின் உதவியோடு காணாமல் ஆக்கப்படுதல் அரங்கேற்றப்பட்டது.



குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி அல்லது கிடைத்த உத்தரவின் பேரில் நன்கு திட்டமிடப்பட்டு தமிழர்கள் என்ற ஒரேகாரணத்திற்காய் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். இது மானிடகுலத்திற்கு எதிரான குற்றம் மட்டுமல்ல, இனப்படுகொலையும் கூட.

காணாமல் ஆக்கப்படுதல் எனும் குற்றம் தமிழர்களைப் பொறுத்தவரையில் இனப்படுகொலை என்ற சிங்கள பௌத்த அரசின் பாரிய அரசியல் நிகழ்ச்சித் திட்டத்தில் ஒருபகுதி என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டிய வரலாற்றுத் தேவை எழுந்துள்ளது.

எங்களுடைய பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்பதை தெரிந்துகொள்வதற்கு எங்களுக்கு உரிமை இருக்கின்றது. மனித உரிமை சட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தலைவிதியை தெரிந்துகொள்வதற்கு இடமுண்டு. இது சட்டரீதியில் அணுகப்படவேண்டும். இதுவரைக்கும் உதிரிகளாக சட்டத்தை கையில் எடுத்த நாம் இனி கூட்டாக சர்வதேச சட்ட விதிகளுக்கு அமைவாக இப்பிரச்சினையை அணுகவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதற்காக ஆயன்ரீனாவில் உள்ள காணாமல் போனவர்களின் தாய்மாரால் சட்டரீதியாக இப்பிரச்சினையை அணுகுவதற்கு சட்டவாளர்கள் அடங்கிய குழுவொன்றை உருவாக்கி இப்பிரசசினை அணுகப்பட்டது. அதேபோல் தான் தமிழர் தரப்பிலும், இப்பிரச்சினை அணுகப்பட வேண்டும். அதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ளது.

நட்டஈடு (ரெப்பரேசன்) தொடர்பாக உள்ள அனைத்து கோவைகளும ஆராயப்பட்டு, எங்களுக்கான கோரிக்கைகள் தெளிவுபடுத்தப்பட வேண்டும். இதற்கு ஐ.நா., இன்ர அமெரிக் கன் கோட், ஐரோப்பிய நீதிமன்று Parliamentary Assembly of the council of Europe- இல் கூறப்பட்டவவைகளை அடிப்படையாக கொண்டு எங்களுடைய கோரிக்கைகளை முன்வைக்கலாம்.

அடுத்து அரசு, மரண அத்தாட்சி பத்திரம் தருவதை எதிர்த்து, காணாமல் ஆக்கப்பட்டதால் நபர் இல்லை என்ற பத்திரம் அமுல்படுத்தப்பட வேண்டும். இது எதிர்காலத்தில் *றெப்பரேசன்* தொடர்பான கோரிக்கைகளுக்கு மிகவும் உதவியாக உள்ளதோடு காணாமல் ஆக்கப்பட்டோர்களின் எண்ணிக்கை தொடர்பில் எந்தமாற்றத்தையும் கொணராமல் அரசின் பொறுப்புக் கூறலை மிக ஆணித்தரமாக வலியுறுத்தும்.

இறுதியாக காணாமல் போனோருக்கான காட்சியகம் அமைக்கப்பட்டு, அங்கு அவர்களுடைய புகைப்படத்துடனான முழு விபரங்களும் காட்சிப்படுத்தப்படும்போது, குறிப்பாக- போர்க்குற்றவாளிகள் அடங்கியபட்டியல்கள் வெளிதெரியப்படுத்தப்படும் போது, அரச கட்டமைப்பும் அழுத்தங்களுக்கு உள்ளாகின்ற தன்மை ஏற்படுத்தப்படுகின்றது. இதன்மூலம் உண்மைக்கான தேடலும், நீதிவேண்டிய விடுதலைக்கான பயணமும் விரைவு படுத்தப்படுகின்றது.

எங்களுக்கான சொல்லாடல் கலாச்சாரத்தை எங்களுக்காக இன்னொருவர் செய்யாமல், நாங்களே கட்டமைக்கின்ற சூழ்நிலை அவசியம் இதற்கு நாங்களே எங்கள் அனுபவங்களை ஆவணமாக்குகின்ற முயற்சி முடுக்கிவிடப்பட வேண்டும்.

எங்கள், உண்மைக்கான, நீதிக்கான போராட்டத்தை சுயலநலவாதிகளின் அரசியல் தந்திரத்துக்கு பலியாக்கி விடக்கூடாது.

*மன்னார்-அருட்பணி*
*எழில் றயன்.யே*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தியூசின் அதிர்ஷ்டம் எப்படி?



அதிர்ஷ்டம் துரதிர்ஷ்டம் என்ற இரண்டுமே எமது வாழ்வில் பின்னிப் பிணைந்த ஒன்றாகும்.

21ஆம் நூற்றாண்டில் காலடி வைத்துள்ள மனித சமூகம் இன்னும் அதிர்ஷ்டம் மீது நம்பிக்கை இழக்காதது நவீன உலகில் மாற்ற முடியாத ஓர் விடயமாக மாறியுள்ளது.

எமது அன்றாட வாழ்வில் ஆக்கிரமித்துள்ள அதிர்ஷ்டம் திறமை கொண்டு விளையாடப்படும் விளையாட்டிலும் பார்க்கப்படுவதே வருத்தத்திற்கு உரிய உண்மையாகும்.

உலகிலேயே காற்பந்துக்கு அடுத்தபடியாக அதிக ரசிகர்களை கொண்ட விளையாட்டாக கிரிக்கெட் பிரமாண்ட வளர்ச்சியைக் கண்டுள்ளது.

குறிப்பாக ஆசியாவில் அதிக ரசிகர்களை கொண்ட விளையாட்டு கிரிக்கெட் மட்டுமே.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் கிரிக்கெட்டே முதன்மை பெற்ற விளையாட்டாக விளங்குகின்றது.

தற்போது நவீனமாக மாறியுள்ள கிரிக்கெட் உலகில் திறமைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்ற போதிலும் அதிர்ஷ்டம் என்ற ஓர் அம்சம் இப்போதும் பார்க்கப்படுகின்றது என்று சொன்னால் அதனை நிச்சயம் யாராலும் மறுக்கவே முடியாது.

கடந்த வாரமே இலங்கை இந்திய அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் போட்டி நடந்து முடிந்தது. இதில் இந்திய அணி 22 வருடங்களுக்குப் பிறகு இலங்கை மண்ணில் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியுள்ளது.

அதிலும் இந்திய டெஸ்ட் அணியிலிருந்து டோனியின் ஓய்வுக்குப் பின் கோலி தலைமையிலான இந்திய அணிக்கு கிடைத்த முதல் வெற்றியாகும்.

இந்தியாவின் அதிர்ஷ்டக்கார தலைவராக விளங்கியவர் டோனி. கிரிக்கெட்டின் ஜாம்பவான் என அழைக்கப்படும் சச்சின், இந்தியாவின் தடுப்புச் சுவர் ராகுல்ராவிட், கங்குலி எனப் பல திறமை வாய்ந்த கிரிக்கெட் வீரர்கள் இந்திய அணியில் வலம் வந்தாலும் இந்தியாவின் அதிர்ஷ்டக்கார அணித்தலைவர் என்ற பெருமையை டோனி மட்டுமே தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டுள்ளார்.

டெஸ்ட் போட்டியிலிருந்து டோனியின் ஓய்வுக்குப்பின் தற்போது இந்தியாவின் தலைமை கோலியின் வசமாகியுள்ளது.

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரை கைப்பற்றியுள்ளதால் கோலியின் அதிர்ஷ்டம் நிச்சயம் நல்ல நிலையிலேயே உள்ளது என்றுதான் சொல்லவேண்டும்.

இது ஒரு புறம் இருக்க இலங்கை கிரிக்கெட் அணியின் மீது அதிர்ஷ்டக்காற்று என்பது ஒருமுறைதான் வீசியதாகத் தெரிகின்றது.

அதுவும் 2014 ஆம் ஆண்டு உலகக்கிண்ண இருபது-20 போட்டியின் போதுதான்.

இலங்கை அணியை தற்போது இளம் அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் வழி நடத்தி வருகின்றார்.

அவரது திறமைமீது ஐயம் கொள்ளத்தேவையில்லை. ஏனெனில் அவர் ஒரு சிறந்த கிரிக்கெட் வீரர் என்பதனை அவரது புள்ளிவிபரங்கள் சொல்லி நிற்கின்றன. ஆனால் அவரது அதிர்ஷ்டம் எவ்வளவு தூரம் இலங்கை அணிமீது செல்வாக்குச் செலுத்துகின்றது என்று பார்த்தால் இந்தியாவுக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியிலும் மத்தியூஸ் கடுமையாகப் போராடினாலும் இலங்கை அணி தோல்வியையே தழுவியது.

மத்தியூஸ் இதுவரைக்கும் டெஸ்ட் போட்டியில் 7 சதம் அடித்துள்ளார். அவர் சதம் அடித்த போட்டிகளில் 3 போட்டிகள் தோல்வியிலும் 3 போட்டி சமநிலையிலும் முடிவடைந்துள்ளன.

2014ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் மட்டும் இலங்கை அணி வெற்றி பெற்றிருந்தது. அப்போட்டியில் மத்தியூஸ் 160 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

இலங்கை அணியை நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார மஹேல ஜெயவர்த்தன என திறமைமிக்க இரு அணித்தலைவர்கள் வழிநடத்தினாலும் அதிர்ஷ்டக்கார அணித்தலைவர் என்ற பெயர்களை அவர்கள் எடுக்கத் தவறியுள்ளனர்.

50 ஓவர்கள் கொண்ட உலகக் கிண்ணத்திலும் சரி இருபது-20 ஓவர்கள் கொண்ட உலகக்கிண்ண போட்டியிலும் சரி இவர்கள் இருவரும் தமது திறமையான தலைமைத்துவம் மூலம் இலங்கை அணியை இறுதிப்போட்டிவரை முன்னோக்கி கொண்டு சென்றார்கள். ஆனால் துரதிர்ஷ்டம் கிண்ணம் வேறு அணி வசமாகியது.

இறுதியில்ராசியில்லாத இலங்கை அணித்தலைவர் என்ற பெயரே அவர்கள் வசமாகியது. அவுஸ்திரேலிய அணியைப் பொறுத்த மட்டில் அவ் அணியும் சரி அவ் அணியை வழிநடத்திய அணித்தலைவர்களும் அவர்களது அதிர்ஷ்ட மும் எப்போதும் உச்சத்திலேயே காணப்பட்டது என்று சொல்லலாம்.

1999 ஆம் ஆண்டு உலகக் கிண் ணத்தை பொறுத்தமட்டில் ஸ்ரிவோக் தலைமையிலான அவுஸ்தி ரேலிய அணி அரையிறுதியில தென்னாபிரிக்காவை ஒரு ஓட்டத்தால் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறி சம்பியனும் ஆகியது.

இதில் இருந்தே அதிர்ஷ்டம் அவுஸ்திரேலியாவுக்கும் துரதிர்ஷ்டம் தென்னாபிரிக்காவுக்கும் எப்படி வேலை செய்தது என்பதனை பார்க்க முடியும்.

2015 ஆம் ஆண்டு 50 ஓவர்கள் கொண்ட உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியிலும் அவுஸ்திரேலிய அணித்தலைவராக இருந்த மைக்கல் கிளார்க் தொடர்ச்சியாக ஏற்பட்ட உபாதை காரணமாக அவரது கிரிக்கெட் பயணத்துக்கே முற்றுப்புள்ளி வைக்க நேரிட்டது.

ஆனால் அவரது அதிர்ஷ்டம் அவரது அணித்தலைமையிலேயே அவுஸ்திரேலிய அணி சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந்திய அணித்தலைவர் கோலியை பொறுத்தமட்டில் அவரது அதிர்ஷ்டம் சிறந்த நிலையிலேயே உள்ளது என்று சொல்லலாம்.

அவர் இலங்கைத் தொடரைக் கைப்பற்றியது மற்றும் ஹிந்தி நடிகை அனுஷ்கா சர்மாவை தன்வசப்படுத்தி வைத்திருத்தல் என்பவற்றிலிருந்தே அவரது அதிர்ஷ்ட உச்சம் தெரிகின்றது.

ஆனால் இலங்கை அணித்தலைவர் மத்தியூசின் அதிர்ஷ்டம் என்னவென்பது இனிவரும் தொடரிலிருந்து பார்க்கலாம்.

விளையாட்டுக்கு திறமை என்பது மிக அவசியம் ஆனால் கொஞ்சமேனும் அதிர்ஷ்டம் இருந்தால் தான் வெற்றியை ருசிக்கமுடியும்.

- க.மதீசன்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org